
KALKI
27.2.2000
ரூ. 5.00

கல்கி



ஹே ராம் – I

ஹே ராம் – II !

'பிரதமர்' சாமுண்டீஸ்வரி!

பாதுகாப்பான முதலீட்டிற்கு

பவர்ஃபைனான்ஸ்

இது ஒரு தமிழக அரசு நிதி நிறுவனம்

13.14%

காலம்	ஆண்டு வட்டி	
	மாதமொரு முறை	மூன்று மாதங்களுக்கு ஒரு முறை
12 மாதங்கள் & 1 நாள்	-	12.12%
25 மாதங்கள்	-	12.63%
36 மாதங்கள், 48 மாதங்கள் & 60 மாதங்கள்	13%	13.14%

18.18%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி
ஆண்டிற்கு 13%)

- இந்நிறுவனம் வங்கிப்பணி சாராத நிதி நிறுவனமாக ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பதிவு எண் : 07.00389 ஆகும்.
- முழுமையான பாதுகாப்பிற்கு CRISIL வழங்கியுள்ள FA+ மதிப்பீடு.
- துவக்கத்திலிருந்து தொடர்ச்சியாக இலாபம் ஈட்டி வருகிறது.
- கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து 20% ஈவுத்தொகை வழங்கி வருகிறது.


மேலும் விபரங்களுக்கு :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)

பதிவு அலுவலகம் : 84, டி.டி.கே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை – 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. தொலைநகலி : 044 - 4982894.
Visit us at : www.tnpowerfinance.com www.tninfrafinance.com

28-9-99 தேதியிட்ட 'எகனாமிக் டைம்ஸ்' இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

"Also available on the Internet" www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com





ஹே ராம் விமர்சனம்!

வன்முறைக்குத் தீர்வு புல்லட் இல்லை என்று காந்திஜி சொன்னதையேதான் கமலும் இந்தப் படம் மூலம் சொல்லியிருக்கிறார். ஒரு சராசரி ஐயங்கார் இளைஞன், தீவிரவாதியாகி, மறுபடி தனது பாதை தவறு என உணர்ந்து, காந்திஜியிடமே வந்து சேருகிறான். கராச்சி, கல்கத்தா, மன்னார்குடி, மும்பை, டெல்லி என்று கதை ராஜதானி எக்ஸ்பிரஸில் போனாலும் பயணம் மூணு மணி நேரம்.

திரைக்கதை, வசனம், டைரக்ஷன், காட்சி அமைப்பு என்று ஒவ்வொன்றிலும் கமலின் ஆழமான ஈடுபாடும், அயராத உழைப்பும் தெரிகிறது. ஏராளமான கதாபாத்திரங்கள். அனைவருமே, மிகையில்லாமல் வெகு யதார்த்தமாக நடித்திருக்கிறார்கள். கமலும், ஷாருக்கானும், ராணிமுகர்ஜியும், வசுந்தராவும், வாலியும் படம் முழுக்க வியாபித்திருக்கிறார்கள்.

பீரியட் பிலிம் என்பதால் ஆர்ட் டைரக்டர் சாபுசிரிலுக்கும், காஸ்டியூம் டிசைனர் சரிகா கமலுக்கும் அதிகப்படியான வேலை. காட்சிகள், அந்தந்த கால கட்டத்தைக் கண் முன்னே நிறுத்துகின்றன. கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் என்கிற ஜாலத்தை பாட்டுக்குப் பயன்படுத்தி, மேஜிக் பண்ணாமல், காட்சிகளோடு இழைய விட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சம்.

மதம் பிடிக்கிற யானை அமைதியாக நிற்பதும், மதம் பிடித்த மனிதர்கள், குரோதத்தில் வெட்டிச் சாய்ப்பதும், கவித்துவமான காட்சி. குருட்டுச் சிறுமி, அனாதையாகி, அவ்வப்போது தீவிரவாதி சாகேத்ராமின் மனசாட்சியைக் குத்துவது மனத்தைக் குத்துகிறது.

"சில பேர் என்னை இங்கேயே இரு என்கிறார்கள். இன்னும் சில பேர் எங்கேயாவது

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

போகச் சொல்கிறார்கள். நான் யார் பேச்சைக் கேட்பது? எனவே கடவுளின் குரல்படி நான் செயல்படுகிறேன்'' என்று காந்திஜி சொல்ல, "அந்தக் கடவுள்தான் என் மூலமாகப் பேசுவதாக ஏன் நினைத்துக் கொள்ளக் கூடாது? போங்கள்... இமாலயத்துக்குப் போய் விடுங்கள்" என்று அகதிகள் தலைவன் கோபப்பட, "நான் போய் விடுகிறேன். அதன்பின் வன்முறை இருக்காது என்று உறுதிமொழி கொடுக்கப்பட்டால்" என்று காந்திஜி சொல்வது... போன்ற ஒருசில காட்சிகளில், அவர் உண்மையிலேயே மகாத்மாதான் என்று இந்தத் தலைமுறையினரையும் நினைக்க வைக்கிறது. நசுருதீன்ஷா.... காந்தியாகவே வாழ்கிறார்.

வசனங்களில், தீவிரவாதப் பிரதிவாதங்கள் நறுக்கு தெறித்தாற்போல வருகின்றன. கண் எதிரே காதல் மனைவி கொடூரமாக சின்னாபின்னப்படுத்தப்பட்டு, ரத்தம் கொப்பளிக்க கழுத்து அறுக்கப்படும் காட்சியில் கமலின் நடிப்பு புதிய சிகரங்களைத் தொடுகிறது.

இந்தக் குரூர பாதிப்பினால் சாகேத் ராம் தீவிரவாதம் நோக்கி திசை திரும்புவது, குடும்பப் பாசம், இயக்கக் கொள்கை இரண்டுக்கும் இடையில் கிடந்து அல்லாடுவது, முன்னணி தீவிரவாதிக்கு மரணப்படுக்கையில் சத்தியம் செய்து கொடுத்து விட்டு, துப்பாக்கியைப் பெறுவது, குடும்ப உறவுகளை காசியில் அறுத்து விட்டு, காந்திஜியைக் கொல்லும் கடமையில் இறங்குவது என்று படிப்படியாக நம்பகத் தன்மையை வளர்க்கும் இயக்குனர் சாகேத் ராம் தீவிரவாதத்தை விட்டு, விலகுகிற கட்டத்தில் அவசரம் காட்டி விட்டார்.

படத்தில் முழுக்க முழுக்க ஆங்கிலம் பேசுகிறார் காந்திஜி. (ஜோக்கிற்காக ஒரு இடத்தில் தப்பாகத் தமிழ் பேசுகிறார்)

மற்ற கேரக்டர்களின் பேச்சிலும் இந்தி, பெங்காலி, ஆங்கிலம் என்று அன்னிய வாடை தூக்கல். சில முக்கியமான காட்சிகளில், மொழிப் பிரச்னை காரணமாக, வசனம் புரியாமல் திண்டாட வேண்டியுள்ளது. சில சமயங்களில் பார்ப்பது வேற்று மொழிப் படமோ என்கிற சந்தேகம் கூட வருகிறது. தமிழரல்லாத கதாபாத்திரங்கள் சிரமப்பட்டு, தமிழ் பேசும் யதார்த்தத்தையும் குறிப்பிட வேண்டும்.

காதல் காட்சிகளில் முத்தம் வரை போவது கமர்ஷியல் நிர்ப்

ரஜினியின் மனம் திறந்த பாராட்டு!

● தேவி தியேட்டர் வளாகத்தில் உள்ள அத்தனை தியேட்டர்களிலும், புதன்கிழமை மாலை மற்றும் இரவுக் காட்சிகள் ரத்து செய்யப்பட்டு, ஹே ராம் படக் காட்சிக்கு ஏற்பாடாகி இருந்தது.

● தேவி, தேவி பாரடைஸ், தேவி பாலா மூன்று தியேட்டர்களிலும், பிரத்யேகக் காட்சி நடைபெற்றது. முதல்வர் கலைஞர் கலந்து கொண்ட விழா, தேவி தியேட்டரில்.

● தேவி தியேட்டர் வெராந்தாவில், வீ சேனல் உட்பட பல டி.வி.காரர்கள், வி.ஐ.பி.களின் வருகைகளையும், அவர்களின் கருத்துக்களையும் 'கட்டு'க் கொண்டிருந்தனர்.

● காரத்தே வீரர் ஹுசைனியின் செக்யூரிடி ஆட்கள் போலீசுடன் சேர்ந்துகொண்டு ரொம்பவே கெடுபிடி பண்ணினார்கள்.

● தியேட்டருக்குள்ளே, திரை முன்பான மேடையில் முன்னேயும், பின்னேயுமாக தலை இரண்டு நாற்காலிகள் மட்டுமே போடப்பட்டிருந்தன. ஒன்றில் கலைஞர் அமர்ந்து கொள்ள, பக்கத்தில் கமல் அமருவார் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது, அங்கே சட்டென்று தோன்றி முதல்வருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டார் ரஜினி.

● வங்கத்துப் பாடகர் அஜய் சக்ரவர்த்தி தமிழ்த்தாய் வாழ்த்தாக, 'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு... வந்தே மாதரம்' என்ற வரிகளைப் பாடினார்.

● கமல், ''தமிழக மக்கள் வேண்டுமானால் அரசியல் காற்றுக்கு ஏற்ப, ஐந்தாண்டுகளுக்கு ஒருதடவை தங்கள் மனத்தை

பந்தம் என்றாலும் கூட படத்தோடு பார்க்கும்போது ஆபாசமில்லை என்பதில் கொஞ்சம் ஆறுதல். படம் முழுக்கவே வன்முறை இருக்கிற போது, சோடா பாக்டரியில் நடக்கும் சண்டை சற்றே சலிப்பூட்டுகிறது.

நகர்ப்புற ரசிகர்கள் நிச்சயம் ரசிப்பார்கள். கிராமத்தில் மொழி நிச்சயம் பிரச்னையாகும். அதையும் மீறி இந்தப் படம் ஜெயித்தால் நாட்டுக்கு நல்லது. தமிழ் சினிமா உலகுக்கு மிக நல்லது!

— எஸ். சந்திரமௌலி

மாற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் தமிழ்த் திரையுலகம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக உங்களுக்கு மிக உயர்ந்த அரியாசனம் அளித்து கௌரவித்து வந்துள்ளது'' என்று கலைஞரைப் பற்றிக் குறிப்பிட்டார்.

• 'ஹே ராம்' திரைக்கதை வசனப் புத்தகத்தைக் கலைஞர் வெளியிட்டு, கமலின் இளையமகள் அக்ஷராவிடம் தருகிறார்... (படம்-நன்றி: தினமலர்)



● கலைஞர் பேசும் போது, கமலை, 'கலைஞானி' என்று குறிப்பிட்டார். நீங்கள் எல்லோரும் ஆவலுடன் காத்திருப்பது, என் பேச்சைக் கேட்க இல்லை; ஹே ராம்! படத்தைக் காணத்தான்! எனவே என் பேச்சைச் சுருக்கமாகவே வைத்துக் கொள்ளுகிறேன்' என்று கலைஞர் குறிப்பிட்டதை சபை கைதட்டி ரசித்தது.

● ஹே ராம் படத்தின் திரைக்கதை – வசன புத்தகத்தைக் கலைஞர் வெளியிட, கமலின் இரண்டாவது மகள் அக்ஷரா பெற்றுக்கொண்டார். புத்தகத்தின் விலை ரூபாய் இருநூறு.

● நல்லதங்காள், நள சரித்திரம் என்று படங்கள் வந்து கொண்டிருந்த காலத்தில், தியேட்டர்களில் பாட்டுப் புத்தகம்தான் விற்பார்கள். ஆனால், பராசக்தி வெளியான போது, வசனங்களுக்கு ஏகப்பட்ட வரவேற்பு. படத்தின் தயாரிப்பாளர், ''வசனங்களைப் புத்தகமாய்ப் போட்டால், படம் ஓடாது'' என்று சொல்லி மறுத்துவிட, ஸ்ரீமகள் கம்பெனியார், தியேட்டரில் படத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்து மொத்த வசனத்தையும் எழுதி, புத்தகமாக வெளியிட்டு, ஏராளமான லாபம் சம்பாதித்தனர் என்றார் கலைஞர். 'மனோகரா' படத்தின் வசனங்களைப் புத்தகமாகப் போட்டு, விற்றபோது கிடைத்த லாபத்தில் ஆரம்பிக்கப் பட்டதுதான் முரசொலி அச்சகம் என்ற தகவலையும் அவர் குறிப்பிட்டார்.

● இடைவேளையின்போது, இளையராஜா தொடங்கி, ராணி முகர்ஜி, வசுந்தரா, கலை இயக்குநர் சாபு சிரில், ஸ்டண்ட் மாஸ்டர் விக்ரம் தர்மா என்று அனைவரையும் மேடைக்கு அழைத்து, முறைப்படி அறிமுகம் செய்து வைத்தார் கமல்.

● நிகழ்ச்சிக்கு முன்னதாக, படம் சம்பந்தப்பட்ட அனைவரும் கலைவாணர் அரங்கத்திலிருந்து, தேவி வளாகம் வரை, ஹே ராம் படத்தில் பயன்படுத்திய பழைய மாடல் கார்களில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

● ஹே ராம் பார்த்துவிட்டு, ரஜினி கமலிடம் சொன்னது என்ன தெரியுமா? ''நான் சும்மா சிகரெட்டை தூக்கிப் போட்டு ஏதோ பண்ணிட்டு இருக்கேன். ஆனா, கமல், நீங்க எங்கேயோ போயிட்டீங்க!''

தேவி தியேட்டரிலிருந்து: **கௌதம் ராம்**

'பிரதமர்' சாமுண்டீஸ்வரி!

நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. "இந்த அரசு எல்லா முனைகளிலும் தோற்று விட்டது; இனி ஒரு நிமிடம் கூட பதவியில் இருக்கக் கூடாது!" என்றார் எதிர்க்கட்சித் தலைவர். பிரதமர் தமது நீண்ட பதிலில் அரசு பல்வேறு பிரச்னைகளில் எடுத்த நடவடிக்கைகளை நிதானமாக விவரித்தார். தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது; அரசு பிழைத்தது!

'பா.ஜ.க. கூட்டணி அரசு இரண்டாவது முறையாக இப்போதுதானே பொறுப்புக்கு வந்து முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறது. 'நம்பிக்கையில்லாத் தீர்மானம் எப்போது கொண்டு வரப்பட்டது' என்று மூளையைக் கசக்குகிறீர்களா.... ரிலாக்ஸ்! மேலே சொல்லப்பட்ட விவாதங்கள், தீர்மானங்கள் இடம்பெற்றது சென்னை பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் நடத்திய 'மாதிரி' பாராளுமன்றத்தில்தான். எதற்காக 'மாதிரி' பாராளுமன்றம் நடத்தப்பட்டது?



• பேராசிரியர் பாலு



• கவுதமன் : எதிர்க்கட்சித் தலைவர்



• சுசீலா மாரியப்பன்

"பாராளுமன்ற ஜனநாயகத்தில் இளைஞர்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கவும், எதிர்காலத்தில் அவர்களைச் சிறந்த பார்லிமென்டேரியன்களாக உருவாக்கும் நோக்கத்துடனும், மத்திய அரசின் பாராளுமன்ற விவகாரத் துறை, பல்கலைக் கழகங்கள் பங்கு கொள்ளும் 'மாதிரி பாராளுமன்ற போட்டிகளை' நடத்தி வருகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள பல்கலைக்கழகங்கள் போட்டியில் கலந்துகொண்டு மாநிலத்தில் சிறந்த அணியைத் தேர்ந்தெடுக்கும். முதல் கட்டப் போட்டி இப்போது நடந்து முடிந்திருக்கிறது. தமிழகத்தில் ஐந்து பல்கலைக் கழகங்கள் போட்டியில் பங்குகொண்டன. ஆனால் சென்னை பல்கலைக்கழக அணி நடத்திய 'மாதிரி பாராளுமன்றம்'தான், சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இனி தேசிய அளவில் தில்லியில் நடக்கப் போகும் தேசியப் போட்டியில் சென்னை பல்கலைக் கழக மாணவ, மாணவிகள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்" என்றார் மாணவர் ஆலோசனை மைய இயக்குனர் சுசிலா மாரியப்பன். இந்தப் போட்டிக்கான பயிற்சி ஒரு வாரம் தான் நடந்ததாம். "மாணவர்களின் ஆர்வம் வியக்க வைத்தது. பல்வேறு பிரச்னைகளில் அவர்களுக்குப் பிரமாதமான விழிப்புணர்வு இருப்பது புரிந்தது" என்றார் சுசிலா மாரியப்பன். தேசியப் போட்டிக்கு மாணவர்களை தயார்படுத்துவதில் இப்போது பிஸியாக இருக்கிறார் இவர்.

மாதிரி பாராளுமன்றத்தைத் துவக்கி வைத்த துணை சபாநாயகர் பரிதி இளம்வழுதி மிகவும் ஆச்சர்யப்பட்டுப் போனார். "கலாட்டா கிடையாது; கூச்சல் கிடையாது; வெளியேற்றம் கிடையாது. ஆபாசப் பேச்க்



• மாதிரி பார்லிமெண்ட் நடந்த போது...

கள் கிடையாது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கல் கிடையாது. போட்டிக்காக நடத்தப் பட்டாலும் நல்ல எடுத்துக்காட்டாக அமைந்து விட்டது. மாணவ, மாணவிகள் தீர்மானங்களை முன்வைத்துப் பேசிய விதமும், விவாதங்களில் பங்குகொண்ட போது வெளிப்படுத்திய கருத்துக்களும் பாராட்டத்தக்கவை'' என்றார். துவக்கி வைத்து விட்டு விடைபெற நினைத்தவரை ஒன்றரை மணி நேரம் உட்கார வைத்து விட்டார்கள் மாணவ, மாணவிகள்!

எந்த பேப்பரிலும் ரிப்போர்ட் ஆகாத அந்த நடவடிக்கைகள் இதோ :

''நமது நாட்டில் ஒரு சிறு கும்பல் கலாசாரத்தைப் பற்றியும், பண்பாட்டைப் பற்றியும் தீர்மானிப்பது விந்தையாக இருக்கிறது. மதிப்பிற்குரிய போப் நமது நாட்டிற்கு வர இருந்த போதும் சரி, பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் டீம் வர யத்தனித்த போதும் சரி, இந்தக் கும்பல் எதிர்ப்பைத் தெரிவித்து சர்ச்சையை உண்டாக்கியது. இப்போது 'வாட்டர்' திரைப்படத்தின் படப்பிடிப்பை வன்முறையைக் கையாண்டு நிறுத்தியிருக்கிறார்கள். இந்தப் போக்கை நோக்கும் போது, ஆளும் கட்சியின் முழு ஆதரவும் இந்த வன்முறைக் கும்பலுக்கு இருக்கிறதோ என்று சந்தேகம் எழுகிறது. இது தவிர, 'வாட்டர்' படத் தயாரிப்பாளர் தமது படத்தின் ஸ்கிரிப்டை முறைப்படி கொடுத்து அனுமதி பெற்றுள்ளார். இந்த நிலையில் மீண்டும் அதைப் பார்த்து படப்பிடிப்புக்கு அனுமதி தருவது பற்றித் தீர்மானிப்பது கொஞ்சமும் சரியல்ல; பிரதமர் சரியான விளக்கத்தைத் தர மறுக்கும்பட்சத்தில் 'வாட்டர்' படத்தின் படப்பிடிப்பை தடுத்து நிறுத்தியதில் மத்திய அரசுக்கும் பங்கு இருக்கிறதோ என்றுதான் மக்கள் நினைப்பார்கள்'' – ஆவேசமாகப் பேசி அமர்ந்தார் எதிர்க்கட்சித் தலைவர். பிரதமர் என்ன பதில் சொல்லப் போகிறாரோ என்று ஆர்வத்தோடு அவை காத்திருந்தது. எழுந்தார் பிரதமர்.

''இந்த அரசு வன்முறையை என்றும் ஆதரிக்காது. படப்பிடிப்பைத் தடைசெய்த கும்பலுக்கு நிச்சயம் எங்களுடைய ஆதரவு கிடையாது. கருத்துச் சுதந்தரத்தை முழுமையாக ஆதரிப்பவர்கள் நாங்கள். சட்டம் – ஒழுங்கு மாநிலப் பிரச்னை. அவசியம் ஏற்பட்டால் மத்திய அரசு தலையிடும்.

''வாரணாசியில் நடந்த சம்பவங்களைப் பற்றி மாநில அரசிடம் தகவல்கள் கேட்டுள்ளோம். படத்தின் ஸ்கிரிப்டை மீண்டும் பரிசீலித்ததற்கு எந்த உள்நோக்கமும் கிடையாது. ஒரு குறிப்பிட்ட பிரிவினரைப் புண்படுத்தும் காட்சிகள் ஏதேனும் இருக்கிறதா என்று மீண்டும் ஒருமுறை உறுதிசெய்து கொள்ள நினைத்தது அரசு. அவ்வளவுதான்!'' – அமர்ந்தார் பிரதமர். அடுத்து எழுந்தார் மற்றொரு உறுப்பினர்.

''மிஸ்டர் ஸ்பீக்கர்! வழக்கறிஞர்களை கலந்தாலோசிக்காமலேயே இந்த அரசு சிவில் சட்டத்தில் மாறுதல்களை கொண்டு வர நினைக்கிறது. இது கொஞ்சமும் சரியல்ல. நாடு முழுவதும் நீதித்துறை பிரமுகர்களை அணுகி அவர்கள் கருத்தைக் கேட்டுத்தான் மாறுதல்கள் செய்ய வேண்டும். சட்ட அமைச்சர் தகுந்த விளக்கத்தை

இந்த அவைக்குச் சொல்ல வேண்டும்" - எதிர்க்கட்சி உறுப்பினரின் இந்தக் கேள்விக்கு பதில் சொன்னார் சட்ட அமைச்சர்.

"பாராளுமன்றத்தில் இதுபற்றி முழு விவாதம் நடத்திய பிறகே இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. விவாதத்தின்போதே மாண்புமிகு உறுப்பினர்கள் யோசனைகளை தெரிவித்திருக்கலாம். ஏழைகளுக்கு விரைவாக நீதி கிடைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். சட்டத் திருத்தம் கெஜட்டில் இடம்பெறப் போகும் இந்தச் சமயத்தில், மீண்டும் விவாதம், கருத்துக்களைக் கேட்பது என்பது சரிப்பட்டு வராது."

''கார்கில் பிரச்னையை அரசு சமாளித்தவிதம் சரியல்ல; சுப்ரமணியம் கமிட்டி அறிக்கையை எப்போது தாக்கல் செய்யப் போகிறீர்கள்?'' என்று ஆவேசமாகக் கேட்டார் இன்னொரு எதிர்க்கட்சி உறுப்பினர். அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியாவின் நிலை பற்றிய விளக்கமும் கேட்கப்பட்டது.

"தாய்ப்பாலை பரிசோதித்தால் அது விஷத்தன்மை வாய்ந்ததாக இருப்பது தெரியவந்துள்ளது. எங்கும் கலப்படம்; எதிலும் கலப்படம். இவற்றைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது இந்த அரசு?'' - ஆவேசமாகக் கேட்டார்கள் உறுப்பினர்கள். தடுமாறினார்கள் அமைச்சர்கள்.

கேள்வி நேரம் முடிந்து அடுத்த அலுவல் துவங்கும் முன் இருக்கும் 'ஜீரோ' நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ''அரசியல் சட்டத்தைத் திருத்த குழு அமைக்க வேண்டியதன் அவசியம் என்ன?'' என்று கேட்டார் எதிர்க்கட்சித் துணைத் தலைவர். ''எண்பதுக்கும் மேற்பட்ட திருத்தங்கள் கொண்டு வந்தாகிவிட்டது. எனவே அடிப்படையைத் தொடாமல் காலத்திற்கேற்றபடி சின்னச் சின்ன மாற்றங்களைச் செய்தே ஆக வேண்டும். மக்களுக்காகத்தான் சட்டம்; மாற்றாமல் வைத்துக் கொள்ள அது ஒன்றும் பகவத் கீதையோ அல்லது பைபிளோ அல்ல என்றார் 'பிரதமர்' தமது பதிலில். இதெல்லாம் முடிந்து இறுதியில் நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

மாணவர் பார்லிமென்டில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பதினான்கு பேர். பன்னிரண்டு பேரைக் கொண்ட எதிர்க்கட்சி; தவிர மூன்றாவது அணியைச் சேர்ந்தவர்கள் மூன்று பேர். பத்திரிகையியல், அரசியல் விஞ்ஞானம், பொருளாதாரம் என்று பல துறைகளிலிருந்து மாணவ, மாணவிகள் ஆக்டிவ்வாக பங்குகொண்டாலும் சட்ட இயல் துறை மாணவர்கள்தான் அதிக அளவில் பங்குகொண்டனர். ''சபாநாயகர்'' அபர்ணா, ''பிரதமர்'' சாமுண்டீஸ்வரி, ''எதிர்க்கட்சித் தலைவர்'' கௌதமன் ஆகியோர் சட்ட மேல்படிப்பு (எம்.எல்.) படிப்பவர்கள். துறைத் தலைவர் டாக்டர் என். பாலு அளித்த ஊக்கத்தை மறக்காமல் குறிப்பிடுகிறார்கள் இவர்கள்.

'மாதிரி' பாராளுமன்றப் போட்டியில் தமிழ்நாட்டின் சாம்பியனாக தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை பல்கலைக்கழக மாணவ, மாணவியர் டீம், மார்ச் மாதம் தில்லியில் நடக்க இருக்கும் தேசியப் போட்டிக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. சென்னை பல்கலைக்கழகத்துக்கு தேசிய சாம்பியன் பட்டத்தைப் பெற்றுத் தர பேராசிரியர் பாலுவும், சுசிலா மாரியப்பனும் முழுமூச்சாக மாணவர்களை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். தேசிய அளவில் முதலிடம் பெறும் பல்கலைக்கழக அணிக்கு, நமது பாராளுமன்றத்திலேயே 'மாதிரி' கூட்டம் நடத்தும் அரிய வாய்ப்பு கொடுக்கப்படுமாம்!

''பாராளுமன்றம் நடக்கும்போது நேராகப் பார்த்த அனுபவம் உண்டா?''

''இதுவரை இல்லை. தொலைக்காட்சியில் ''லைவ்வாக'' காட்டுகிறார்களே'' என்கிறார் ''பிரதமர்'' சாமுண்டீஸ்வரி.

''உங்கள் 'மாதிரி' பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் வளமையான வாதத்துக்கு ஆளும் கட்சி 'வழ, வழா' பதில் சொல்லி நழுவி இருக்கிறதே?''

''அதுவும் யதார்த்தத்தின் பிரதிபலிப்புத்தானே!'' என்று சிரித்தார் சாமுண்டீஸ்வரி.

— ப்ரியன்

அட்டையில் : 'பிரதமர்' (குல்லாய் நம் கம்ப்யூட்டர் கைவண்ணம்) சாமுண்டீஸ்வரி

படங்கள் : ராஜன்

உ
சிவமயம்



குடவாசல் வட்டம் கருவேலியில் எழுந்தருளி இருக்கும்

ஸ்ரீ சர்வாங்க நாயகி ஸமேத ஸ்ரீ சற்குணேஸ்வர ஸ்வாமிக்கு

4.3.2000 சனிக்கிழமை

மகா சிவராத்திரிக்கு விசேஷ அபிஷேகம், ஆராதனை

அப்பர் சுவாமிகளால் பாடல் பெற்ற கருவிலி என்ற கருவேலி மிகப் பெரிய க்ஷேத்திரம். இப்புண்ணிய க்ஷேத்திரம் இந்திரன் பூஜை செய்தும், ஸ்ரீ உருத்திரகணங்கள் பூஜித்தும் பெயர் பெற்ற ஸ்தலம்.

கருவேலியில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீசற்குணேஸ்வர ஸ்வாமிக்கு நிகழும் பிரமாதி வருஷம் மாசி மாதம் 21-ம் தேதி 4.3.2000 சனிக்கிழமை நான்கு காலம் **மஹாசிவராத்திரி அபிஷேகமும் தீபாராதனையும்** அதிவிமரிசையாக நடக்கிறது.

மேலும் அனுபூதி அருட்செல்வர், சொற்கொண்டல் பிரஸங்கபூஷணம்
சென்னை திரு. எம்.ஆர். சேஷாத்திரி அவர்களின் சிறப்பு சொற்பொழிவுகள் கீழ்கண்டபடி கோவில் வளாகத்தில் 9 நாட்கள் நடக்கிறது. தினம் மாலை 5 மணிக்கு தொடங்கும்.

பிப். 28	திங்	"எழில் உதயம்" (அபிராமி அந்தாதி)
பிப். 29	செவ்	"சிவபுராணம் அருளிய கவிராஜன்" (மாணிக்கவாசகர்)
மார்ச் 1	புத	"மஹாபாரதத்தில் மூன்று விச்வரூப காக்ஷிகள்"
மார்ச் 2	வியா	"அருள்புரி முறுவல்" (தேவாரம், திருவாசகம்)
மார்ச் 3	வெள்	"பட்டினத்தார் பாராட்டிய சிவத்தொண்டர் மூவர்"
மார்ச் 4	சனி	"மஹா சிவராத்திரி மாண்பும் சிவபூஜா பயனும்"
மார்ச் 5	ஞாயிறு	"ஸ்ரீ சீதா ராம திருக்கல்யாணம்"
மார்ச் 6	திங்	"ஸ்ரீ மீனாக்ஷி திருக்கல்யாணம்"
மார்ச் 7	செவ்	"வெளியான ரஹஸ்யம்" (வள்ளி, தேவஸேனா – முருகன் திருக்கல்யாணம்)

ஆஸ்தீக மெய்யன்பர்கள் சிவராத்திரி வைபவத்திலும் மற்றும் சொற்பொழிவுகளிலும் கலந்து கொண்டு சிவனருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
Dr. V. கிருஷ்ணமூர்த்தி, ப. தர்மகர்த்தா
மற்றும்
ஸ்வாமி சச்சித் ஆனந்தன், நிர்வாகிகள்,
கிராமவாசிகள்.

ஸ்ரீ சற்குணேஸ்வர ஸ்வாமி
கோயில் நிர்வாகக் குழு,
6A வாரன் ரோடு, மயிலை,
சென்னை – 600 004.

கருவேலி : கும்பகோணம் – பூந்தோட்டம் சாலையில் கூந்தலூருக்கு வடக்கே ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. கோவில் தொலைபேசி எண் : (04366) - 73900

அழகி அசைபோடுகிறார்!

"பழைய காலத்து கணக்குப் போடும் மிஷினையும், இப்போதைய லேட்டஸ்ட் கம்ப்யூட்டரையும் ஒப்பிடுவீர்களா என்ன! என்னையும், சமீப கால மிஸ் இந்தியா, மிஸ் வோர்ல்டு அழகிகளையும் ஒப்பிடுவது அப்படிப்பட்ட அபத்தம்தான்" என்கிறார் அஞ்சனா குதியலா. இவர் 1975-ம் வருடத்தில் மிஸ் இந்தியாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, உலக அழகிப் போட்டியில் கலந்து கொண்டவர்.

1975-ம் ஆண்டு, டெல்லியில் நடந்த அழகிப் போட்டியில் மிஸ் டெல்லியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, மும்பையில் நடைபெற்ற மிஸ் இந்தியா போட்டியில் கலந்து கொள்வதற்காகப் போனேன். எனக்காக, பிரத்யேக உடை எதுவும் அவசியமில்லை என்று கருதியதால், என் அம்மாவுடைய புடைவை ஒன்றை கட்டிக்கொண்டு போக முடிவெடுத்தேன். ஆனால், என் அப்பா, "அகில இந்திய அளவில் அழகிப் போட்டியில் கலந்து கொள்ளப் போகும்போது புதிய புடைவை கட்டிக்கொண்டு போக வேண்டும்" என்று சொல்லி, புதுப் புடைவை ஒன்று வாங்கிக் கொடுத்தார். அந்த பிங்க் மற்றும் கிளிப் பச்சை நிற தென்னிந்திய பட்டுப் புடைவையைத்தான் தான் போட்டியின்போது கட்டிக் கொண்டு போனேன். ஒரு சிநேகிதியிடமிருந்து ஹை ஹீல்ஸ் செருப்பு இரவல் வாங்கிக் கொண்டேன். அதற்கு முன் ஹை ஹீல்ஸ் அணிந்து



• அஞ்சனா குதியலா : • அன்றும்...



• ...இன்றும்

பழக்கமில்லை என்பதால், நடக்க ரொம்பவும் தடுமாறினேன்.

அழகிப் போட்டியில் மிஸ். இந்தியாவாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், எனக்கு கொடுக்கப்பட்ட பரிசுப் பொருள்களைச் சொன்னால் சிரிப்பீர்கள்! ஆம், ஒரு ஐஸ் பாக்ஸ், ஒரு பிரஷர்குக்கர், நான்-ஸ்டிக் ஐட்டங்களின் செட்! அப்புறம் பரிசுக் கூப்பன்கள்! நான் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஆண்டுகளுக்குப் பின், அழகிப் போட்டியில் மிஸ். யங் இந்தியா அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பூனம் தில்லான். பின்னர் சினிமாவில் நுழைந்து பிரபலமானவர். அவர், "அஞ்சனா! எனக்காவது பரிசாக ஒரு டீ.வி. கொடுத்தார்கள்; உன்னை பிரஷர்குக்கர் கொடுத்து அனுப்பி விட்டார்கள்" என்று இண்டலடிப்பார்.



• இவ்வாண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அழகிகள்

சமீபத்தில் டெலிவிஷனில் மிஸ் வேர்ல்டு போட்டியைப் பார்த்து விட்டு என் மகன், "ஏம்மா! நீ கூட நீச்சல் உடையணிந்து, இப்படித்தான் மேடையில் நடந்து வந்தாயா? என்று கேட்டான். "அப்போதெல்லாம் நீச்சல் உடை அணிந்து மேடையில் வலம் வரும் வழக்கம் இல்லை" என்று நான் சொன்னபோது அவனால் நம்ப முடியவில்லை. ஆம்! எங்களை, அழகிப் போட்டி நடத்திய பெமினா பத்திரிகை ஆபீசுக்கு வரவழைத்து, நீச்சல் உடையில் புகைப்படமெடுத்து, அதை, போட்டி நடுவர்களிடம் கொடுத்து விடுவதுதான் அப்போதைய வழக்கம்.



• சுஷ்மிதாசென்



• ஐஸ்வர்யா ராய்

மிஸ் வேர்ல்டு போட்டிக்காக லண்டன் போக வேண்டும் என்பது கூட எனக்குப் பெரிதாய்த் தோன்றவில்லை. காரணம் அப்போது எனக்குப் பரீட்சை. ஜர்னலிசம் மாணவியான என் லட்சியம், சிறந்த பத்திரிகையாளர் ஆக வேண்டும் என்பதுதான்.

போட்டிக்கு பதி

னைந்து நாட்களுக்கு முன்பு பெமினா இதழின் ஆசிரியர் விமலா பாட்டீல், ''போட்டி நெருங்கிக்கொண்டிருக்கிறது. தயார்படுத்திக் கொள்'' என்றார். ''எனக்குப் பரீட்சை இருக்கிறதே'' என்று நான் சொன்னபோது, ''அதைப் பற்றிக் கவலைப் படாதே! நான் கல்லூரி நிர்வாகிகளிடம் பேசி, பரீட்சை எழுதாமல் இருக்க அனுமதி பெற்றுத் தருகிறேன்'' என்றார்.

ஆனாலும், விடாப்பிடியாக, கண் விழித்துப் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தேன். பரீட்சையை முடித்து விட்டுத்தான் லண்டன் புறப்பட்டேன். விமலா பாட்டீல், பியூட்டி பார்லருக்குப் போய் அழகுபடுத்திக் கொள்ள சொல்லிக் கொடுத்தார். முன்னாள் மாடல் அழகியான எஸ்தர் மத்தியாஸ் நடத்தி வந்த பயிற்சிப் பள்ளியில், அழகிப் போட்டியின் போது எப்படி நடந்து வர வேண்டும், எப்படி உடையணிந்து வரவேண்டும் என்பது போன்ற விஷயங்களைக் கற்றுக் கொள்ளும்படியும் ஆலோசனை சொன்னார். பரீட்சை நன்றாக எழுத வேண்டும் என்கிற நிலையில் அவரது ஆலோசனைகளை நான் ஏற்றுச் செயல்பட நேரமில்லை.

விமலாபாட்டிலே எனக்குத் தம்முடைய மூன்று நல்ல புடைவைகளைக் கொடுத்து உதவினார். என்னிடமிருந்த ரவிக்கைகளில் அதற்கு மேட்ச்சாக எதுவுமில்லை. என் அம்மா தன் ரவிக்கைகளைக் கொடுத்தார். சில சிநேகிதிகளுடைய ரவிக்கைகளும் கிடைத்தன. அளவு சரியாக இருந்தால், கலர் மேட்ச்சாகவில்லை. கலர் சரியாக இருந்தால், அளவு சரியில்லை. கடைசியில், புடைவைக்கு மேட்ச்சான ரவிக்கைகளை, என் அளவுக்கு ஆல்டர் செய்து கொண்டேன். ரொம்பப் பரிதாபப்பட்டு, என் அப்பாவும் பிரபல டிசைனர் ரிது குமாரின் கடையிலிருந்து ஒரு புடைவையை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார். (அந்த ரிதுகுமார் இன்று அழகிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் பெண்களுக்கு பிரத்யேக உடை டிசைன் செய்திருக்கிறார்.) அந்தப் புடைவையின் விலை எவ்வளவு தெரியுமா? ஐந்நூறு ரூபாய்!


லண்டனில் போய் இறங்கி, ஹோட்டலுக்குப் போனவுடன் காப்பிக்கு ஆர்டர் கொடுத்தேன். காப்பியுடன் கூடவே அதிர்ச்சியும் வந்தது. ஆம்! தங்கவும், சாப்பாடும் தான் போட்டியாளர்களுக்கு இலவசம். மற்ற செலவுகளை நீங்களே பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார்கள். காப்பி இருபது ரூபாய்! செலவுக்கு என்று எனக்குத் தரப்பட்ட பணம் ஐந்நூறு ரூபாய். அப்பா கொஞ்சம் கூடுதலாகத் தந்திருந்ததால் சமாளித்தேன்.

போட்டி நடத்தியவர்கள், ''மிஸ். இந்தியா! நீங்கள் ஏன் நீச்சல் உடையில் தோன்றவில்லை?'' என்று என்னைக் கேட்டார்கள். ''என்னிடம் நீச்சல் உடையே இல்லை! இப்போது என் கையில் உள்ள பணத்துக்கு புதிய நீச்சல் உடை வாங்குவதும் சாத்தியமில்லை. அதுவுமில்லாமல், நீச்சல் உடையில் மேடையில் தோன்ற வேண்டும் என்பதும் எனக்குத் தெரியாது'' என்றேன். கடைசியில், நான் கொண்டு போயிருந்த மிடி ஃப்ராக் ஒன்றை, நீச்சல் உடைக்குப் பதிலாக அணிந்து கொண்டு மேடையில் தோன்றினேன். கிரீடம் எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கே இல்லை. பரிசுப் பொருள்களின் குவியல்கள் ஏதுமில்லாமல் வெறும் கையுடன் டெல்லி திரும்பினேன். கல்யாணம் பண்ணிக் கொண்டு செட்டிலாகி விட்டேன்.

இன்று நடக்கும் அழகிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் அழகிகளுக்குப் பின்னால், உடை டிசைனர், பல் டாக்டர், உடற்பயிற்சியாளர், டயடிஷியன், ஹேர் ஸ்டைலிஸ்ட் என்று ஒரு படையே திரளுவதைப் பார்க்கிறபோது, இந்த மாதிரி எந்தவிதமான எக்ஸ்டிரா உத்திகளும் இல்லாமல் நான் நானாகவே போட்டியில் கலந்து கொண்டு வென்ற சந்தோஷத்தை மனசுக்குள் அசை போடுகிறேன்!''

— அர்ஜுன்

நன்றி : ஹிந்துஸ்தான் டைம்ஸ் மேகஸின்



''சே... நாட்ல மெடிக்கல் காலேஜ் ரொம்ப பெருத்துப் போயிட்டுது போலிருக்கு!''

''எப்படிச் சொல்றே?''

''இன்னிக்குக் காலைல ஒருத்தர், கையில ஸ்டெத்தோடு 'காய்ச்சல் பார்க்கறது... வயித்து வலி பார்க்கறது'ன்னு கூவிக்கிட்டே வந்தார்!''

— புளியரை கணேசன்

இந்த வீட்டு மனையை வாங்கச் சரியான நேரம்

(கீழே கொடுத்துள்ள 5 காரணங்களுக்காகவே)

சிந்து நகர், சென்னை–600 056

பூந்தமல்லி பை-பாஸ் அருகே – CMDA அப்ரூவ்டு மனைகள். (நெ. 65/99.)

அமைந்துள்ள இடம் ✔

மாநகருக்கு மிக அருகில் ✔

பாதுகாப்பு ✔

முதலீடு செய்யும் பணத்துக்கு தகுந்த மதிப்பு ✔

வேகமாக உயரும் நில மதிப்பு ✔



சிறப்பு அம்சங்கள்

● உடனே வீடு கட்டலாம் / அருகில் வீடுகள். ● கோயம்பேட்டிலிருந்து 10 நிமிட பயணம். ● அண்ணா நகரிலிருந்து 15 நிமிட பயணம். ● சுலபமான மூன்று வழிப் பாதைகள். கிண்டி, செயிண்ட்தாமஸ் மவுண்ட் போரூர் 100 அடி சாலை. அரும்பாக்கம், கோயம்பேடு, மதுரவாயில் 100 அடி சாலை / அம்பத்தூர், ஆவடி 60 அடி சாலை. ● சென்னை-பெங்களூர் (NH4) தேசிய நெடுஞ்சாலை. ● கோயம்பேட்டில் அமைந்துவரும் பிரம்மாண்ட பஸ் நிலையம். ● தாம்பரம்-வானகரம் புறவழிச் சாலை. ● மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் தாராளமான பஸ் வசதி. ● மெடிக்கல், டெண்டல், இஞ்சினியரிங், கேட்டரிங் ஆர்ட்ஸ் கல்லூரிகள் மிக அருகில். ● சுவையான / மிருதுவான நிலத்தடிநீர். ● **சுத்தமான பத்திரம் / நம்பகமான நிறுவனம். ● உடனடி பத்திரப் பதிவு.**

BLBயின் உறுதி செய்யப்பட்ட சேவை (விற்பனைக்கு பின்)

● 5 வருடங்களுக்கு மனை பாதுகாப்பு சேவை. ● பத்திரப் பதிவுக்கு பின் தனிப் பட்டா ஏற்பாடு (பட்டா செலவு தனி.) ● வீடு கட்டும் பட்சத்தில் தரமான எஞ்சினியர்களை கொண்டு BLB மூலமாக கட்டுமானப் பணி ஏற்பு. ● வீடு கட்ட கடன் வசதி ஏற்பாடு.

மனையை பார்வையிட இலவச வாகன வசதி தினமும்
காலை 7.00 மணி, 11.00 மணி மற்றும் மாலை 3.00 மணி

PHONE : 4357721 / 4357731 ● CELL : 98400-44018

BLB — PLEDGED TO ETHICS

BLB Estates (P) Ltd.

S-3, "Ramana Flats", Rathna Nagar, Off : Anna Salai,
Teynampet, Chennai - 18. (Behind Apollo Cancer Hospital)
R. BHASKAR - Managing Director

வர்த்தகத்தில் நேர்மை; பணியில் பொறுப்பு

கலைஞர் எழுதாக் கடிதங்கள்

கலைஞர் இப்போதெல்லாம் 'முரசொலி'யில் உடன்பிறப்புக்குக் கடிதங்கள் எழுதுவதோடு, அவ்வப்போது பிரதமர் வாஜ்பாய்க்கும் எழுதுகிறார். மூப்பனாருக்கு எழுத மாட்டாரா?

1

அன்புள்ள மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கு,

வணக்கம்.

எப்போது நீங்கள் அ.இ.அ.தி.மு.க. அணிக்கு ஆதரவு தெரிவிக்க ஆரம்பித்தீர்களோ, அப்போது முதல் தி.மு.க. ஆட்சியைக் குறைகூறி வருவதோடு, உங்கள் அணித் தலைவி அம்மையார் அவர்கள் மாறிவிட்டதாகச் சொல்லி வருகிறீர்கள். எந்த விஷயத்தில் மாறி விட்டார் என்று நீங்கள் சொல்லவில்லை. உடையிலா என்றால் இல்லை. தலையில் கூட நடுவகிடுதான் எடுத்திருக்கிறார்; இடதுசாரியை ஆதரித்தாலும் இடது வகிடு எடுக்கவில்லை. சொகுசு வேனில் வழக்கம் போல முன்புறம் அமர்ந்துதான் சுற்றுப்பயணம் செய்கிறார். முன்பு தமக்கு மட்டுமே நாற்காலி போடச் செய்து, மற்ற தலைவர்களை, தந்திக் கம்பங்கள் போல மேடையில் நிற்கச் செய்வார். நீங்கள் சொல்வது போல் மாறி விட்டார் என்பது இந்த விஷயத்தில்தானோ? இப்போது எல்லா தலைவர்களுக்கும் – ஜனதா தள் தலைவர் ஜி.ஏ. வடிவேலுவுக்குக் கூட! – மேடையில் இடம்கொடுத்திருக்கிறார். இவை எல்லாம் அவர் மாறிவிட்டதன் அறிகுறிகள் என்றால், எனக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

அம்மையார் திருந்தி விட்டார் என்று நீங்கள் சொல்லவில்லை. சொன்னால் அடுத்த மேடையில் உங்களுக்கு உட்கார இடம் கிடைக்காது.

எந்த அணியில் நீங்கள் இருந்தாலும், நீங்கள் என்றும் என் இனிய நண்பராகவே இருப்பீர்கள் என்று நம்பிக்கையுடன் இருக்கும்,

தங்கள் உண்மையுள்ள
கருணாநிதி.

2

என் இனிய நண்பர் கலைஞர் அவர்களுக்கு,

வணக்கம்.

அம்மையார் மாறி விட்டார் என்று நான் ஒவ்வொரு மேடையிலும் கூறி வருவது, உங்களுக்குச் சிரிப்பதா அழுவதா என்றே முடிவு எடுக்க இயலாதபடி, குழப்பத்தைத் தந்திருப்பது என்னை வியப்பில் ஆழ்த்தவில்லை. எப்போது பா.ஜ.கவை ஆதரிப்பது என்று முடிவெடுத்தீர்களோ, அப்போதே உங்களுக்குக் குழப்பம் ஆரம்பித்து விட்டது. எப்போது ஆர்.எஸ்.எஸ். சமூக – கலாசார அமைப்பு என்று முதலில் சொல்லி, மறுநாளே பிரதமருக்குக் கடிதம் எழுதினீர்களோ அப்போது குழப்பம் முற்றி விட்டது. அடுத்து, என்றைக்கு எனக்கு நிலவரி பாக்கி நோட்டீஸ் அனுப்பச் செய்தீர்களோ, அப்போது குழப்பத்தின் உச்சகட்டத்தை அடைந்து விட்டீர்கள். அந்த மாதிரி வேளைகளில் நீங்கள் அழுதாலும் சிரித்தாலும் ஒரே போலத்தான் இருக்கும். இன்னும் சில மாதங்களில் தில்லி அம்மையார் சோனியாவுடன் த.மா.கா. இணையத்தான் போகிறது என்று பேசிக்கொள்கிறார்கள். அப்போது நீங்கள் அழப் போகிறீர்களா, சிரிக்கப் போகிறீர்களா என்பதை நினைத்தால் எனக்கு வேதனையாக இருக்கிறது!


தங்கள் உண்மையுள்ள,
ஜி. கே. மூப்பனார்.

3

அன்புள்ள மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கு,

வணக்கம்.

முடிவு எடுப்பதைப் பற்றி நீங்கள் எழுதியிருப்பதைப் படித்தால், (மறுபடியும்),



எனக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

முன்பு போயஸ் தோட்டத்திலும், பிறகு லாயிட்ஸ் சாலை அலுவலகத்திலும் (சதி) ஆலோசனை நடத்தி வந்த அம்மையார், இப்போது, ஊழல் செய்து எந்த நிலத்தை வாங்கினாரோ அதே இடத்தில்தான் முக்கிய கட்சி விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்துகிறார். இதைத்தான் மாறி விட்டார் என்கிறீர்களா?

ஏராளமான சூட்கேசுகள், தனி சமையல்காரர், தனி சமையல் பாத்திரங்கள், கூடவே உ.பி. சகோதரி என்று பழைய பரிவாரம் சகிதம்தான் அம்மையார் சுற்றுப் பயணம் புறப்படுகிறார். முன்பு பிரசாரத்தில் உங்களையும் சேர்த்து வசைபொழிந்தார். இப்போது செய்வதில்லை. இதைத்தான் அம்மையார் மாறி விட்டார் என்கிறீர்களா?

சொத்துக் குவிப்பு வழக்கில் ஐந்து சூட்கேசுகளில் தங்க, வைர, வைடூரிய நகைகளை இப்போதுதான் வழக்கு மன்றத்திலிருந்து ரிசர்வ் வங்கிக்குக் கொண்டு போனார்கள். (எல்லாமே ஒரு ரூபாய் சம்பளத்தில் வாங்கியவை!) இவற்றையாவது இனி நாட்டுக்கே



''உங்க பத்திரிகை நல்லா போகுதா?''

''எங்கே, கிலோ இரண்டரை ரூபாய்க்கு மேல் போக மாட்டேங்குது.''

– எஸ். மோகன்



''என்னங்க! இராத்திரி தூக்கத்துல ஏன் அப்படி பயந்து அலறினீங்க?''

''பாத்தியா! எனக்கு தூக்கத்துலகூட உன் நினைப்புதான்னு நான் சொன்னப்போ நம்ப மாட்டேன்னியே.''

– மதுரை என். உஷா தேவி



"நம்ம பொண்ணு யாரையோ லவ் பண்றான்னு எதை வெச்சு சொல்ற?"

"அவ ஏப்பம் விடும்போது கண்டல் வாசனை வந்துச்சுங்க!"

- எஸ்.எஸ். பூங்கதிர்

சொந்தமாக்குகிறேன் என்று மனம் திருந்தி அம்மையார் சொன்னால், மாறி விட்டார் என்று எண்ணலாம். அப்படிக் கூடச் செய்ய வில்லையே என்று நினைக்கும்பொழுது, எனக்கு (மறுபடி) அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

தங்கள் உண்மையுள்ள,
கருணாநிதி.

4

என் இனிய நண்பர் கலைஞர் அவர்களுக்கு,
வணக்கம்.

முடிவே எடுக்காமல் இருப்பதை விட, தவறான முடிவானாலும் எடுத்தே விடுவது என்று, அரசியல் விவகாரக் குழு எடுத்த முடிவைத்தான் எனது முடிவாக அறிவித்தேன். (நான் எடுத்த முடிவை சிதம்பரம் எடுப்பாரா, சிதம்பரம் எடுத்த முடிவை நான் எடுப்பேனா என்பதெல்லாம் இன்னும் முடிவாக வில்லை.) சமையல்காரரைக் கூட்டிக் கொண்டு போகாவிட்டால் சாப்பாடு எப்படிக் கிடைக்கும்? இது கூட உங்களுக்குத் தெரியவில்லையே என்று நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது. சுற்றுப் பயணம் போகும் போது, ரயிலில்தான் குறைந்த லக்கேஜ் எடுத்து வரச் சொல்கிறார்கள். சொந்த வேனில் போகிற போது, சூட்கேசுகள் எத்தனை இருந்தால் என்ன? அவை, கூடவே வரும் உ.பி. சகோதரிக்கு இடைஞ்சலாக இல்லாதவரை நான் ஏன் கவலைப் பட வேண்டும்? நானே கவலைப்படாத போது நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?

தங்கள் உண்மையுள்ள
ஜி.கே. மூப்பனார்.

5

அன்புள்ள மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கு,
வணக்கம்.

இனிமேல் எனக்கு அழுவதா சிரிப்பதா என்ற குழப்பம் இல்லை. முதலில் உங்கள் விளக்கத்தைப் படித்துச் சிரித்தேன். இடைத் தேர்தல் முடிவுகள் வரும்போது யார் சிரிப்பார்கள் யார் அழுவார்கள் என்பது உங்களுக்கே தெரியும். 2001 தேர்தலின்போது நாம் சேர்ந்து சிரிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை நான் இழந்து விடவில்லை...

தங்கள் உண்மையுள்ள,
கருணாநிதி.

பி.கு: நிலவரி பாக்கி நோட்டீஸ் வந்ததா...? சிரிக்காமல்தான் கேட்கிறேன்!

கற்பனை : **சாருகேசி**

KALKI SHOPPING PAGE



"கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில்
விளம்பரம்
செய்ய ரூ.1250/-
மட்டுமே. செய்து
பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 97.
போன்: 2345622, 2345623

வாயுத் தொல்லையா?

சிறந்த மருந்து கேஸ்ட்ரோவை நம்புங்கள் !

வாயுத்தொல்லைகளினால் ஏற்படும் நோய் அறிகுறிகள்: வயிற்றில் எரிச்சல் அல்லது வயிற்றில் ஏதோ பாரம் இருப்பது போன்ற உணர்வு, நெஞ்சுவலி, வயறுநிறைந்து இருக்கும் பொழுது சத்தத்துடன் கூடிய காற்று வெளியேறுதல், வாயு வெளியேறுதல், இனிப்பு பண்டங்களின் மேல் அளவிற்க்கு அதிகமான ஆசை, நடக்கும் பொழுது மூச்சுவாங்குதல், காது குடைச்சல், வாயில் துர்நாற்றம், இருமும் பொழுது நுரை யீரல்களில் வலி, சளி அல்லது சீதத்துடன் வெளிவரும் மலம், தொண்டையில் சளி கட்டுதல், முன்கோபம், தினசரி அலுவல் களில் ஈடுபாடு இல்லாமை, கவனக்குறைவு போன்றவை வாயுத் தொல்லைகளினால் ஏற்படும் சில அறிகுறி கள்.

மேற்கண்ட அறிகுறிகள் ஏதாவது தங்களுக்கு தென்பட்டால் **ஆயுர்வேத மருந்து** கேஸ்ட்ரோ உபயோகியுங்கள்.

தமிழ்நாடு - எல்லா மருந்துகடைகளிலும் கிடைக்கும்

Send Rs. 100/- for 1 Bottle (150Gms) Regd. Post in India

Gulf Distributors DUBAI : Al-Nasmah Ph : 2257526, BAHRAIN (Manama) Ph : 254340, DAMAM Ph: 8339173 RIYADH Ph. 4038920 MUSCAT Ph : 791164 SALALAH Ph.292571 KUWAIT Ph.: 2456219

Mfgd. by : Rani Drug House, Nellayi - Trichur, Kerala.
Ph : 0488-754839 Email: ranisnellayi@yahoo.com

ஸ்ரீராமஜெயம்

Sri Meenakshi Travels Delhi (Regd.)

5A/77, W.E.A. Karol Bagh, New Delhi - 110 005.
Phone : 5726891/5820291, Pager : 9628049922

சுற்றுலாத் துறையில் அனுபவமிக்கவர்களால் நடத்தப்படும் வட இந்திய உல்லாச புனித யாத்திரைகள்

1. ஜ்வாலாமுகி - காங்டா - சாமுண்டி - சிந்தபூரணி - வைஷ்ணவதேவி - ஜம்மு - ரகுநாத் மந்திர் அமிர்தசரஸ் - பொற்கோவில் - வாஹா பார்டர், புறப்படும் தேதி : 20.4.2000 - 6 நாட்கள் - கட்டணம் ரூ. 2300/-
2. டில்லி - ஆக்ரா - மதுரா - அலகாபாத் - காசி - கயா - நைமிசாரண்யம் - அயோத்தியா - கோரக்பூர் - பசுபதிநாத் - காட்மாண்டு - டில்லி, புறப்படும் தேதி : 13.4.2000 - 13 நாட்கள் - கட்டணம் ரூ. 5,000/-
3. பத்ரிநாத் - ஹரித்துவார் - ரிஷிகேஷ், புறப்படும் தேதி - 7.5.2000, 15.5.2000, 22.5.2000 ஜூன் 6.6.2000, 7 நாட்கள் - கட்டணம் - ரூ. 2200/-
4. பத்ரிநாத் & கேதார்நாத் - ஹரித்துவார் - ரிஷிகேஷ், புறப்படும் தேதி : 7.5.2000, 15.5.2000, 22.5.2000, ஜூன் 6.6.2000, 9 நாட்கள் - கட்டணம் ரூ. 2,800/-
5. சிம்லா - குலு - மணாலி - ரோத்தாங்பாஸ் - சண்டிகார், புறப்படும் நாள் : வெள்ளிதோறும் இரவு 7.00 மணி, 6 நாட்கள் - கட்டணம் : ரூ. 3,000/- (Hotel Accomadation)

Tour No : 1 to 5 எல்லா சுற்றுலாக்களும் டெல்லியிலிருந்து வசதியான டீலக்ஸ் பஸ் (2X2) தென் இந்திய பிராமணர்களால் தயாரிக்கப்படும் காலை காப்பி, சுவையான டிபன், மற்றும் மதிய உணவு, இரவு சாப்பாடு உட்பட. மற்றும் எங்களது தினசரி, வார சுற்றுலாக்களான ஜெய்ப்பூர், ஆக்ரா, மதுரா, ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், சிம்லா, குலு, மணாலி, ஆகிய சுற்றுலாக்களுக்கு நேரிலோ, தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளவும். குரூப்பாக வருபவர்களுக்கு அவர்களின் தேவைகளுக்கேற்ப தனியாக செய்து தரப்படும். மற்றும் கார், வேன், டாடா சுமோ ஆகியவற்றுக்கும் எங்களை அணுகவும். L.T.C. வசதி உண்டு.

For Further Details & Enquiries Please Contact the Above or below Addresses :

1. **Smt. VEDAVALLI SRINIVASAN,** 19/8, "Navratna Flats", I Floor, Thachi Arunachala Street, Mylapore, Chennai - 600 004. Ph : 044-4950530.
2. **Shri. R. KESAVAN,** Sri Meenakshi Telecom Centre, Near Karanthai Tamil Sangam, Karanthai, Thanjavur. Ph : 04362-51306.
3. **Shri. S. RAVICHANDRAN,** 26/1, Giri Street, West Mambalam, Chennai - 600 033. Ph. 4746481.
4. **R. MURALIDHARAN,** 173, Doyen's Colony, Srilingampalli Post, Hyderabad - 500 019. Ph : 3035137. (Contact Time : 5.00 - 8.00 p.m.)
5. **RAMASWAMY IYENGAR,** No. 7, Sathyamoorthi Street, Srirangam, Trichy.
6. **T.R. RAMAMANI IYENGAR** C/o. K. Govindan, Malligai Apartment, Plot No. 17, Raghavendra Nagar, Parthiban St, Ullagaram, Chennai - 600 091. Ph. 2421840.



கடந்த வருடம் ஆகஸ்ட்டில், சுதந்திர தினத்தையொட்டி, தனியார் சானல்களைப் போல தூர்தர்ஷனும், செய்திகளுக்கென்றே பிரத்யேக சானல் ஒன்றை ஆரம்பித்தது. ஆனால், விரைவில் அந்த சானல் இழுத்து மூடப்படுவதற்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன. காரணம், பெயரளவில், பிரசார் பாரதி என்ற சுதந்திர அமைப்பின் கீழ், தூர்தர்ஷன் இயங்கி வந்தாலும், அரசு இயந்திரத்துக்கேயுரிய தீர்க்கதரிசனத்துடன் திட்டமிடாமை, சிவப்பு நாடாத்தனம் போன்றவையே.

ஆறு மாதங்களாக, தூர்தர்ஷனின் நியூஸ் சானல் ஒளிபரப்பாகி வந்தாலும் கூட, அதன் மூலமாக அரசுக்கு, மிக சொற்ப அளவிலேயே வருவாய் வந்திருக்கிறது. செலவுகளோ நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. வழக்கமாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய மத்திய அமைச்சர்கள், அரசு முறையில் அயல்நாட்டுப் பயணம் மேற்கொள்ளும் போது, தூர்தர்ஷன் தனது நிருபரையும், கேமராமேனையும் அனுப்பி செய்தி சேகரித்து ஒளிபரப்புவது வழக்கம்.


ஆனால், அண்மையில் பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், ஜப்பான் போனபோது, தூர்தர்ஷன் குழுவை அனுப்ப, தூர்தர்ஷன் நிர்வாகம் தயாராக இல்லை. காரணம் நிதித் தட்டுப்பாடுதான். கடைசியில் பாதுகாப்புத் துறை அதிகாரிகள், பாதுகாப்புத் துறையே செலவைப் பார்த்துக் கொள்ளும் என்று கூறியதன் பேரில், தூர்தர்ஷன் நிருபர் குழு, ஜப்பான் சென்றது. அதனைத் தொடர்ந்து மத்திய வெளி விவகாரத் துறை அமைச்சர் கிழக்காசிய நாடுகளுக்குப் போன போதும், மத்திய நிதி அமைச்சர் உலகப் பொருளாதாரக் கழக மீட்டிங்கில் கலந்து கொள்வதற்காக தாவோஸ் போன போதும், சம்பந்தப்பட்ட அமைச்சகங்களே செலவை ஏற்றுக் கொண்டால்தான் தங்கள் நிருபரை அனுப்ப முடியும் என்று தூர்தர்ஷன் நிபந்தனை போட்டது. ஆனால், அந்த அமைச்சகங்கள் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ளவில்லை. தனியார் சானல் தனது நிருபர்கள் மூலம், இந்த அயல்நாட்டுப் பயணங்களை நேரடியாய் கவர் செய்ய, தூர்தர்ஷன் பின்தங்கிப் போனது.

வருமானம் இல்லாது போய் விட்ட சூழலில், செலவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தூர்தர்ஷனில் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அதை செயல்படுத்திக் கொண்டிருக்கும் விதம்தான் டெல்லி வட்டாரத்திலும், தூர்தர்ஷன் வளாகத்திலும் நகைப்புக்கிடமாகியுள்ளது. நிருபர்கள், செய்தி சேகரிக்கச் செல்லும்போது, உபயோகிக்கும் கார்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டு விட்டது. பாராளுமன்ற வீதியிலிருந்து, ஆசிய விளையாட்டு கிராமத்துக்கு செய்திப் பிரிவு அலுவலகத்தை இடம் மாற்றிய பின், புதிய அலுவலகத்திலிருந்து, முக்கிய பகுதியான பாராளுமன்ற வீதிக்கு, தூர்தர்ஷன் ஊழியர்களுக்காக, குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு தடவை ஷட்டில் சர்வீஸ் வாகன வசதி செய்யப்பட்டிருந்தது. அதையும் இப்போது குறைத்து விட்டனர். விரைவில் நிறுத்தப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

அதே நேரம், உயர் அதிகாரிகள் கார்களை பயன்படுத்துவதற்கான விதிமுறைகள் படி செய்திப் பிரிவின் தலைவரான, ஜாயிண்ட் செகரட்டரி அந்தஸ்து கொண்ட ஒருவருக்கு மட்டுமே தனி கார் உண்டு. ஆனால், அவருக்குக் கீழான அந்தஸ்தில் உள்ள டெபுடி செகரட்டரி, அண்டர் செகரட்டரி, தலைமை புரொடியூசர்கள் ஆகியோர் உட்பட ஒன்பது பேர் தனித்தனிக் கார்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இருநூறு கோடி ரூபாய்ச் செலவில், ஆர்ப்பாட்டமாக தூர்தர்ஷன் செய்தி சானல் ஆரம்பிக்கப்பட்டபோது இருபது கோடி ரூபாய் செலவு செய்து படப்பிடிப்புத் தளம் ஒன்று உருவாக்கப்பட்டது. இப்போது, அது போரடிக்கிறது என்று முப்பது லட்சம் செலவில் புதிதாக இன்னொரு செட் உருவாகிக் கொண்டிருக்கிறது. அநேகமாய், இந்த செட் போரடித்துப் போகிற வேளையில், நியூஸ் சானலே குளோஸ் ஆனாலும் ஆச்சரியப்பட வேண்டாம்!

— நியூஸ்வாலா





2000 பிப்ரவரி 27
பிரமாதி மாசி 15
மலர் : 58
இதழ் : 31

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிட்டி பாப்பா - பாரதியார்.




அரசியலாக்கப்படும் அரசியல் சாசனம்!

இந்தியக் குடியரசுக்குப் பொன்விழா ஆண்டு இது. ஐம்பது ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் நமது அரசியல் சாசனம் நாம் முன்னேற வழி செய்திருக்கிறதா என்று திடீர்க் கவலை வந்துவிட்டது மத்திய அரசுக்கு. அரசியல் சாசனத்தைப் பரிசீலித்து விமர்சிக்க - ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட்டுள்ளது!

ஐம்பதாண்டுகளில் நாடு எதிர்பார்த்த அளவுக்கு முன்னேறிவிடவில்லை. மக்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர், கல்வி, சுகாதாரம், வசிப்பிடம் இவையே முழுமையாக வழங்கியபாடில்லை. இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் கிட்டத்தட்ட ஐம்பது சதவிகிதத்தினர் எழுத்தறிவற்றோர். பீஹார், ஒரிசா போன்ற மாநிலங்களில் அறியாமையும் வறுமையும்தான் பிரதான சொத்துக்கள்! பெரும்பாலான முன்னேறிய மாநிலங்களில்கூட பற்றாக்குறை பட்ஜெட்! மத்திய அரசின் கடன் சுமையோ நம் ஆயுட்காலத்தில் குறையக்கூடியதாக இல்லை. வசூலாகும் வரித்தொகையெல்லாம் அக் கடனுக்கு வட்டி செலுத்தக்கூட போதாது.

இதற்கெல்லாம் காரணம் நமது அரசியல் சாசனம்தானா...?

அடிப்படை வசதிகளும் கல்வியும் இந்தியக் குடிமகனுக்குத் தரப்பட வேண்டும் என்று அரசியல் சாசனம் உறுதி செய்யவில்லையா என்ன...? ஆயினும் அதைச் செய்ய முடியாமல் அரசு திணறிப் போகிறது. ஆனால், அதற்காக எந்த அரசும் அரசாங்கச் செலவைக் குறைத்துவிடவில்லை.



மதச்சார்பின்மை என்பது அரசியல் சாசனம் விதிக்கும் கொள்கை.

ஆனால், அரசியல்வாதிகள் மதத்தையும் மத எதிர்ப்பையும் மூலதனமாக்கியே அரசியல் நடத்துகிறார்கள்.

ஜாதி பேதங்களற்ற சமத்துவ சமுதாயம் குறித்து அரசியல் சாசனம் பேசுகிறது. ஆனால், அரசியல் உலகிலோ ஜாதி உணர்வுகளைத் தூண்டியும், பயன்படுத்தியும் வோட்டுகள் கேட்பது வாடிக்கையாகவே இருக்கிறது. பல அரசியல் கட்சிகளேகூட தனிப்பட்ட ஜாதிகளின் பிரதிநிதித்துவ அமைப்புகளாகி விட்டன.


அரசியல் சாசனம் உத்தரவாதம் செய்கிற கல்வியறிவைப் பரவலாக்க, அரசு பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் தொகை பண வீக்கத்துக்கும் ஜனத்தொகைக்கும் ஏற்ப உயர்த்தப்படவில்லை. பிற நாடுகளுடன் ஒப்பு நோக்க அத் தொகை மிகக் கேவலமானது.

ஆக, அரசியல் சாசனம் காலத்துக்கொவ்வாததாகப் பின்தங்கிப் போய்விடவில்லை. அதனை நடைமுறைப்படுத்தும் அரசியல்வாதிகளுடைய அணுகுமுறையில்தான் கோளாறு.

அரசியல் பணி என்பது நாட்டுப் பணியாக இருந்த காலம் போய் அதுவே கட்சிப் பணியாக, கட்சித் தலைமையைத் திருப்திப்படுத்தி ஆதாயம் காணும் வியாபாரமாக மாறி விட்டது. இந்த ஆபாச கலாசாரம்தான் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையே தவிர, அரசியல் சாசனம் ஒரு தடையே அல்ல.

எனவே அதனைப் பரிசீலிக்க ஒரு கமிஷன் நிறுவியதோடு உறுப்பினர்களையும் நியமித்து அவர்களைக் கொண்டு அரசியல் சாசன திருத்தங்களைச் சிபாரிசு செய்ய வைப்பதென்பது எய்தவன் இருக்க அம்பை நோகும் கதைதான்!

கமிஷன் நிறுவியதிலேயே சர்ச்சைகள் எழுந்துவிட்டன. அதில் யார் இடம் பெற வேண்டும் - வேண்டாம் என்பது குறித்து சர்ச்சை. எந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் தந்து பரிசீலிக்க வேண்டும் என்பது குறித்து சர்ச்சை. இந்தச் சர்ச்சைகள் அடங்கி, சிபாரிசுகள் வழங்கப்பட்டாலும் அவற்றை ஏற்று நடைமுறைப்படுத்துவதென்பது இயலாத காரியம். நாடாளுமன்றத்தில் அறுதிப் (2/3) பெரும்பான்மை இருந்தாலொழிய ஓர் அரசு அரசியல்



சாசனத்தில் மாற்றங்கள் கொண்டு வர முடியாது. அவ்வாறு அறுதிப் பெரும்பான்மையுடன் இந்தியாவில் ஓர் ஆட்சி அமைக்கப்படுவதென்பது இன்றைய சூழலில் நிகழக் கூடியதே அல்ல.

அரசியல் சாசன மறுபரிசிலனை கமிஷன் என்பது பிரும்மாண்டமான வீண் செலவு, நேர விரயம் என்பதற்கு மேலாக எதுவும் கூறுவதற்கில்லை.

அதே முதலீடும் முயற்சியும் கல்வியைப் பரவலாக்குவதற்காக ஒரு போர்க் காலத் திட்டம் தயாரிக்கச் செலவிடப்படுமானால், அத் திட்டமும் அமுலுக்கு வருமானால், முன்னேற்றம் காணலாம். அந்தத் திட்டம் பரபரப்பை ஏற்படுத்தாது போகலாம். ஆனால் காலப் போக்கில் பல புதிய முன்னேற்றப் பாதைகளை அது திறந்துவிடும். முக்கியமாக, பொருளாதார முன்னேற்றத்தையும், தன்னிறைவையும் சுகாதாரத்தையும் சமத்துவத்தையும் நோக்கிய திருப்புமுனையாக அது அமையும்.

ஆனால், மக்களைத் தன்னிறைவு உடையவர்களாகவும் சுய சிந்தனையுடையவர்களாகவும் மாற்றி விடக் கூடிய இந்தச் சூழலே அரசியல்வாதிகளுக்குச் சிம்ம சொப்பனமாகவும் முடியும். வெல்லப் பிள்ளையாரிடம் வெல்லம் கிள்ளி அதையே அவருக்கு நைவேத்தியம் செய்வதுபோல் வரிப்பணத்திலிருந்து மானியம் கொடுத்து மக்களை 'வாழ வைக்கும்' அரசியல் நடத்த முடியாது; கல்விக் கண் திறந்தால் எளியோரை ஏமாற்றி லஞ்ச ஊழலில் ஈடுபட்டு கொழிக்க முடியாது.

அதனால்தான் அரசியல் சாசனம் மீது பழி போட்டு அதை 'ரிப்பேர்' செய்யும் முயற்சியில் மக்கள் வரிப்பணத்தையே செலவழிக்க முடிவு செய்திருக்கிறது மத்திய அரசு.

பொது வாழ்க்கைப் பண்புகளையும் தனி மனித ஒழுக்கத்தையும் பறக்க விட்ட சுயநல அரசியல்வாதிகளின் சுரண்டலையும் மீறி இத்தனை காலமாக நாடு கண்டுள்ள முன்னேற்றத்துக்கு என்ன காரணம் என்று சற்று சிந்தித்துப் பார்த்தால் விடை கிடைக்கும்:

ஜனநாயகத்தின் மகத்துவத்தை உணர்த்துகின்ற, மக்களின் உரிமைகளை உத்தரவாதம் செய்கின்ற நமது அரசியல் சாசனம்தான்!

அந்த அரசியல் சாசனம்தான் இன்று அரசியலாக்கப்பட்டிருக்கிறது!

பி.எஸ். நாராயணசாமி, செம்மங்குடியின் முக்கியமான சிஷ்யர்களுள் ஒருவர். இன்றைக்கு பி.எஸ்.என்னுக்கு ஏராளமான சிஷ்யர்கள்! சங்கீத கலா ஆசார்யா என்று பட்டம் கொடுத்து, இசையாசிரியராக இவர் ஆற்றி வரும் சேவைக்கு அங்கீகாரம் அளித்திருக்கிறது மியூசிக் அகடமி. பிப்ரவரி 24ஆம் தேதி மாலை, அத்தனை மாணவர்களும் இணைந்து இந்தச் சிறப்பைக் கொண்டாடுகிறார்கள். (சென்னை, நாரதகான சபா அரங்கு) அன்று பி.எஸ்.என்னின் பிறந்தநாளும் கூட. தங்கள் 'சாரை'ப் பற்றிப் பேசும்படி அவர்களை அழைத்து ஒன்று சேர்த்தோம். நெகிழ்ந்து போய்ப் பேசினார்கள். நட்சத்திர மாணவர் சங்கர் ஸ்ரீநிவாஸ் பேச முடியாமல் உணர்ச்சிப் பெருக்கில் விக்கி விக்கி அழுததுகூட குருவந்தனம்தான்! சிஷ்யர்கள் பி.எஸ்.என் குறித்துப் பேசியதன் தொகுப்பு:

என். சசிதர்: *யேசுதாஸிடம் பன்னிரண்டு வருஷம் கற்றுக்கொண்ட பிறகு சாரிடம் வந்தேன். பொதுவாக இன்னொரு குருவின் மாணவரை ஏற்கத் தயங்குவார்கள். பட் ஹி இஸ் ஸோ க்ரேட்.*

வி.வி. ரவி: *முதல்ல செம்மங்குடி மாமாகிட்டேதான் கத்துண்டேன். அவருக்கு நேரமில்லாம போனப்போ இங்கே அனுப்பினார். பி.எஸ்.என் சார் செம்மங்குடி பாணியை அடிப்படையாக்கி சொந்தமா ஒரு ஸ்டைல் உருவாக்கியிருக்கார். மென்மையான மனசு. அவர் மனுஷரேயில்லை – தெய்வம்!*

ராகவகிருஷ்ணா (பள்ளிச் சிறுவன்): *பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயில்ல எனக்கொரு கச்சேரி. 'ஹனுமனை அனுதினம்'ன்ற பாட்டு வேணும்னு கேட்டேன். உடனே கத்துக் கொடுத்துட்டார். அதே மாதிரி 'முருகனின் மறுபெயர் அழகு' ஆசைப்பட்டுக் கேட்டேன். அதையும் உடனே சொல்லித் தந்தார்.*

சரோஜா: *வீட்டுக்கு வந்து அவர் சொல்லித் தர பாக்கியம் எனக்குக் கிடைச்சது. குடும்பச் சூழல்னால 35 வருஷமா என்னால பாட முடியலை. ஆனால் இப்போ கூட, பாடணும்னா அவர் கற்றுத் தந்தது அப்படியே பசுமரத்தாணி போல மனத்தில் இருக்கு.*

கல்கத்தா வி.என். சங்கர்: *கச்சேரியில் கூட பாடுவதற்கு வெளியூர் அழைத்துப் போனால் ஒரு குழந்தை மாதிரி நம்மைப் பார்த்துக்குவார். வெறும் பின்பாட்டா இல்லாம, மேடையில் நிறைய பாட வாய்ப்புத் தருவார். ரயில் பயணத்தின்போது அற்புதமான அனுபவமெல்லாம் ஏற்படும். ஒருமுறை சென்னையிலிருந்து திருவனந்தபுரம் போவதற்குள்ளே நான்கைந்து பல்லவிகள் கம்போஸ் பண்ணி ஒத்திகை பார்க்க வைச்சார்!*

விஜய் அருண் (கிடார் கலைஞர்): *கிடாருக்கு எப்படிக் கற்றுத் தர வேண்டும்னு ரொம்ப கவனமா நுணுக்கமா அவரால் கற்றுத் தர முடிகிறது. வராத கமகத்தையெல்லாம் வரவழைச்சுடுவார்!*

வி.வி.எஸ். முராரி: *வயலினில் நிரவல் எப்படி வாசிக்கணும், வாத்ய இசைன்னாலும் வார்த்தைக்கு எப்படி முக்கியத்துவம் தரணும்; எந்தத் தாளத்துக்கு எப்படி மாத்தணும்... இதெல்லாம் ரொம்ப கவனமாச் சொல்லித் தந்ததோட என்*



• இன்னொரு ஜோடி பெற்றோர்!

னைப் பக்க வாத்தியமாகப் போட்டுக்கொண்டு நிறைய ஊக்கப்படுத்தியிருக்கார்.

புஷ்பா ஸ்ரீராம்: *சுவாமி ஹரிதாஸ் கிரி சொல்லித்தான் இவரிடம் வந்தேன். முதலில் எம்.எல்.வி சிஷ்யை நான். என் பாணியே மாறிடும்னு எல்லாரும் கவலைப்பட்டு எச்சரிக்கை பண்ணினாங்க. ஆனா சார் எதையும் மாத்தலை. ப்ருகாவை எப்படி அழுத்தமா கொடுக்கணும்னு முக்கியமா கத்துத் தந்தார். விளம்பரங்கள், சினிமாவுக்*



• மாணவர் படையுடன் பிஎஸ்என்.

காத்தா, அப்பா, குரு, தெய்வம்!

கெல்லாம் பாட ஆரம்பிச்சப்போ அவர் ஆட்சேபிப்பாரோன்னு பயந்தேன். என் பயம் வீண்!

பாரதி: என் வயசுக்கே மாறிடுவார் என் மகிழ்ச்சியிலும் கவலையிலும் முழுசாக ஈடுபடுவார். பத்தாம் வகுப்பு ரிசல்ட் வந்தப்போ என்னளவுக்கு அவருக்கும் சந்தோஷம். என் முந்தைய குருவிடம் (சீதா ராஜன்) 'பாலித்சு காமாக்ஷி' கீர்த்தனை கற்றுக் கொண்டேன். அதைப் பாடி டேப் செய்து தரச் சொன்னார். "எதுக்கு சார்?"ன்னு கேட்டேன். "எனக்கு மறந்து போச்சு, ஞாபகப் படுத்திக்கணும்"னார்! இந்த பரந்த மனசுதான் அவரை தெய்வமா நினைக்க வைக்கறது.

விஜயலக்ஷ்மி: அவர் வகுப்பு கிளாஸ் ரூம் மாதிரியே இராது. நடுநடுவே சுவாரஸ்யமான பேச்சு, நிறைய சிரிப்பு... 'ஓ ரங்க ஸாயி' கீர்த்தனையை அவரிடம் கத்துண்டது என் வாழ்க்கையிலேயே மிக அழகான அனுபவம். மூணு வருஷம் பயிற்சிக்கப்புறம்தான் என்னால அதைக் கச்சிதமாப் பாட முடிஞ்சுது.

மாதவன்: என் பெர்ஸனல் லைஃப்ல நிறைய பிரச்னைகள் வந்தப்போ ரொம்ப ஆதரவா இருந்திருக்கார். பொருளாதார ரீதியாக்கூட உதவியிருக்கார். நான் வகுப்புக்குப் போயே ரொம்ப நாளாச்சு. ஆனாலும் இந்த சிஷ்யர்கள் கெட் டு கெதருக்கு என்னை மறக்காம கூப்டிருக்கார்னா அவர் எப்படிப் பட்டவர்னு நான் சொல்லவே தேவையில்லை. எங்க குடும்பத்துக்கே அவர் father figure.

ராஜஸ்ரீ: சக பாடகர்களைப் பத்தியோ மற்ற மாணவர்கள் பத்தியோ ஒரு வார்த்தைகூட நெகடிவா அவர் பேசி நான் கேட்டதில்லை.

ஆனந்தி: கர்நாடிக் மியூசிக்கே பிடிக்காது, பாடவும் வராதுன்னு இருந்த என்னைப் பாட வைச்சுருக்கார். அவர்

மனைவியும் அவரும் தங்கள் வீட்டை எப்போதும் மாணவர்களுக்காகத் திறந்து வைச்சுருக்காங்க. ஆயுள் காலத்துக்கும் அந்தக் குடும்பத்தோட பழகின மாதிரி ஒரு பந்தம் உடனே ஏற்பட்டுடும்.

சந்திரிகா: நான் முதல்ல போனப்போ பாடச் சொல்லிக் கேட்டார். சரியில்லை, நன்றாக இல்லை என்று எதுவும் சொல்லாமல் முகம் நிறைய ஒரு சிரிப்பு மட்டுமே அவரிடம் ரியாக்ஷன். புரிஞ்சு போச்சு! இப்போ பாடறதுக்குப் போகல்லைன்னாலும் அவர் வீட்டுக்கு உரிமையோட போய் வந்து கொண்டுதானிருக்கேன். ரொம்ப ஆதரவா இருப்பார். எனக்கு 60 வயசானாலும் அந்த ஆதரவைத் தேடிக்கிட்டுப் போவேன்.

வரலக்ஷ்மி ஆனந்த்குமார்: இவரிடம் கற்றுக் கொள்கிறவர்கள் பாக்கியசாலிகள். ராக ஆலாபனையில் இதுவரை நானறியாத புதுப்புது பாதைகளெல்லாம் காண்பித்துக் கொடுத்தவர் – அமைப்பும் சஞ்சாரங்களும் 'இப்படியெல்லாம்கூட இருக்குமா' என்று என்னை யோசிக்க வைத்தன.

ஸ்வாதி ஸ்ரீகிருஷ்ணா: எங்கப்பாவுடன் மனஸ்தாபம் வந்தப்போகூட அதை சாரிடம் சொல்லிக்க முடிந்தது. சுதா ரகுநாதன், பாம்பே ஜெய்ஸ்ரீ போல் நான் பாடலையேன்னு அப்பாவுக்குக் குறை. சார் உறுதியாச் சொல்லிட்டார். "ஸ்வாதி, ஸ்வாதி மாதிரிதான் பாடணும்."

மஹேஷ்: என் வேலைப் பளுனால காலை 6.45க்கு கிளாஸ் வேணும் சார்னு கேட்டுப்பேன். வேற டைம் கிடைக்காது. அவரும் 'வா'ன்னு சந்தோஷமாச் சொல்லி, தயாராய்க் காத்திருப்பார்.

ரஞ்சனி – காயத்ரி சகோதரிகள்: நல்ல வயலின் கலைஞர்கள்னு பெயர் வாங்கிய பிறகு வாய்ப் பாட்டுக்கு மாறினா பெயர் கெட்டுப் போயிடுமோன்னு பயம். ஆனா அவர் எங்களைப் பாட வைச்சார். அவர் கிட்டே நாங்க கத்துக்கிட்ட இன்னொரு முக்கியமான விஷயம் வினயம்– சக வித்வான்களை மதிக்கிற பண்பு.

சி.என். சந்திரசேகர்: நான் வாய்ப் பாட்டிலிருந்து வயலினுக்கு மாறியவன். சார்கிட்டே ஒரு பொக்கிஷமே இருக்கு. அதை வாரி வழங்கற அபாரமான மனசும் இருக்கு.

பால முரளிகிருஷ்ணா: அவர் வீட்டுக் குழந்தையாத்தான் என்னை நினைக்கறார்.

மீனாட்சிசுந்தரம் (பாலமுரளி கிருஷ்ணாவின் அப்பா): பாலமுரளியும் நானும் சேர்ந்துதான் கத்துக்க வந்தோம். என்னால தொடர முடியலை. ஒரு ஸ்கூல்ல மியூசிக் டீச்சரா இருக்கேன்னு சொன்னேன். இன்னி வரைக்கும் பத்து ரூபா கூட எங்கிட்டே பீஸ் வாங்கிக்கலை...

சி.ஆர். வைத்தியநாதன்: பாலக்காட்லேருந்து தேடிண்டு வந்தேன் அவரை. உடனே கற்றுத் தர ஒத்துக்கிட்டார். இப்போ பக்கத்திலேயே எனக்கு வீடு பார்த்துக் கொடுத்திருக்கார். ஒரு வருஷத்துல 100 கீர்த்தனை கற்றுத் தந்திருக்கார். அம்மா இல்லாத குறையை மாமியும் அவரும் போக்கிட்டாங்க.

ஏ.எஸ். முரளி: ஒரு சிஷ்யனை கூட பாடச் சொன்னா அவனுக்கு என்ன கீர்த்தனை தெரியுமோ அதை வைச்சுண்டே ஒரு கச்சேரி பண்ணிடுவார். பதினெட்டு வருஷமா நெரூர்ல சதாசிவ பிரும்மேந்திரர் ஆராதனை நடத்தறார். நாங்க தர்ற ஃபீஸெல்லாம் அதுக்குத்தான் போறது.

அபிஷேக் ரகுராம்: எங்க தாத்தா (பாலக்காடு ரகு)கிட்டே எத்தனை சுலபமா பழகறேனோ அப்படியே இவர்கிட்டேயும் பழக முடியறது.

பிரவீன் கிருஷ்ணன்: சார்கிட்டே வந்த பிறகு என் பாட்டுல நிறைய மாறுதல்; எக்கச்சக்க முன்னேற்றம்.

சங்கர் ஸ்ரீநிவாஸ்: (அழுது ஓய்ந்தபின் சொன்னவை:) எதற்குமே பதற்றப்பட மாட்டார். எத்தனை பேரிடம் அவருக்குத் தொடர்பு இருக்கு...? யாரிடமும் எதையும் எதிர்பார்க்காமல் இந்தக் கலையைக் கேட்பவர்களுக்கெல்லாம் சொல்லித் தருவது மட்டுமே தனது வேலை என்பது போல் இருப்பார். எத்தனையோ முறை அவர் சொன்ன நேரத்துக்குப் போக முடியாமல் அழைத்த கச்சேரிக்குப் போக முடியாமல் என் மருத்துவப் பணி குறுக்கிட்டிருக்கிறது. ஒருமுறை கூட அவர் முகம் சுளித்ததில்லை. மிக உயர்ந்த மனிதர்.

ரமேஷ்: அபிஷேக் ஒரு வகுப்பில் மூன்று கீர்த்தனைகள் பாடம் பண்ணுவான். எனக்கோ ஒரு கீர்த்தனைக்கு மூன்று வகுப்புகள் வேண்டியிருக்கும். ஆனால் எங்கள் இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி கவனத்தைத்தான் தருவார். கடைசியில் எல்லாரையும் ஒரே கச்சிதத்துடன் பாட வைப்பார். எல்லோரும் தனித்தனியாக அவரிடம் ரொம்ப உரிமையுடன் பழகவும் முடியும். ஒன்று சேர்ந்து ஒரு குடும்பமாக இயங்கவும் முடியும். இதுதான் அவருடைய தனிப் பெருமை.

— ஸ்ருதி கீர்த்தி

படம்: ஸ்ரீஹரி


நக்கீரன்
எச்சரிக்கை!
இத்தொடரின்
கருத்துக்களை பின்பற்ற
நினைத்தால் நக்கீரன்
பொறுப்பல்ல.
ரா.கி.ரங்கராஜன்
எழுதும்
நீங்களும்
முதல்வராகலாம்
வில்லங்கத் தொடர்!
பரபரப்பான
விற்பனையில்!


துளிகூட ஒற்றுமை இல்லை!

கூட்டணி ஆட்சிகள் கலகலத்துப் போகும் என்று வெறுப்பில் பேசுவோர் கவனிக்கவும்!

அஸ்மா, கீதா, பிரியா : அடையாறில் உள்ள கேலரியில் இந்த மூவர் கூட்டணி நடத்திய ஓவியக் கண்காட்சிக்கு நல்ல வரவேற்பு! இத்தனைக்கும் ஓவியங்களில் துளிகூட ஒற்றுமையில்லை.

மூவரிலும் சீனியர் அஸ்மா மேனன். சென்னை ஓவியம் மற்றும் கலைக் கல்லூரியின் முன்னாள், இந்நாள் மாணவி. ஆமாம்! 83-ல் ஓவியக் கல்லூரியில் சேர்ந்து, பட்டப் படிப்பை முடித்தவர். மீண்டும் முதுகலைப் பட்டத்தில் சேர்ந்திருக்கிறார்.

ஆனால் ஓவியக் கல்லூரியில் படிப்பை முடித்து விட்டு, முழுநேர ஓவியராக இவருக்குத் துணிச்சல் இல்லை. எனவே இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம்ஸ் ஆப் இந்தியா ஆகியவற்றில், ஓவியத்துக்குத்



துளியும் சம்பந்தமில்லாமல் சில வருடங்கள் வேலை பார்த்திருக்கிறார். அதனையடுத்து இரண்டு குழந்தைகள் புத்தகத்துக்கு ஓவியங்கள் வரைந்து கொடுக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அப்போதுதான், திறமையை இத்தனை நாளும் வீணாக்கி விட்டோமே என்று உணர்ந்திருக்கிறார். அப்புறம் என்ன? உத்தியோகத்துக்கு முழுக்குப் போட்டு விட்டு, முழு நேர ஓவியராகி விட்டார்.

எளிதில் விளங்காத விசித்திர விஷயங்கள், அஸ்மாவின் ஓவியங்களில் கணிசமாய் இடம்பெறுகின்றன.

"அதற்குக் காரணம் என் பெண்தான்!" என்கிறார் அஸ்மா. அவள் கதை சொல்லச் சொல்லி தினமும் துளைத்தெடுப்பாள்.



அவளுக்காகப் புத்தகங்கள் படித்து, கதை சொல்ல எனக்கு நேரமிருக்காது. எனவே, அவள் கதை கேட்கிறபோதெல்லாம், நானாகக் கற்பனை செய்து, நிறைய கதைகள் சொல்லுவேன். அந்தக் கதைகளில் விசித்திர உருவம் கொண்ட பாத்திரங்கள் நிறைய வரும். அதன் தாக்கம், நான் வரையும் ஓவியங்களிலும் இருப்பதை நான் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்."

கீதாவும், பிரியாவும் அஸ்மாவுக்கு நேரெதிர். இரண்டு பேருமே ஓவியக் கல்லூரி மாணவிகள் கிடையாது! தாங்களாகவே ஓவியம் வரையப் பழகிக் கொண்டவர்கள்தான். இரு வேறுபட்ட பாணிகளைப் பின்பற்றுகிறார்கள்.

கீதா, கண்ணாடிகளிலும் ஓவியங்கள் தீட்டுகிறார். தவிர உலோகச் சித்திரங்களிலும் தன் கைவண்ணத்தைக் காட்டுகிறார். கொஞ்சம் புரியாத ரகம்தான்! எதையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல நேரிடையாய் வரையாமல், சற்றே நவீன பாணியைக் கையாளுகிறார்.

கல்லூரி நாட்களின் போது, படம் வரையத் தொடங்கினாலும் பத்திரிகை ரிப்போர்ட்டர், டான்ஸ் என்று ஒரு ரவுண்டு அடித்து விட்டு, கடைசியில் ஓவியராக செட்டிலாகி விட்டார். "எனக்கு பெரிய கம்பெனிகள் நிறைய ஆர்டர்கள் தருகிறார்கள். அவர்கள், 'அப்ஸ்டிராக்ட்' பாணியில்தான் ஓவியங்கள் கேட்கிறார்கள். எனவே ஆர்டரின் பேரில், அது போல நிறைய வரைகிறேன். முன்பு வீட்டிலேயே உட்கார்ந்து வரைந்து கொண்டிருந்தேன். ஆனால், ஓவியங்களை வாங்க வருபவர்களை வீட்டுக்கு வரவழைத்து, சுவருக்குப் பக்கத்தில் இருந்தும், கட்டிலுக்கு அடியில் இருந்தும் ஒவ்வொரு ஓவியமாக வெளியே எடுத்துக் காட்டுவது அத்தனை நாகரிகமில்லை என்று கருதி, ஒரு கேலரியை வாடகைக்கு எடுத்து, அங்கே என் ஓவியங்களை, பர்மனென்டாக கண்காட்சியாய் வைத்து விட்டேன். ஆத்ம திருப்தி, நல்ல வருமானம்..." என்கிறார் கீதா.

தமது கேலரியில், இன்னும் இரண்டு பெண் ஓவியர்களுடன் இணைந்து, கீதா நடத்தும் முதல் ஓவியக் கண்காட்சி இதுதான்.

பிரியாவின் ஓவியங்களில் இடம் பெறுபவை பழங்கால கட்டடங்களும் கோவில்களும்தான். "சிறு வயது முதலே

எனக்கு சுவாமி படங்களைப் பார்த்து அதேபோல வரைவது என்பது மிகவும் பிடித்த விஷயம். அதுதான் என் ஓவிய ஆர்வத்தின் பிள்ளையார்சுழி!" என்கிறார் பிரியா. தஞ்சை பெரிய கோவில்தான் இவர் வரைந்த முதல் ஓவியம். இந்தியன் இங்க் தான் பயன்படுத்துகிறார். கோவில் காட்சிகள், புராதனக் கட்டடங்களை இவர் வரைந்தாலும் பெரும்பாலும் அந்த இடங்களுக்கு இவர் நேரில் போனது இல்லை!

அதேசமயம், முக்கியமான கோவில்களுக்குப் போகிறபோது, அங்கே சிறிது நேரம் உட்கார்ந்து, ஸ்கெட்ச் செய்யவும் இவர் தவறுவதில்லை. போகிற இடங்களில் பல்வேறு கோணங்களிலிருந்தும் புகைப் படங்கள் எடுத்துக்கொண்டு வந்து ஓவியம் வரையும் போது பயன்படுத்திக் கொள்கிறார்.

"ஆர்ட் கேலரிகள், கைவினைப் பொருட்கள் விற்பனை மையங்கள் மூலம் என் ஓவியங்களை நான் விற்கிறேன். என் ஓவியங்கள் அயல்நாட்டு டூரிஸ்ட்களை மிக அதிக அளவில் கவருகின்றன."

கடந்த ஐந்தாண்டுகளாக ஓவியம் வரைந்து வரும் பிரியா, குழந்தைகளுக்கு ஓவியப் பயிற்சியும் அளித்து வருகிறார்!

மூவருமே தங்களின் வெற்றிக்குக் காரணம் என்று ஒரே விஷயத்தைக் குறிப்பிடுகிறார்கள் : குடும்பத்தினரின் முழுமையான ஒத்துழைப்பு!

— **எஸ். சந்திரமௌலி**
படம் : **ரவிசங்கரன்**

கடை முழுவதும் சர்ச்சில் படங்களே!

ஒரு தடவை சர்ச்சில் கடை வீதியில் நடந்து கொண்டிருந்தார். அப்போது படங்கள் விற்கப்படும் கடை அவர் பார்வையில் பட்டது. என்ன ஆச்சரியம். அந்தக் கடை முழுவதும் சர்ச்சிலின் படங்கள் தொங்கிக்கொண்டு இருந்தன. சர்ச்சிலுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. ஆவலுடன் கடைக்காரரை அணுகிய சர்ச்சில், ''ஏன் என்னுடைய படங்களை மட்டுமே விற்பனைக்கு வைத்துள்ளாய்? மற்றவர்களின் படங்களையும் விற்பதுதானே?'' என்று கேட்டார். அதற்குக் கடைக்காரர் ''மற்றவர்கள் படங்கள் எல்லாம் வித்துப் போச்சுங்க...'' என அமைதியாகக் கூறினார்.



— 'அறிஞர்கள் வாழ்விலே...' என்ற நூலிலிருந்து...

விளம்பரம் இல்லாமல் வியாபாரம் செய்வது காதலியைப் பார்த்து இருட்டிலே கண்ணடிப்பது போல்தான்.

— ஃபில் ஹாரிஸ்

ரஷ்யாவைச் சேர்ந்த புகழ் பெற்ற எழுத்தாளர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் நான்கு. அந்தப் புத்தகங்களைப் படிக்கவோ, அல்லது விற்பனை செய்யவோ ரஷ்யாவில் தடை எதுவும் கிடையாது. இருந்தாலும், அந்தப் புத்தகங்களை விற்பனை செய்ததற்காக மாஸ்கோவிலுள்ள ஒரு கடைக்காரர் சிறையில் அடைக்கப்பட்டார். ஏன்? அந்தப் புத்தகங்களைத் தலைப்பு வாரியாக வரிசைப்படுத்தி வைத்திருந்த முறைதான் காரணம். அவர் அடுக்கி வைத்திருந்த புத்தகப் பெயர்கள் முறையே...

1) மாஸ்கோவுக்கு வெளியே வெகு தொலைவில்...

2) பல மாடிக் கட்டடங்களின் நிழலில்...

3) அயல்நாட்டுக் கொடியின் கீழ்...

4) நாங்கள் வாழ விரும்புகிறோம்..

— 'துணுக் துணுக்குகள்' என்ற நூலிலிருந்து...

தொகுப்பு: மலர் சூர்யா

கே. பாலச்சந்தர் வழங்கும்

ஊஞ்சல்



பைரவியும் விஷ்ணுவும் எதிரெதிர் வீட்டில் வசிப்பவர்கள். இரண்டு குடும்பங்களும் நல்ல நட்பு. விதவைத் தாயுடன் வசிக்கும் விஷ்ணு ஏர் இந்தியாவின் உயர் அதிகாரி. பைரவியோ மத்திய குடும்பத்தைச் சேர்ந்த டைப்பிஸ்டாக பணிபுரிபவள். அவளை விட குறைவாக சம்பாதிக்கும் தந்தையும், 12 வயதில் ஒரு தம்பியும். பைரவி விஷ்ணுவை மனதாரக் காதலிக்கிறாள். ஆனால் விஷ்ணுவோ, பாடகியான பல்லவியை பெற்றோர் சம்மதத்துடன் காதலித்து நிச்சயதார்த்தமும் நடக்கிறது.

பைரவிக்கு அதிர்ச்சி! விஷ்ணுவை எக்காரணத்திற்காகவும் இழக்கத் தயாராயில்லை அவள்! ஒரு முடிவுக்கு வருகிறாள் – உடனே பல்லவியுடன் நெருங்கிப் பழகி அவளுடைய தீவிர நட்புக்கு ஆளாகிறாள்! இப்பொழுது தன்னுடைய திட்டத்தை செயல்படுத்த தொடங்குகிறாள். பல்லவியையும், விஷ்ணுவையும் பிரிப்பதற்கு!

அநாமதேய கடிதங்கள், நம்பக்கூடிய கிசுகிசு, விஷ்ணுவின் பேச்சுக்கள் அடங்கிய குறிப்பிட்ட கேசட் – இது போல எத்தனையோ முயற்சிகள் மூலம் அவள் விஷ்ணுவை பல்லவியிடமிருந்து பிரிக்க பார்க்கிறாள். ஏனென்றால் அவள் எக்காரணத்திற்காகவும் விஷ்ணுவை இழக்கத் தயாராயில்லை!

ஆனால் பைரவியின் ஒவ்வொரு முயற்சியும் முறியடிக்கப்படுகிறது! யாரால்?

அவள் விஷ்ணுவை அடைந்தாளா? அல்லது விஷ்ணு தடைகளைத் தாண்டி பல்லவியை மணந்தானா?

விஷ்ணுவை யார் அடைந்தார்கள்?

இந்த இழையில்தான் கதையின் ஓட்டம்! விறுவிறுப்பு!
இது ஒரு இளமையான சங்கீதக் காதல் கதை!
காணத் தவறாதீர்கள்! உங்கள் விஜய் டிவியில்!

கதை, திரைக்கதை & வசனம் : தேவிபாலா

இயக்கம் : சுந்தர் கே. விஜயன்

நடிகர்கள் : எஸ்.பி.பி., சரண், ஷாலினி & ஸ்ரீதுர்கா.

vijay
புதுமை என்றென்றும்

விஜய் டி.வியில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இரவு 8.30 மணிக்கு

- ADVT -

அமர்ந்த கோலத்து அழகன்

சூரியகுலத் தோன்றலான சிபிச் சக்கரவர்த்தி அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்றியே தீருவது என்ற விரதம் கொண்டிருந்தவர். யாராவது சோதனை செய்தால் தானே அவருடைய மகிமை தெரிய வரும்! இந்திரனுக்கு மண்ணுலகத்தில் நீதி தவறாமல் தர்மநெறியில் நின்று ஆட்சி செய்பவர்களிடம் கொஞ்சம் பயம். இந்திர பதவிக்குப் போட்டிக்கு வந்து விடுவாரோ என்ற கவலைதான். பதவியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு தேவர்களையும் ஆட்டிப் படைத்திருக்கிறது!

சிபிச் சக்கரவர்த்திக்கு அப்படியெல்லாம் நோக்கம் ஒன்றும் இல்லை. ஆனாலும் இந்திரன், அக்னிதேவன் இருவரும் சிபியைச் சோதிக்க நினைத்தார்கள். அக்னி ஒரு புறாவாக மாறிப் பறந்தார். இந்திரன் வேட உருவில் புறாவைத் தொடர்ந்து வந்தான். பறக்கும் புறா அரசர் வருவதைப் பார்த்தது. அவர் மடியில் வந்து விழுந்தது. அதன் நடுங்கும் உடலை அணைத்துக் கொண்டார் மன்னர். வேடனிடம் திருப்பித் தர மறுத்தார்.

இந்திர வேடன் கேட்டான். "இந்தப் புறாவின் எடைக்கு எடை உங்கள் சதையைக் கொடுங்கள்" (இந்தக் கதையைக் கேட்டுத்தான் ஷேக்ஸ்பியர் "மர்ச்சண்ட் ஆப் வெனிஸ்" எழுதினாராம்.) என்றான். மன்னர் தயங்கவில்லை. தராசு கொண்டு வரச் செய்தார். புறாவை ஒரு தட்டில் வைத்தார். உடைவாளை எடுத்துத் தன் உடலிலிருந்து சதையை வெட்டி வெட்டி வைத்தார். எவ்வளவு தடவை இப்படிச் செய்தும் புறாவின் தட்டு மேலேறவில்லை. கடைசியில் எலும்புக்கூடான சிபி தானே தராசுத் தட்டில் ஏறி உட்கார்ந்தார். எல்லோரும் அலறினார்கள். ஒரு புறாவுக்காகத் தன்னையே அழித்துக் கொள்ளும் அரசனைப் பார்த்து விம்மினார்கள்.

இந்த அதிசயக் காட்சியைப் பார்த்து வியந்தது யார் என்று எண்ணுகிறீர்கள்! சிபியின் இந்த ஒப்பற்ற தியாகத்தைப் பார்க்கக் கிழக்கு நோக்கி வீற்றிருந்த நந்தி நாதப் பெருமான் சடாரென்று மேற்கு நோக்கித் திரும்பினாராம். அப்படியே திகைத்து அமர்ந்து விட்டார். பகவான் அருட்கண் பார்வை பட்டால் என்னாகும்? அக்னியும், இந்திரனும் வெட்கித் தலைகுனிய, சிபிச் சக்கரவர்த்தி முன்னை விட தேஜஸுடன் ஜொலித்தார்.

இப்படி சிபியின் தியாகத்தைக் கண்டு பிரமித்து அருள்புரிந்த பெருமான் வீற்றிருப்பது திருநந்திபுர விண்ணகரம் என்ற நாதன் கோவிலில். இவருக்கு நாத நாதன், ஜகந்நாதன் என்ற பெயர்கள் உண்டு.

வடக்கே ஒரிஸ்ஸா மாநிலத்திலுள்ள ஜகந்நாத க்ஷேத்திரமான பூரி தலத்துக்கு இணை



• நாதநாத ஜகந்நாதன் - உற்சவர்

ஆனந்தி

யாக இந்தத் தலம் தக்ஷிண ஜகந்நாதம் என்று பெயர் பெற்றிருக்கிறது.

பல ஆண்டுகளாக சந்தடியில்லா மலிருந்த இந்தக் கோவில் சமீப காலமாகப் பிரசித்தி அடைந்து வரு கிறது. அடியார்கள் வரவு அதிகரித் திருக்கிறது. கோவில் வானமாமலை மடத்து ஜீயர் சுவாமிகளின் ஆதீனத் தினால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. நித்ய பூஜைகளும், விழாக்களும் குறை வில்லாமல் இப்போது நடந்து வரு கின்றன.

இந்த நாதன் கோவில் என்கிற தலம் கும்பகோணத்துக்கருகில் திரு மலைராஜன் வாய்க்காலுக்கருகில் இருக்கிறது. பட்டீச்வரம் சென்று அங்கிருந்து நாதன் கோவிலை அடையலாம். நான் போய் இறங்கிய போது ஒரு தனியார் பேருந்து வந்து நின்றது. பல அன்பர்கள் தரிசனத் துக்காக வந்திறங்கினார்கள். கோவிலில் ஒரு தனிக்களையும், கலகலப்பும் ஏற்பட்டது!




• கருடாழ்வார், சந்நிதியை நோக்கி இருக்கிறார்...

நந்திநாத நாதப்பெருமான்

அன்றைய தினம் தை அமாவாசை, சனிக்கிழமை சிரா வண நக்ஷத்திரம் என்று பேசிக் கொண்டார்கள். கிட்டத்தட்ட உச்சியாகி விட்டது.

நந்திநாதர் என்றும், நாத நாதன் என்றும், ஜகந்நாதன் என்றும் பெயர் பெற்றுள்ள விண்ணகரப் பெருமான் சந்நிதியில் நிற்கும் போது பரமேச்வரனின் பரம பக்தரும், பல் லாண்டு காலம் தவம் செய்து கைலாய நாதனைத் தாங்கும் பேறு பெற்றவருமான திருநந்தித்தேவரின் நினைவு வந்தது. ஜகந் நாதப் பெருமான் நந்திநாதனான கதையைக் கேட்போம்.

ஒரு சமயம் நந்திதேவர் ஸ்ரீமந் நாரா யணனுக்கே சிவபெருமானின் மகிமையை எடுத்துச் சொன்னார். அப்படிச் சிவத் தொண்டராக இருந்தவர் திருக்கைலாய மலையில் காவல் புரிந்து கொண்டிருந்தார். யாராக இருந்தாலும் அதிகார நந்தியின் அனுமதி இல்லாமல் ஈசனைத் தரிசனம் செய்ய முடியாது.



• திருமஞ்சன மண்டபம்

ஒரு சமயம் சிவபெருமான் பார்வதி தேவிக்கு மந்திர உபதேசம் செய்துகொண் டிருந்தார். அந்தச் சமயத்தில் மயிலேறி ஆடி வந்தார் முருகப் பெருமான். நந்திகேசுவரர் முருகப் பெருமானின் அழகில் மயங்கிப் போய் விட்டார். செல்லப் பிள்ளை. வீரப் பிள்ளை, அழகுப் பிள்ளை, ஞானப் பிள்ளை. அவருடைய பேச்சின் அழகில் சொக்கிப் போய் அம்மையப்பனைப் பார்க்க அனு

உலக மகா சொதப்பல்!

அமெரிக்காவின் புகழ் பெற்ற கவிஞர்களில் ஒருவர் சார்ல் சான்பர்க். அவருடைய படைப்புகளைக் கொண்ட கண்காட்சியை ஒரு ஊரில் நூலகத்தில் நடத்தினர். அந்தக் கவிஞரைப் பாராட்டி பேசிய பெரிய அமெரிக்க நாடாளுமன்ற அங்கத்தினர், "நமது அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய கவிஞர் மறைவுக்காக நாடு முழுவதும் வருந்துகிறது. கவிஞர் சார்ல் சான்பர்க் மிகப் புகழ் பெற்றவர். அவரைப் பற்றி நான் மிருதியாக என்ன சொல்ல முடியும்? காலஞ் சென்ற நண்பருக்கு நீங்கள் செலுத்தும் சிறப்பில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு பங்கெடுத்துக் கொள்கிறேன்" என்று பேசினார். கூடியிருந்த அனைவரும் நகைத்தனர். இதன் உச்சக் கட்டம் மேடையில் இருந்த கவிஞர் சான்பர்க் பலமாகக் கை தட்டி ஆரவாரம் செய்ததுதான்!



— வாசுதேவன்

மதித்து விட்டார். உபதேசம் செய்து கொண் டிருந்த போது குழந்தையை அனுப்பி உமை யின் கவனம் சிதறச் செய்ததால் ஈசன் நந் தியைச் சபித்து விட்டார். நந்தி தேவர் பூலோகம் வந்து சேர்ந்தார் தவம் செய்ய. அவர் வந்த இடம் குடந்தை நகரத்தின் அருகில் இருந்த புண்ணிய விண்ணகரம். நந்திதேவர் முதலில் இந்தத் தலத்தில் ஒரு குளம் வெட்டித் திருப்பணி செய்தார். அதற்கு இன்றும் நந்தி தீர்த்தப் புஷ்கரிணி என்ற பெயர் வழங்குகிறது.

நந்திக்கு சாபவிமோசனம் அளித்த புண்ணியன் ஆதலால் நந்தி நாத நாதன் ஆனார் ஜகந்நாதப் பெருமான்.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி யில் சொல்லப்படுகிற தலம் இது.

பன்னிரு ஆழ்வார்களைத் தவிர இன் னும் எத்தனையோ கவிகளும் மெய்யன் பர்களும் ஸ்ரீமந் நாராயணனைப் பாடித் துதித்திருக்கிறார்கள்.

அத்தங்கி தாதாரியர் தொண்டன் என்ற பக்தர் ஒரு அந்தாதி பாடியிருக்கிறார்.

தொன்மைப் பிரான் நிமி நந்திக்கு
முன் வரும் தூய நந்தி
மென்மைத் தடத்தன் அனந்த
விமானத்தன் மேற்றிசையாய்
மின் மைக்கண் சங்க வல்லிக் கீசன்
விண்ணகரீசன் துயில்
புன்மை தவிர்க்கும் செகநாத
நந்திபுரப் பரனே.

என்று பாடல். மிகவும் தொன்மையான வன், நிமிக்கும் நந்திக்கும் அருளியவன். நந்தி தீர்த்தத்தை உடையவன். அனந்த விமானத்தில் குடிகொண்டிருப்பவன். மேற்குப் பார்த்தவன். மின்னுகின்ற மை தீட் டிய கண்ணையுடைய சங்க வல்லியின் மணா ளன். விண்ணகரத்து ஈசன். துயில்கின்றவன் என்று பாடுகிறார்.

இவர் அனந்த விமா னம் என்று சொல்கிறார். பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் மந்தார விமா னம் என்கிறார். கோவி லில் நந்தி விமானம் என்றார்கள். பகவான் எந்த விமானத்தின் கீழ் இருந்தால் என்ன? ஸ்ரீமந் நாராயணன் வீற்றிருக்கும் இட மெல்லாம் விண்ணகரம்தான். வைகுண் டம்தான். நிமி என்று இவர் சொல்வது சிபிச் சக்கரவர்த்திதான் என்று எண்ண வேண்டி யிருக்கிறது. ஆனால் இங்கே பகவான் வீற்றி ருந்த கோலத்தில்தான் காட்சி தருகிறார். துயிலவில்லை!

செந்தாமரைத் தடங்கள் செங்கனி வாய் எம்பெருமான் ஸ்ரீதேவி பூதேவியுடன் வீற்றிருக்கும் கோலம் பார்த்துப் பார்த்து அனுபவித்து ரசிக்க வேண்டியது. எவ்வளவு

பெரிய மூலவர்!

பட்டர் தீபாராதனை செய்து "இங்கே நந்திகேசுவரர் இருக்கார். நந்திதேவருக்குப் பிரத்யட்சமான பெருமாள்" என்று சுவரில் ஒரு சிற்பத்தைக் காட்டினார்.

மன்னஞ்சப் பாரதத்துப்
பாண்டவர்க்காய்ப் படைதொட்டான்
நன்னெஞ்சே! நம் பெருமான்
நமக்கருள்தான் செய் வானே

என்ற திருவாய்மொழியில் இரண்டு வரிகள் நம்பெருமான் நம் பாரத நாட்டிற்கு நலம் செய்வான் என்ற நம்பிக்கையோடு வெளியே வந்தால் கருட வாகனத்திலிருந்து இறங்கி அலங்காரமாக நிற்கும் அண்ணலைக் காண்கிறோம். திருமஞ்சனப் பொருள் கள் ஒவ்வொன்றாய் வருகின்றன.

நந்தி நாதப் பெருமானின் அலங்காரங்கள் எல்லாம் களையப்பட்டு திருமஞ்சனத்துக்குத் தயாராகிறார். என்ன சௌந்தர்ய வடிவம்! தமிழ்நாட்டுச் சிற்பிகள் தெய்வ வடிவங்களை எவ்வளவு பக்தி சிரத்தையுடன் கல்லிலும், வெண்கலத்திலும் செதுக்கியிருக்கிறார்கள் என்று வியப்படைகிறோம்.

நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்
நாக்கு வழித்து நீராட்டும் அந்நம்பிக்கு
வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்
மூக்கும் இருந்த வா காணீரே!

என்ற நம்மாழ்வார் பாசுரம்தான் ஞாபகம் வருகிறது. நயனங்களில் கருணையையும், தீர்க்கமான எடுப்பான நாசியும் செம்பவள வாயில் இருந்திய புன்னகையும் உடைய இந்தப் பெருமானை, அழகு வடிவான பரம்பொருளைக் குழந்தையாக மடியில் வைத்துக் கொஞ்சியும் நீராட்டியும் மகிழ்ந்த யசோதையின் பாக்கியத்தை என்னவென்று சொல்வது!

புனித நீராடல் முடிந்து செண்பகவல்லித் தாயாரிடம் கொண்டு சேர்க்கிறார்கள். இவ்வளவு நேரமும் தேவியும், ஆண்டாளும் அன்பரைப் பிரிந்திருந்தார்களே. இப்படிப் பட்ட ஒரு புருஷோத்தமனைக் கண நேரமும் பிரிந்திருக்க மனம் வருமா என்ன?

செண்பகவல்லித் தாயாரும் நாதநாதனும் சேர்ந்து சேவை சாதிக்கும் மங்களகரமான காட்சியைக் கண்களால் தரிசிக்கிறோம். ஆழ்வார்களுக்கு எப்படி இந்த விக்ரஹ வடிவங்கள் பரம்பொருளாகவே தெரிந்தார்கள்! எப்படி உன்னன்போடு பக்தி செலுத்தினார்கள் என்ற அனுபவத்தில் ஒரு

கணநேரம் தோய்ந்து மீண்டும் இந்த உலகத்துச் சூழ்நிலைக்குத் திரும்புகிறோம்.

செண்பகவல்லித் தாயார் சந்நிதி தனியாகவும் இருக்கிறது. இந்த திருப்பதியில் தாயாரும் பெருமாளும் ஒருவரையொருவர் எதிர்நோக்க வீற்றிருப்பது ஒரு சிறப்பு. செண்பகவல்லி நாராயணனைப் பார்த்துக் கொண்டே இருக்கிறாரா? நாராயணன் சதா தன் பத்தினியையே பார்த்துக் கொண்டு வீற்றிருக்கிறாரா? இதற்கு விடை ஏது? திருமகளைத் தன் மார்பில் தாங்கிக் கொண்டிருந்தால் பார்த்துக் கொண்டேயிருக்க முடியாது என்று எதிரே ஏள்ளப் பண்ணியிருக்கிறார்களோ!

திருமங்கையாழ்வார் பத்துப் பாடல்களால் இந்தப் பதியை ஏற்றிப் பாடியிருக்கிறார்.

முதல் பாடலில் கடைசி வரியில், "நாதனுறைகின்ற நகர் நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே" என்று தன் மனத்தைத் தனக்கு முன்னாலேயே பகவான் வீற்றிருக்கும் பதியை அடையும்படி தூண்டுகிறார்.

"சிறைகொள் மயில் குயில் பயில
மலர்கள்உக
அளி முரல அடிகொள் நெடு மா
நறை செய் பொழில் மழை தவழும்
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே"

என்று நந்திபுர விண்ணகரத்தின் இயற்கை அழகைப் பாடியிருக்கிறார். மயில்கள் தோகை விரிக்கக் குயில் பாட, வண்டுகள் ரீங்காரமிட மலர்கள் தேன் சிந்த, நீண்ட வேரோடிய மாமரங்களிலிருந்து தேன் சொட்டச் சூழ்ந்திருக்கும் சோலைகளை உடைய மேகங்கள் உலவுகின்ற நந்திபுர விண்ணகரம் என்று சிறப்பிக்கிறார்.

திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில் இவ்வாறு உரை எழுதப்பட்டிருக்கிறது :

"அல்லிக்கேணியில் தொண்டையர்கோன் போலவும், பரமேச்சுர விண்ணகரத்தில் பல்லவர் மல்லையர்கோன் போலவும், அட்டபுயகரத்தில் வயிரமேகன் போலவும், திருநறையூரில் கோச்செங்கணான் போலவும் இத் திருப்பதியில் நந்திவருமனென்னுமோரரசன் திருப்பணிகள் செய்தனனென்று சொல்லிப் போவார்கள்."

இதைப் படித்ததும் கலைக்களஞ்சியத்தைத் தேடிப் பிடித்து கோவில் வரலாற்றைப் பார்த்தேன்.

"பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் நந்திபுரம் என்ற பெயரில் பல்லவர்களின் தலைநகராக இருந்து வந்தது. எட்டாம் நூற்றாண்டில் இதில் குறிப்பிட்டுள்ள நந்தி, 65 ஆண்டுகள் அரசாண்ட இரண்டாம் நந்திவர்ம பல்லவனே ஆவான். இந்த நகரம் அமைத்துக் கோட்டை கொத்தளங்கள் எழுப்பி விஷ்ணு கோவில் ஒன்றும் கட்டிய பெருமை இவனைச் சேரும். பிறகு சோழர்கள் காலத்தில் அரண்மனைகளும், பள்ளிப்படை வீடுகளும் எழுப்பப்பட்டு சீரும் சிறப்புமாக விளங்கி வந்தது. கல்வெட்டுக்களில் பழையாறையான நந்திபுரம் என்று குறிப்பிடப்படுகிறது. நந்திபுரத்தை ஆயிரந்தளி என்றும் சாஸனங்கள் குறிப்பிடுகின்றன. ஆயிரந்தளி என்பது பல மண்டபங்களும் அரண்மனைகளும் உள்ள பெரிய வளாகம் என்று சொல்கிறார்கள். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலே கூட இங்கே அரண்மனைச் சிதைவுகள் காணப்பட்டதாம்" என்று கலைக்களஞ்சியத்தில் காணப்படுகிறது.

இதற்கெல்லாம் மேலாக 9-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் கூட நந்திபுரத்து வரி விகிதப்படியே அக்காலத்து அரசும் ஆயங்களும் தம் வரி விகிதங்களை அமைத்துக் கொண்டன.

- இது வரலாறு.

நந்தி வர்மன் காலத்திலும் பழையாறை சோழர்களின் தலைநகரமாக இருந்த காலத்திலும் இந்த நந்திபுர ஜகந்நாதப் பெருமான் கோவில் சீரும் சிறப்புமாக இருந்திருக்கும். மீண்டும் ஜீயர் சுவாமிகள் காலத்தில் புதுப்பொலிவு பெற்று வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

படங்கள் : ஸ்ரீஹரி



காதலன்: மடி மீது தலை வைத்து விடியும்வரை தூங்குவோம்னு நான் பாடினா நீ ஏன் ஷாக் ஆகற?

காதலி: கட்டில், மெத்தை, தலகாணியெல்லாம் வாங்காம இப்படியே காலத்தை ஓட்டிருவீங்களோன்னு ஒரு பயம் தான்!

— எஸ். மாலதி

“ஆப்ரிக்காவிலுள்ள சோமாலியாவில் நான் இருந்தபோது ஐந்தாறு பேர் ஓர் ஒட்டகத்தில் போய்க் கொண்டிருந்தார்கள். ஓர் இடத்தில் ஒட்டகத்தை நிறுத்தி, அத்தனை பேரும் கீழே இறங்கினார்கள். ஒருவன் மட்டும் ஒட்டகத்தின் வயிற்றை நோக்கி ஓர் அம்பை எய்தான். கொட கொடவென்று ஒட்டகத்தின் வயிற்றிலிருந்து கொட்டிய இரத்தத்தை, குழந்தைகள் உட்பட அத்தனை பேரும் தண்ணீர் குடிப்பது மாதிரி ஏந்திக் குடித்தார்கள். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'எதற்கு இப்படிச் செய்தீர்கள்?' என்று கேட்டேன். “தாகம்! எங்குமே குடிக்க நீர் கிடைக்கவில்லை!” என்றார்கள். இந்த நிகழ்ச்சி என் மனசை உறுத்தியது. ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் கடலில் தண்ணீரை வைத்துக் கொண்டு, இப்படி அலைகிறார்களே என்று நினைத்தேன். எளிய முறையில், இரண்டே இரண்டு பானைகளை வைத்துக் கொண்டு, கடல் நீரைக் குடிநீராக்க முடியும் என்று அவர்கள் முன்னாலேயே செய்து காண்பித்தேன். அதற்குப் பிறகு, உப்புத் தண்ணீரை உபயோகமான குடிநீராக மாற்றுவது எப்படி என்ற எளிய வழிமுறைகளைப் புத்தகங்கள் வாயிலாகவும், செயல்முறைச் சொற்பொழிவுகளாகவும், மக்களுக்குத் தெரிவித்து வருகிறேன்!”

– சொல்கிறவர் டாக்டர் ஃபெலிக்ஸ் ரயான். முன்னாள் யு.என். அதிகாரி. தமது 50 ஆவது வயதிலேயே இந்திய அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டு, யு.என்., யுனிடோ, ஐ.எல்.ஓ., யு.என்.இ.பி., யுனெஸ்கோ என்று பல ஐக்கிய நாட்டு அமைப்புகளில் ஆலோசகராகப் பணியாற்றி விட்டு, இப்போது சென்னைக்கே வந்து விட்டார்.

உப்பு நீரைக் குடிநீராக்கும் நிபுணர் என்று உலகம் முழுக்க, பல நாடுகளிலும் இவர் மதிக்கப்படுகிறார். கடல் நீர் நிறைய இருக்கிற பட்டினங்களில், நிலத்தடி அல்லது கிணற்று நீர் உப்பாக இருந்தால் கூடப் பயன்படுத்த, அடுக்குமாடிக் குடியிருப்புவாசிகளுக்கு இவர் சொல்லும் எளிய, சிக்கனமான முறை இதோ :

தேவை : இரண்டு பாத்திரங்களும், சூரிய ஒளி ஊடுருவிச் செல்கிற மாதிரியான பிளாஸ்டிக் தாள் அல்லது துணியும்.


இரண்டு பாத்திரங்களில் ஒன்று பெரியது, மற்றது சிறியது. முதலில் பெரிய பாத்திரத்தை நான் முழுதும் சூரிய ஒளி விழும் இடத்தில் வைக்கவும். இதன் நடுப் பகுதியில் சிறிய பாத்திரத்தை வைக்கவும். சிறிய பாத்திரத்தின் உள்ளே ஒரு பெரிய கல், அல்லது பாரத்தை வைக்க வேண்டும்.

கடல் அல்லது உப்பு நீரை பெரிய பாத்திரத்தில், சிறு பாத்திரத்தின் விளிம்பைத் தொடுகிற வரை ஊற்ற வேண்டும். பின்னர் பெரிய பாத்திரத்தின் மீது ஒரு மெல்லிய பிளாஸ்டிக்



கடல் நீரில் உப்பை நீக்குங்கள்; தண்ணீருக்கு வரியை நீக்குங்கள்!

துணி அல்லது காகிதத்தை விரித்து, கயிற்றாலோ நாடாவினாலோ இறுகக் கட்டி விட வேண்டும். பிளாஸ்டிக் துணியின் நடுவில் ஒரு சிறு கல் அல்லது எடையை வைத்து, புனல் போன்ற குழியை ஏற்படுத்தவும். இந்தக் குழிவான பகுதி, சிறு பாத்திரத்தைத் தொடக் கூடாது. இந்த வடிகலம், காலையிலிருந்து மாலை வரை சூரிய ஒளி படும் இடத்தில் வைக்கப்பட வேண்டும். பகல் வெப்பத்தில், பெரிய பாத்திரத்திலுள்ள நீர் ஆவியாகி, இரவில் சுற்றுச் சூழல் குளிரும் போது மறுபடியும் நீராகி, பெரிய பாத்திரத்தின் மேல் அமைந்துள்ள புனல் போன்ற அமைப்பின் உதவியால், உள்ளிருக்கும் பாத்திரத்தில் நிரம்பி விடும். இம்மாதிரி ஒவ்வொரு நாளும் காலையில் சிறு பாத்திரத்தில் நிரம்பும் குடிநீரை அகற்றி, பெரிய பாத்திரத்தில், மறுபடி முன்னர் சொன்ன மாதிரியே உப்பு அல்லது கடல் நீரை நிரப்ப வேண்டும். இந்தக் குடிநீரைக் காய்ச்ச வேண்டியதில்லை. சுவை அல்லது நறுமணம் வேண்டுவோர் சீரகம், துளசி அல்லது கறிவேப்பிலை சேர்க்கலாம்.



* எளிய முறையில் கடல்நீரைக் குடிநீராக்கலாம்!

கடலின் அருகேயே, சற்றுத் தள்ளி, நான்கு டாங்க்குகளை நிறுவி, முதல் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டாங்க்கில் கடல் நீரை பைப் மூலம் செலுத்தி, அதன் மீது கண்ணாடித் துண்டுகள் வழியாக சூரிய ஒளி பாய்ந்து, இரண்டாம், மூன்றாம் சிமென்ட் தொட்டிகளில் உப்பு நீர் ஆவியாகிப் போனபின், நான்காவது தொட்டியில் குடிநீர் சேமிக்கிற முறையைப் பிரபலப்படுத்தி வருகிறார் ரயான்.

'கடல்நீரைக் குடிநீராக மாற்றுவது எப்படி?' என்ற இவரது புத்தகத்தில் பதினான்கு வழிமுறைகளைப் படத்துடன் விளக்கியிருக்கிறார்.

பஞ்சாயத்துகளும், முனிசிபாலிடிகளும், மாநகராட்சிகளும் ஏன் – அரசாங்கமே கூட, பயன்படுத்திக் கொள்ளும் பல எளிய திட்டங்களை நிறையச் சொல்லுகிறார் ரயான்.

'ஏழைமை ஒழிய வேண்டுமானால், தண்ணீர்ச் சண்டை ஓய வேண்டுமானால், வீட்டு உபயோகங்களுக்கு உப்பு நீரைக் குடிநீராக்கும் முயற்சிகள் எடுத்தால்தான் நல்லது. ஒரு கஷ்டமான பிரச்னை வரும்போது அதைக் கையாளாமல் ஒதுக்கி வைத்து விட்டு, அப்புறம் விழித்துக் கொண்டு நிற்பதை விட்டு, தனியார் தொண்டு நிறுவனங்கள் தரும் புதிய வழிமுறைகளைச் சோதித்துப் பார்க்கத் துணிய வேண்டும்' என்று யூனிசெஃப் அதிகாரி கௌரிசங்கர் கோஷ் சொல்லியிருப்பதைச் சுட்டிக்காட்டும் ரயான், இந்த மார்ச் மாதம் மார்கரெட் தாட்சர், ஜிம்மி கார்ட்டர் இவர்களுடன், 'குளோபல்-500' கௌரவம் பெற இருக்கிறார். இது யு.என். குளோபல் லாரேட் அவார்டு. ஏழை எளிய மக்கள் மீது அக்கறை கொண்டு அவர்கள் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டவர் என்ற அமெரிக்க அவார்டு. 1996-ல், தண்ணீருக்காகக் கஷ்டப்பட்டவர்களுக்கு மிகப் பெரிய அளவில் உதவியதற்காக இன்டர்நேஷனல் பயாக்ரஃபிகல் சென்டரின், 'இன்டர்நேஷனல் மேன் அஃப் த இயர்' விருதும் பெற்றுள்ளார் ரயான்.

"தேசிய, சர்வதேசிய அரசாங்க மாநாடுகளில், அத்தியாவசியமான பொருளாகத் தண்ணீரை அறிவிக்க வேண்டும்; ஏழைகளும் அதற்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஏழைகள் கொடுக்க விரும்பினாலும், அவர்களிடம் ஏது பணம்? ஐ.எம்.எஃப். அறிக்கையின் சமீபத்திய கணக்குப்படி, இந்தியாவில் 1168.55 மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள். இந்தியாவிலும், வளரும் நாடுகளிலும் இருக்கிற ஏழைகள் பணம் கொடுக்க முடியாத நிலையில், பணம் கொடுத்தால்தான் தண்ணீர் என்று கட்டாயப்படுத்தினால், இவர்கள் இருக்கும் பகுதிகளில் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகரித்து, நோய்கள் தாக்கி, மரணத்தில்தான் முடியும். இதைத் தவிர்க்க, பெரிய பெரிய நிறுவனங்கள், பன்னாட்டு ஸ்தாபனங்கள் எல்லாம் தங்கள் அனாவசியமான, அதிகப்படியான செலவைக் குறைத்துக் கொண்டு, அந்த நிதியை, வளரும் நாடுகளில் தண்ணீர் கிடைக்க, கடல் நீரை உபயோகிக்கத் தகுந்த நீராக

மாற்ற, கொடுத்து உதவலாமே?'' என்கிறார் ரயான்.

"ஸ்டாக்ஹோமில் நடந்த யு.என். மாநாட்டில், நல்ல காற்றும், சுத்தமான நீரும், தூய்மையான சுற்றுப்புறச் சூழலும், மனிதனின் அடிப்படை உரிமைகளாக பிரகடனம் செய்யப்பட்டன. ஆக, இந்த அடிப்படை மனித உரிமைகளை, வரிகள் ஏதும் வசூலிக்காமல் அரசாங்கம் மக்களுக்கு வழங்கக் கடமைப்பட்டிருக்கிறது. தொலைபேசி, மின்சாரம், தபால் – தந்தி, ஸ்டாம்ப் கட்டணங்கள், பதிவுத் துறைக் கட்டணங்கள், காபிடல் கெய்ன்ஸ் வரி, கஸ்டம்ஸ், எக்சைஸ் வரிகள் இவற்றை முறையாக வசூலித்து, திறமையாகப் பயன்படுத்தினால் போதும். நீருக்கு வரி வசூலிக்கவே வேண்டாம். வேண்டுமானால் புகையிலை, லிக்கர், அழகுச் சாதனங்கள், ஆடம்பர அணிகளுக்கு வரிகள் கூட்டலாம்!'' என்கிறார்.

இனி வரும் ஆண்டுகளில், குடிதண்ணீர் வசதிக்காக பில்லியன்கணக்கான டாலர்கள் செலவாகும் என்று உலக வங்கியின் நியூஸ் லெட்டர் ஒன்றை நம்மிடம் காண்பித்தார் ரயான்.

''ஹாங்காங்கில் நல்ல தண்ணீர் குறைச்சல். அதனால் இரண்டு பைப் லைன் முறை அங்கே கடைப்பிடிக்கப்படுகிறது. ஒன்று, நல்ல சுத்தமான குடிநீர் வழங்க. இன்னொன்று, டாய்லெட்டுகளுக்கும், சாலை, பிளாட்பாரங்களைக் கழுவவும், கழிவு அகற்றவும் ஆன கடல் நீர். இதை மற்ற நாடுகளும் பின்பற்றலாம்'' என்கிறார்.

சந்திப்பு, கட்டுரை : **சாருகேசி**

படம் : **வெங்கடேஷ்**

போர்வெல் நீரை நல்ல நீராக்க -

தண்ணீர்த் தட்டுப்பாடு வந்தே விட்டது. மெட்ரோ வாட்டர் வழங்கும் நீர் வெறும் சொட்டுக்களாகக் குறைந்து விட்டது.

எல்லோரும் போர்வெல் போட ஆரம்பித்து விட்டார்கள்!

ஆனால் தண்ணீர் சிவப்பாக, இரும்பு வாசனையோடு வருகிறதே? இதற்கு ஒரு சின்னக் கருவியைக் கண்டுபிடித்து, விற்பனை செய்கிறது டெரிக் ஹோம் அப்ளையன்ஸஸ் நிறுவனம்.



கருவியின் பெயர் 'மெகா'.

மணிக்கு நூறு லிட்டர் இரும்புச் சுவை நீரை, வெள்ளை வெளேர் என்று நல்ல தண்ணீராக மாற்றித் தருகிறது. மாங்கனீஸ், சல்ஃபர், தூசுத் துகள்கள் என்று எல்லாவற்றையும் அகற்றி விடுகிறது. நீரின் ஒரிஜினல் வாசனையையும் மாற்றி விடுகிறது.

இந்தக் கருவி பிவிசி பிளாஸ்டிக்கில் செய்யப்படுகிறதாம். அதனால் துருப்பிடிக்க வாய்ப்பில்லை. மின்சக்தி தேவையில்லை. எளிதாகக் கழற்றவோ, பொருத்தவோ செய்யலாம். பராமரிப்பும் எளிது.

பாத்ரூம் சுவரிலோ, சமையல் அறையிலோ உள்ள குழாய்கள் ஏதேனும் ஒன்றில் பொருத்தி விட்டால், குளிக்கவும் துணி துவைக்கவும் நல்ல நீர் கிடைக்கும். சமையலுக்கு ஏற்ற சுத்தமான நீர் கிடைக்கும்.

''20 பிபிஎம் அளவு இரும்புச்சத்து உள்ள நீரைக் கூட குடிக்கிற நீராக மாற்றக்கூடிய திறன் 'மெகா'வுக்கு இருக்கிறது'' என்கிறார் இதன் விற்பனையாளர் எழில். ஒரு வருட உத்தரவாதம் உண்டாம்!

— எஸ்.வி.என்.

தலையில் சீயக்காயை வைத்து அழுத்தித் தேய்த்துக் கொண்டபோது, கண்ணில் சீயக்காய் இறங்கி, கண் எரிந்தது. கூடவே மனசும் எரிவதாய்ப்பட்டது. மனசு எரியுமா? எரிதலை மனசு அறியுமா? மனசு சங்கடப்படுத்தியது. ஹால் மௌனத்தால் மூடிய மாதிரி சப்தமின்றி இருந்தது. அப்பா வந்திருக்கிறார். மாப்பிள்ளை ஏதாவது பேசுவார் என்று அப்பா எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். கணேஷ் ஏதும் பேச மாட்டான். அப்பாவைக் கண்டால் ஆகாது. கணேஷைப் போலவே அத்தைக்கும் அப்பாவைக் கண்டால் பிடிக்காது.

''உன் அப்பன் என்னை - உன்னை பார்க்கவா வர்றான்? திங்கறதுக்கு வர்றான்.'' என்பாள் அத்தை. அப்பாவை அவன் இவன் என்று பேசுவது சங்கடமாய் இருந்தது. வயசுக்கு மரியாதை தர வேண்டாமா? மகளைப் பார்க்க வருவது தப்பா? மகள் சமைத்த சாப்பாட்டைச் சாப்பிடுவது தப்பா?



டி.வி.யின் 'சப்தம் அதிகரித்த மாதிரியிருந்தது. பாட்டுச் சப்தம் ஹாலை கடந்து, நடு அறையைக் கடந்து, பாத்ரூம் கதவையும் தாண்டிக் கேட்டது. அப்பாவை எரிச்சல் அடையச் செய்ய வேண்டும் என்பதற்காகவே கணேஷ் வால்யூமை கூட்டி வைத்து இருப்பதாய்த் தோன்றியது. அப்பாவுக்கு சப்தம் போட்டுப் பேசுவது பிடிக்காது. அப்பாவுக்கு சப்தமாய்ப் பாட்டு கேட்பது கூட பிடிக்காது.

அப்பா மென்மையானவர். அவரது

சொல்லும் செயலும், நியாயமானதாய், உண்மையாய், அமைதியாய் இருக்கும். அவ்விதமாய்த்தான் தன்னையும் வளர்த்திருக்கிறார். தலைக்கு எண்ணெய் தேய்க்காமல் இருந்திருந்தால் கூட அப்பாவுடன் பேசிக் கொண்டிருந்து விட்டு அப்பா போனபின் குளித்திருக்கலாம். இப்போது அப்பாவை ஹாலில் உட்கார வைத்து விட்டுக் குளிக்க வந்தது தர்மசங்கடமாய் இருந்தது.

அத்தை ஒரு காப்பி கூடக் கொடுக்க மாட்டாள்.

அப்பாவுக்கு இப்போதெல்லாம் என்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அம்மா இருந்தவரை அப்பா பத்து நாளைக்கொருதரமோ, பதினைந்து நாளைக்கொருதரமோதான்



வருவார். அம்மா இறந்த இந்த இரண்டு மாதமாய் அப்பா யாரும் இல்லாமல் தவிக்கிறார். ரொம்பவும் சோர்ந்து போயிருக்கிறார். அம்மாவின் மரணத்தை அவர் எதிர்பார்க்கவில்லை. யாராவது இன்னொருவரின் மரணத்தை எதிர்பார்த்திருப்பார்களா?

அம்மா நோய்வாய்ப்பட்டு இறக்கவில்லை. திடகாத்திரமாய் இருந்தாள். திடீர் என்று நெஞ்சு வலிக்க, ஆஸ்பத்திரிக்கு ஆட்டோவில் போகையிலேயே இறந்து போனாள். கூடவே இருந்த அப்பாவுக்கு எப்படியிருக்கும்? அப்பாவால் நம்ப முடியவில்லை. ஆனால் நடந்த சம்பவம் இது. நம்பித்தான் ஆக வேண்டும். அப்பா மீது அம்மாவும், அம்மா மீது அப்பாவும் வெகு காதலாய் இருந்தார்கள், கடைசி நிமிஷ பிரிவு வரை.

அவர்களின் தாம்பத்ய வாழ்க்கையைப் பார்த்த எனக்கு, என் தாம்பத்ய வாழ்க்கை கசப்பான ஒன்றாக அமைந்து விட்டது. இவ்விதமாய்த்தான் என் வாழ்க்கை அமையும் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அப்பா என் ஏமாற்றத்தை உணர்ந்தவராய்ச் சொன்னார். "எங்க வாழ்க்கையை, எங்க அன்னியோன்யத்தை எல்லாரிடமும் நீ எதிர்பார்க்க முடியாது. அய்யோ இப்படி இருக்கேன்னு இடிஞ்சு போயிடாதே..." என்றார். அப்பாவுக்கு எல்லாமே அம்மாதான். அம்மா இறந்து போனபின் இரண்டு தினம் அப்பாவோடு இருந்தேன். மூன்றாவது நாள் கணேஷ் வந்து விட்டான் அழைக்க. ''அப்பா பாவம்'' என்றேன்.

"அவரு பாவம்னா – நா பாவம் இல்லையா?" என்று இழுத்துக் கொண்டு வந்து விட்டான். ஒவ்வொரு சமயமும் அப்பாவின் ஞாபகம் இம்சையைத் தரும்.

சாப்பிடும் போது, அப்பா சாப்பாட்டிற்கு என்ன பண்ணுவார் என்று தோன்றும். அப்பாவுக்கு ஹோட்டலில் சாப்பிடவே முடியாது. பிடிக்காது. அம்மாதான் சமைக்க வேண்டும். சாப்பாட்டில் இருந்து உடை உடுத்துவது வரை எல்லாமே அம்மாவின் கைவண்ணம்தான். நாலைந்து நாட்கள் கழித்து வீட்டிற்குப் போனபோது, அப்பாவின் கோலம் கலங்கடித்தது. மனசைப் பிசைந்தது.

என்ன சொல்லி அப்பாவைத் தேற்றுவது? அப்பா ரிடையராகி விட்டார். வேலைக்குப் போனாலாவது அவர் மனசு ஓரளவு நலம் பெறும். ''யாரு இருக்கா எனக்கு?'' என்று குழந்தையாய் அழுத அப்பாவைத் தேற்ற முடியவில்லை. அம்மாவின் மரணத்தை என்னால் ஜீரணித்துக் கொள்ள முடிந்தது. அப்பாவால் முடியவில்லை. அன்று மதியத்துக்கு சமைத்து வைத்தேன். நாலைந்து நாளாய்ச் சரியாய்ச் சாப்பிட்டாரோ என்னவோ... நன்றாகச் சாப்பிட்டார். கணேஷ் இரவு வந்து அழைத்து வந்து விட்டான்.

அப்பா இரண்டு தினங்களுக்கு ஒருமுறை வந்து போவார். இது இவர்களுக்குப் பொறுக்கவில்லை. அவர் எங்கு போவார்? வேறு பசங்கள் இல்லை. என்னைப் பார்த்தால் அப்பா மனசு சுகப்படும். கட்டிக் கொடுத்து ஒரு வருஷமாச்சு.

இன்னும் ரெண்டு நாளைக்கொரு தடவை வந்து போவார். "உன்னை என்ன திங்கவா போறேன்?" அத்தை சொல்வாள்.

அப்பா எங்கும் சுற்ற மாட்டார். ஆபீஸ்... ஆபீஸை விட்டால் வீடு என்பதாகத்தான் இருந்தது அவர் வாழ்க்கை. வெளியே போவதாய் இருந்தால் அம்மாவை அழைத்துக் கொண்டுதான் போவார். அப்போதெல்லாம் நான் கிண்டல் செய்வது உண்டு அப்பாவை. 'நீங்க என்ன யங் கப்பிள்ஸா?' என்று.

மூணு மாசமாகி விட்டது – அம்மா இறந்து. அப்பா ஷேவிங் பண்ணாமல் இருந்தார். அம்மா இருந்தவரை இரண்டு அல்லது மூன்று நாளைக்கொருதடவை ஷேவிங் பண்ணுவார். இல்லையேல் அம்மா, "ஏன் பண்ணலை?" என்று கேட்பாள். எனக்கு ஆச்சர்யமாய் இருக்கும். இங்கே என் கணவர் ஷேவிங் பண்ணாதது குறித்து – இல்லை வேறு எது பற்றியும் பேசினால் குதர்க்கமாய்ப் பேசுவார். ஒவ்வொரு தீபாவளிக்கும் அம்மாதான் டிரஸ் எடுப்பாள். சரியாய் அப்பாவிடம் இல்லாத



''என்ன ஸார் உங்க முகம் பேய் அறைஞ்சாப்ல இருக்கு?''

''டாக்டர் பீஸுன்னு மரண அடி கொடுத்தா பின்னே எப்படி இருக்குமாம்!''

– ஆர்.ஆர். சாமி

நிறமாய்ப் பார்த்து எடுப்பாள். எப்படித்தான் அம்மாவால் அப்படி எடுக்க முடிகிறதோ? அப்பாவுக்கு நரை விழுந்தபோது அம்மா தான் டை அடிக்கச் சொல்வாள்.

நான் இங்கு – என் கணவனுக்கு டிரஸ் செலக்ட் செய்ததில்லை. அவனுக்காக எதுவுமே தேர்வு செய்ததில்லை. அவனுக்காக என்ன – எனக்காகக் கூட நான் எதுவும் எடுத்துக் கொண்டதில்லை. அவனுக்கும் சரி, எனக்கும் சரி – அவனாகத்தான் தேர்வு செய்வான். கலர் ஒன்றாக இருக்கிறதோ இல்லையோ போட்டுத்தான் ஆக வேண்டும். "ஏம்மா இப்படி என் வாழ்க்கை" என்று அம்மாவிடம் அழுதிருக்கிறேன். இனி நான் யாரிடம் சொல்லி அழ முடியும்?

குளித்து விட்டு வெளியே வந்தேன். அப்பா கண்களை மூடிக் கொண்டிருந்தார். டீ.வி. ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் ஹாலில் அப்பாவைத் தவிர யாருமில்லை. அத்தை கிச்சனில் இருக்கலாம். கணேஷ் எங்கே.. வராந்தாவில் இருந்து புகை வந்தது. சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கலாம். நல்ல வேளை ஹாலிலேயே தம் அடிக்கவில்லை. டீ.வி.யை ஆஃப் செய்தேன். "யாரடா அது?" என்று கணேஷ் எட்டிப் பார்த்தான். என்னைப் பார்த்து விட்டுப் பேசாமலிருந்தான்.

அப்பா கண் திறந்தார். கையில் பை. கொடுத்தார். ''எதுக்குப்பா இந்த பார்மாலிட்டி'' என்றேன். "உட்காரும்மா – நல்லா தலையைத் துவட்டு. ஜலதோஷம் பிடிச்சுக்கும்'' என்றார். ''காப்பி குடிச்சீங்களாப்பா... குடிக்கறீங்களா?''

"வரும் போதுதான் குடிச்சேன்."

"அத்தை கிச்சனிலிருந்து குரல் கொடுத்தாள். இந்த தோசையை வந்து ஊத்து. என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு காலங்கார்த்தாலே?"

அப்பா எழுந்தார். ''அப்ப நா வரேன்ம்மா...'' என்றார்.

''இருங்கப்பா... அதுக்குள்ள என்ன அவசரம்?'' என்றதும் உட்கார்ந்தார். அப்பாவுக்கு யாரோடாவது பேச வேண்டும் என்று தோன்றியிருக்கலாம். அப்பா யாரோடு பேச முடியும்? யார் இருக்கிறார்கள்? அம்மாவோடு தொணதொணவென்று பேசிக் கொண்டிருக்க அப்பாவுக்குப் பிடிக்கும்.

உனக்கென்னம்மா அவசரம்... அப்பாவை இப்படி விட்டு விட்டுப் போய் விட்டாயே... அப்பாவின் தலையைப் பார்த்தேன். முடி வெட்டாமல் முடி பம்மென்றிருந்தது. அப்பாவிற்கு இன்னும் துளிகூட வழுக்கை விழவில்லை. கணேஷுக்கு அதற்குள்ளேயே விழுந்து விட்டது. அப்பாவின் முடியில் கறுப்புச் சாயம் போய், பாதி கறுப்பும், பாதி நரையுமாய் இருந்தது. அப்பாவின் சட்டைக் காலரில் அழுக்காய் இருந்தது. அப்பாவின் கைக் கடிகாரம் ஓடாமல் இருந்தது. பாட்டரி தீர்ந்து இருக்கக்கூடும். அவர் தன்னையே இழந்தவராய் இருந்தார். என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இருங்கப்பா – தோசை எடுத்துட்டு வரேன்" என்று கிச்சனுக்கு வந்து, வேக வேகமாய் தோசையை வார்த்து ஹாலுக்கு கொண்டு வந்தேன். அப்பாவுக்கு வைத்தேன்.

''நீங்க காதலிக்கிற ஒவ்வொரு ஆணுமே உங்களைக் கைவிட்டுடறாங்களே, அதைப் பற்றி என்ன சொல்றீங்க?''

''நான் காதலிக்காத யாரும் என்னை கைவிட முடியாதுன்னு புரியுது!''

– சீர்காழி வி. ரேவதி



அப்பா ஆர்வமாய்ச் சாப்பிட்டார். "அம்மா மாதிரியே சமைக்கிறே" என்றார். அவர் முகத்தில் ஒரு பிரகாசம்.

நான் உண்டாகியிருக்கிறேன். அப்பாவிடம் சொல்ல வேண்டும். அப்பாவிடம் சொல்ல சங்கோஜமாய் இருந்தது. "அப்பா..." என்றேன்.

"என்னம்மா...?"

லேசான வெட்கம் என்னைச் சுற்றி வட்டம் இட்டது.

"என்னம்மா தயங்கறே... மாப்பிள்ளை ஏதும் சப்தம் போட்டாரா?"

"இல்லைப்பா. நா உண்டாகியிருக்கேன்!"

அப்பா நிமிர்ந்து பார்த்தார். பளிச்சென்று அவர் முகத்தில் ஒரு மலர்ச்சி. மூணு மாசமாய் அவர் முகத்தில் தொலைந்து போயிருந்த வெளிச்சம் இப்போது அரும்பிய மாதிரி ஓர் உணர்வு எனக்கு. சட்டென்று சொன்னார் – "அம்மாதான் வந்து பிறக்கப் போறா" என்று.



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED
#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356. Pager : 9610 - 114668
Web Page : http/www.chennaibiz.com/svhome
Email: svhome@chennaibiz.com

"5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



Lakshmi Iyer
ஸ்ரீமதி, லக்ஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்,
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது, இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)** இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி திற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டிசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

- ★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டிசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டிஸ், ஸ்பாண்டிலைட்டிஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.
- ★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க இப்போதே தொடர்பு கொள்க.
தொலைபேசி
0413-346683

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, ஃபார்ச்சூன் பேக்கரி எதிரில்)
Fax : 91 - 0413 - 346683

பொன்னியின் செல்வன்

இருபத்து நான்காம் அத்தியாயம்

இளவரசியின் அவசரம்

இளவரசிகளை உபசரித்து வரவேற்றுப் பீடங்களில் உட்காரச் செய்த பிறகு அநிருத்தர் தாமும் அமர்ந்தார்.

"தேவி! என்னைப் பார்க்க வேணுமென்று சொல்லி அனுப்பினால் நானே வந்திருக்க மாட்டேனா? இவ்வளவு அவசரமாக வந்த காரணம் என்ன? சக்கரவர்த்தி சௌக்கியமாயிருக்கிறார் அல்லவா?" என்று கேட்டார்.

"சக்கரவர்த்தியின் தேக சுகம் எப்போதும் போலிருக்கிறது, ஐயா! ஆனால் மனசுதான் கொஞ்சமும் சரியாக இல்லை. நேற்று இரவு அடித்த கடும்புயல் தந்தையின் மனத்தை ரொம்பவும் பாதித்திருக்கிறது. இராத்திரியெல்லாம் அவர் தூங்கவில்லை. குடிசைகளில் வாழும் ஏழை எளிய மக்கள் என்ன கஷ்டப் பட்டிருப்பார்கள் என்பதை எண்ணி அடிக்கடி புலம்பினார். பொழுது விடிந்தவுடன் தங்களைப் போய்ப் பார்க்கும்படி சொன்னார். புயலினால் கஷ்ட நஷ்டம் அடைந்தவர்களுக்கெல்லாம் உடனே உதவி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாம். அதைத் தங்களிடம் சொல்லுவதற்காகவே முக்கியமாக வந்தேன்!" என்றாள் இளைய பிராட்டி குந்தவை.

"தேவி! இந்த எளியவனால் என்ன செய்ய முடியும்? முதன் மந்திரி என்ற பெயர்தான் எனக்கு என்பது தங்களுக்குத் தெரியாதா? பெரிய பழுவேட்டரையர் இந்தச் சமயம் ஊரை விட்டுப் போயிருக்கிறார். பொக்கிஷத்தை இறுக்கிப் பூட்டிக்கொண்டுதான் போயிருப்பார். அவருடைய சம்மதமின்றிக்

அமரர் கல்கி

காலாந்தக கண்டரால் கூடப் பொக்கிஷ சாலையைத் திறக்க முடியாதே! கஷ்ட நஷ்டங்களை அடைந்தவர்களுக்கு நான் என்ன உதவி செய்ய முடியும்? வாசலில் பலர் வந்து காத்திருப்பதைத் தாங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் அவர்களைப் பார்ப்பதற்கே எனக்கு வெட்கமாயிருக்கிறது. அதனால்தான் வெளியில் செல்வதற்கே தயங்கிக்கொண்டிருக்கிறேன்'' என்று அநிருத்தப் பிரம்மராயர் பஞ்சப் பாட்டுப் பாடினார்.

''ஐயா! அதைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம். என்னுடைய சொந்த உடைமைகள் அனைத்தையும் கொடுக்கிறேன். என் அன்னையும் அவ்விதமே கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள். சக்கரவர்த்தியின் அரண்மனையில் உள்ள எல்லாப் பொருள்களையும் தாங்கள் எடுத்துக் கொள்ளலாம். தந்தை அவ்விதம் சொல்லி அனுப்பினார்கள். ஏழைகளின் கஷ்டங்களுக்குத் தாற்காலிக சாந்தியாக வேனும் ஏதேனும் ஏற்பாடு செய்யுங்கள்...''

"தங்களுடைய சொந்த உடைமைகள் யானைப் படைக்குச் சோளப் பொரி கொடுத்ததாகவே இருக்கும். சோழ நாடு முழுவதும் நேற்றுப் புயல் அடித்திருக்கிறது. எங்கெங்கே என்னென்ன நேர்ந்திருக்கிறது என்ற செய்திகளே இன்னும் கிட்டவில்லை. இதோ நிற்கிறானே, என் பரமானந்த சீடன், இவன் பெரும் பயங்கரமான செய்தியைச் சொல்லுகிறான். கடல் பொங்கி எழுந்து கோடிக்கரை முதல் நாகைப்பட்டினம் வரையில் கடலோரமுள்ள ஊர்களையெல்லாம் மூழ்கடித்து விட்டதாம்...!

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அங்கிருந்த மூன்று பெண்களின் முகங்களும் பீதிகரமான மாறுதலை அடைந்ததை அநிருத்தர் கவனித்தார். உடனே அவர் தொடர்ந்து ஆறுதலாகக் கூறினார்.

"ஆனால் அதை நான் நம்பவில்லை. இவன் கூறுவது வெறும் வதந்திதான். புயலைக் காட்டிலும் வேகமாக வதந்தி பரவியிருக்கிறது. கடற்கரைப் பகுதியிலிருந்து செய்தி வருவதற்கே இன்னும் நேரமாகவில்லை. குதிரை மீது தூதர்கள் வந்தாலும் இன்று மத்தியானத்துக்கு மேலேதான் இங்கு வந்து சேர முடியும். இதற்கிடையில் நம்மால் செய்யக் கூடிய உதவிகளையெல்லாம் செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.''

இளையபிராட்டி குந்தவை தன் மனக் குழப்பத்தைச் சிறிது சமாளித்துக் கொண்டு, ''ஐயா! நாகைப்பட்டினம் பற்றிய வதந்தி என் காதிலும் விழுந்தது. அதைப் பற்றியும் தங்களிடம் பேசலாம் என்று வந்தேன். இப்போதுதானே சூடாமணி விஹாரத்துக்கு நாம் நிவந்தங்கள் அளித்து விட்டு வந்தோம்? விஹாரத்துக்கு விபத்து நேர்ந்தால், பாவம், அதில் உள்ள பிக்ஷுக்கள் என்ன செய்வார்கள்?'' என்று கூறிவிட்டு, பூங்குழலி நின்ற இடத்தை நோக்கினாள்.

''ஐயா! இந்தப் பெண் இங்கே எப்படி வந்தாள்? கோடிக்கரைத் தியாக விடங்கரின் மகள் பூங்குழலி அல்லவா இவள்?'' என்று வினவினாள்.

''ஆமாம்; தியாகவிடங்கரின் குமாரி தான். ஆனால் அவரைப் போல் சாதுவல்ல. ரொம்பப் பொல்லாத பெண். தனக்குச் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுத் தொந்தரவு விளைவிப்பவள்!'' என்றார் முதன் மந்திரி.

இளையபிராட்டிக்கு வேறு வித ஐயப்பாடு தோன்றியது. அருள்மொழியைப் பற்றி உளவு அறிவதற்காகத்தான் பூங்குழலியை இங்கே அநிருத்தர் தருவித்திருக்கிறாரோ? தந்திர வித்தைகளில் கை தேர்ந்த மந்திரியாயிற்றே? எப்படியிருந்தாலும் பூங்குழலியின் சார்பில் தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, ''அப்படியொன்றுமில்லையே? பூங்குழலி மிக நல்ல பெண் ஆயிற்றே! இங்கே, வா, அம்மா! முதன்மந்திரி ஏன் உன் பேரில் கோபமாயிருக்கிறார்? அவருக்கு ஏதேனும் தொந்தரவு கொடுத்தாயா?'' என்றாள்.

பூங்குழலி சற்று நெருங்கி வந்து, "தேவி! முதன் மந்திரியையே தாங்கள் கேளுங்கள்! நான் முதன்மந்திரிக்குத் தொந்தரவு கொடுத்தேனா, அவர் எனக்குத் தொந்தரவு கொடுத்தாரா என்று கேளுங்கள்!" என்றாள்.

"ஓகோ! நீயும் கோபமாகத்தான் இருக்கிறாய்! இங்கே வா, பெண்ணே! என் அருகில் உட்கார்ந்து கொள்!" என்று கூறி இளையபிராட்டி பூங்குழலியைத் தன் அருகில் உட்கார வைத்துக்கொண்டாள்.

"ஐயா! இந்தப் பெண்ணை எதற்காகத் தருவித்தீர்கள்? ஏதாவது முக்கியமான காரியமா?" என்று கேட்டாள்.

"அம்மணி! நான் இந்தப் பெண்ணைத் தருவிக்கவில்லை. இப்படி ஒரு பொல்லாத பெண் இருக்கிறாள் என்ற செய்தியே எனக்குத் தெரியாது. இவளாகவேதான்..." என்று அநிருத்தர் தயங்கினார்.

"தேவி! முதன் மந்திரி ஏன் தயங்குகிறார்? மிச்சத்தையும் சொல்லச் சொல்லுங்கள்!" என்றாள் பூங்குழலி.

"இவளாகவேதான் இவளுடைய அத்தையைத் தேடிக்கொண்டு வந்தாள்!"

"யார் இவளுடைய அத்தை? ஓகோ! சேந்தன் அமுதனின் அன்னையா? கோட்டைக்கு வெளியில் அல்லவா அவர்களுடைய வீடு இருக்கிறது?"

"இல்லை; அமுதனின் அன்னை இல்லை. இவளுக்கு இன்னொரு ஊமை அத்தை இருக்கிறாள். இளவரசி! தங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டிய செய்திதான். ஈழ நாட்டுக் காடுகளில் பித்துப் பிடித்தவள் போல் திரிந்து கொண்டிருந்த ஊமை ஸ்திரீ ஒருவர் உண்டு. அந்த மாதரசியை இங்கே ஒரு முக்கியமான காரியத்துக்காக அழைத்து வர விரும்பினேன். அதற்காகப் பெரு முயற்சி செய்தேன். கடைசியில், வெற்றி கிட்டியது. அந்தச் சமயத்தில்..."

குந்தவை தேவி சொல்ல முடியாத பரபரப்பை அடைந்து, "உண்மையாகவா? அந்தப் பெண்மணி இப்போது இங்கே இருக்கிறாளா? நான் உடனே பார்க்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே பீடத்தை விட்டு எழுந்தாள்.

"மன்னிக்க வேண்டும், தேவி! வெற்றி கிட்டும் சமயத்தில் இந்தப் பெண் குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டாள்!" என்றார் முதன் மந்திரி.

குந்தவை மிக்க ஏமாற்றத்துடன் திரும்பவும் உட்கார்ந்து, "பூங்குழலி! இது உண்மைதானா? என்ன காரியம் செய்து விட்டாய்?" என்றாள்.

"தேவி! என் அத்தையை அழைத்து வருவதற்கு முதன்மந்திரி கையாண்ட முறையைக் கேளுங்கள். அப்போது என் பேரில் குற்றம் சொல்ல மாட்டீர்கள்!" என்றாள் பூங்குழலி.

பிறகு, முதன்மந்திரி நடந்தவற்றைச் சுருக்கமாகக் கூறினார்.

கேட்டுக் கொண்டிருந்த இளைய பிராட்டி, "அப்படியானால், இந்தக் கோட்டைக்குப் பக்கத்திலேதானே எங்கேனும் இருக்க வேணும்? தேடிப் பார்க்கலாமே?" என்றாள்.

"நல்லவேளையாகத் தேடிப் பார்க்க வேண்டிய அவசியம் கூட இல்லை. சேந்தன் அமுதன் குடிசையில் இன்று காலையில் பார்த்ததாக என் சீடன் சொல்லுகிறான்" என்றார் முதன்மந்திரி.

"அப்படியானால், ஏன் வீண் கால தாமதம்! மற்றக் காரியங்கள் எல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். நாமே போய் அழைத்து வருவோம். தாங்கள் வருவதற்கில்லா விட்டால் நான் போய் வருகிறேன். வானதி! புறப்படு, போகலாம்!" என்றாள்.

ஆழ்வார்க்கடியான் அப்போது குறுக்கிட்டு, "தேவி! சற்று யோசித்துச் செய்ய வேண்டும். புதிய மனிதர்கள் கூட்டமாய் வருவதைக் கண்டால் அந்த அம்மாள் மிரண்டு ஓடத் தொடங்கி விடலாம். பிறகு, புயலைப் பிடித்தாலும் அந்த அம்மணியைப் பிடிக்க முடியாது" என்று சொன்னான்.

"ஆம், திருமலை சொல்லுவது சரிதான். நம்மைப் பார்த்ததும் பூங்குழலியின் அத்தை மிரண்டு ஓடத் தொடங்கி விடலாம். நமது பிரயத்தனமெல்லாம் வீணாகி விடும்! நீ என்ன யோசனை சொல்கிறாய், திருமலை!" என்று முதன் மந்திரி கேட்

டார்.

"இந்தப் பெண்மணியையே போய் அழைத்து வரும்படி சொல்லுங்கள். இந்த உலகத்தில் அந்த மாதரசியைக் கட்டுக்குள் வைக்கக் கூடியவர்கள் இரண்டே பேர்தான்! அவர்களில் இந்தப் பெண் ஒருத்தி!"

"இன்னொருவர் யார்?" என்று முதன் மந்திரி கேட்டதற்கு, ஆழ்வார்க்கடியான் சிறிது தயங்கி "இன்னொருவர் கடலில் முழுகி விட்டதாக ஊரெல்லாம் வதந்தியாயிருக்



கிறது!'' என்றான்.

குந்தவை தேவி அதைக் கவனியாதவள் போல், பூங்குழலியைப் பார்த்து, ''கரையர் மகனே! உடனே போய், உன் அத்தையை இங்கே அழைத்து வா! அவளுக்கு இங்கே ஒரு கெடுதியும் நேராது. மிக முக்கியமான காரிய மாக உன் அத்தையை உடனே நான் பார்க்க வேண்டியிருக்கிறது! எனக்





காக இந்த உதவி செய்வாய் அல்லவா?" என்றாள்.

"ஆகட்டும், அம்மா! முயன்று பார்க்கிறேன். ஆனாலும் முதன் மந்திரி இப்படிப்பட்ட உபாயத்தைக் கடைப்பிடித்திருக்க வேண்டியதில்லை. முன்னாலேயே எனக்குத் தெரிந்திருந்தால்..."

"ஆமாம்; விஷயங்களை மறைத்து வைப்பதில் இம்மாதிரி அசந்தர்ப்பங்கள் நேரத்தான் நேருகின்றன. அதை நானே உணர்ந்து வருத்தப்பட்டுக்கொண்டிருந்தேன். சீக்கிரம் அத்தையை அழைத்துக் கொண்டு வா! அதற்குப் பிறகு இன்னொரு முக்கியமான வேலை உனக்கு இருக்கிறது!" என்றாள் இளையபிராட்டி.

"திருமலை! நீயும் இந்தப் பெண்ணோடு போய் விட்டு வா! கோட்டை வாசல் வழியாக நீங்கள் வருவதில் ஏதேனும் சிரமம் இருந்தால், நமது அரண்மனைக்கு வரும் இரகசிய வழியில் அழைத்துக் கொண்டு வா!" என்றார் அநிருத்தர்.

பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் போன பிறகு, குந்தவை முதன்மந்திரியைப் பார்த்து, "ஐயா! வாசலில் வந்து காத்திருப்பவர்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி அனுப்பி விட்டு வாருங்கள். மிக முக்கியமான காரியங்களைப் பற்றித் தங்களிடம் ஆலோசனை கேட்க வேண்டியிருக்கிறது!" என்றாள்.

"இதோ வந்து விடுகிறேன், தாயே! எனக்கும் தங்களிடம் பேச வேண்டியதிருக்கிறது!" என்று சொல்லி விட்டு அநிருத்தர் சென்றார்.

இத்தனை நேரமும் மௌனமாக இருந்த வானதி, "அக்கா! பூங்குழலிக்கு இன்னொரு முக்கியமான காரியம் என்ன வைத்திருக்கிறீர்கள்? மறுபடியும் நாகைப் பட்டினத்துக்கு அனுப்பப் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஆம், வானதி! நீ வீணாகக் கவலைப் படாதே! பொன்னியின் செல்வனுக்கு ஆபத்து ஒன்றும் நேர்ந்து விடாது."

"நானும் அவளுடன் நாகைப்பட்டினத்துக்குப் போகிறேனே, அக்கா!"

"நீ போய் என்ன செய்வாய்? உன்னைக் காப்பாற்றுவதற்கு வேறு யாராவது வேண்டுமே?"

"அந்த ஓடக்காரிக்கு என்னைக் கண்டால் பிடிக்கவேயில்லை, அக்கா!"

"எப்படியடி அவள் மனத்தை நீ கண்டுபிடித்தாய்?"

"என்னுடன் அவள் பேசவே இல்லை!"

"நீயும் அவளோடு பேசவில்லை; அவளும் உன்னோடு பேசவில்லை."

"நான் அடிக்கடி அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் என்னை ஒரு தடவை கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. அவளுக்கு ஏதோ என் பேரில் கோபம்!"

"ஆமாமடி, வானதி! இந்த நாட்டில் உள்ள கலியாணமாகாத கன்னிப் பெண்களுக்கெல்லாம் உன் பேரில் கோபமாய்த் தானிருக்கும். அதற்காக நீ வருத்தப்படுவதில் பயனில்லை" என்று சொன்னாள் இளையபிராட்டி குந்தவைதேவி.

இருபத்து ஐந்தாம் அத்தியாயம்

அநிருத்தரின் குற்றம்

முதன்மந்திரி தம் அரண்மனை ஆசாரவாசலில் காத்திருந்தவர்களைப் பார்த்துப் பேசி அனுப்பி விட்டு விரைவிலேயே திரும்பி வந்தார்.

"அம்மணி! ஏதோ என்னால் முடிந்த வரைக்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். புயலினால் சேதங்களை அறிந்து வர நாலா பக்கமும் ஆட்களை அனுப்பியிருக்கிறேன். சின்னப் பழுவேட்டரையருக்கும் சொல்லி அனுப்பியிருக்கிறேன், நம் இருவரின் பொறுப்பிலும் பொக்கிஷ சாலையைத் திறந்து விட வேண்டும் என்று."

"ஐயா! பெரிய பழுவேட்டரையரின்

மாளிகையையொட்டி நிலவறைப் பொக்கிஷம் ஒன்று இருக்கிறதாமே! அதில் கணக்கில்லாத பொருள்கள் குவிந்து இருப்பது உண்மையா? பெரிய பிராட்டி ஒருதடவை சொன்னார்கள்."

"அதைத் திறந்தால் அதிலுள்ள பொருளைக் கொண்டு ஆயிரம் பெரிய கோவில்கள் புதிதாய்க் கட்டலாமே என்று அந்த அம்மாளுக்கு எண்ணம். நான்கூட அந்த நிலவறைக்குள் போனதில்லை, அம்மா! அதற்குள் ஒரு தடவை போகிறவர்கள் உயிரோடு திரும்புகிறதில்லை" என்றார் முதன் மந்திரி.

"அது போகட்டும், ஐயா! அந்த ஊமைத் தாயை இவர்கள் அழைத்துக் கொண்டு வந்து விடுவார்களா? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போய் விடுமோ என்று எனக்குக் கவலையாயிருக்கிறது" என்றாள் குந்தவை.

"தாயே! அந்த மாதரசியைப் பற்றித் தங்களுக்கு என்ன தெரியும்? எப்படித் தெரிந்தது? தாங்கள் ஏன் அவளைப் பற்றி இவ்வளவு பரபரப்பு அடைந்திருக்கிறீர்கள்...?" என்றார் அநிருத்தர்.

"ஐயா! சில தினங்களுக்கு முன்பு சக்கரவர்த்தியே என்னிடம் அந்த மாதரசியைப் பற்றிச் சொன்னார்."

"என்ன? அவள் உயிரோடிருப்பதாகச் சொன்னாரா, என்ன?"

"இல்லை, ஐயா! இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னார். அவள் இறந்து போய் விட்டதாகவே எண்ணிக்கொண்டிருக்கிறார். அதனாலேதான் அவருடைய சித்தம் கலங்கிப் போயிருக்கிறது. அந்த ஊமைத் தாய் கடலில் விழுந்து இறந்து போய் விட்டதாகத் தாங்கள்தான் தெரிந்து கொண்டு வந்து என் தந்தையிடத்தில் சொன்னீர்களாம்? பின், அந்த மாதரசி உயிரோடிருக்கும் செய்தி தங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"தங்களை அதே கேள்வி கேட்க வேண்டும் என்று எண்ணினேன். தங்களுக்கு எப்படித் தெரிந்தது, தேவி?"

"அதற்கென்ன, சொல்லுகிறேன். வாணர் குலத்து வீரர் ஈழத்துக்குப் போய்த் திரும்பி வந்தாரே, அவர் முதலில் சொன்னார். பிறகு, என் தம்பி அருள்மொழி..." என்று கூறிவிட்டு, குந்தவை தன் தவறைத் தானே உணர்ந்தவள் போல் வாயைக் கையினால் பொத்திக்கொண்டாள்.


"தேவி! இளவரசர் அருள்மொழி வர்மரைப் பற்றித் தாங்கள் என்னிடம் சொல்ல விரும்பவில்லையென்றால், சொல்ல வேண்டாம். தாங்கள் அந்தப் பெயரைக் குறிப்பிட்டதை நான் அடியோடு மறந்து விடுகிறேன்."

"இல்லை, ஐயா! தங்களிடம் எல்லாவற்றையும் சொல்லி விடுவது என்ற எண்ணத்துடனேயே வந்தேன். விஷயங்களை மூடி மறைத்து வைப்பதினால் தீமைதானே தவிர நன்மை ஒன்றுமில்லை என்பதைக் கண்டுகொண்டேன். நேற்றிரவு எனக்கு அது நன்றாய்த் தெரிந்தது. ஐயா! என் இளைய சகோதரனைக் கடல் கொண்டு போய் விடவில்லை. பொன்னியின் செல்வனைச் சமுத்திர ராஜன் காப்பாற்றிக் கரையில் சேர்த்தார். அவன் இப்போது நாகைப்பட்டினத்திலுள்ள புத்த விஹாரத்தில் இருக்கிறான். அவனைப் பார்ப்பதற்காகவே நான் நாகைப்பட்டினம் போயிருந்தேன். ஆனால் தங்களுக்கு இது எல்லாம் தெரியும் என்று எனக்கு ஒரு சந்தேகம் உண்டு."

"தாங்கள் சந்தேகித்தது நியாயமே. ஆனால் தேவி, தெரிந்ததாக நான் காட்டிக் கொள்ளவில்லையே! வேறு யாருடைய காரியத்தில் தலையிட்டாலும் தங்களுடைய காரியத்தில் தலையிடுவதில்லை என்று வைத்துக்கொண்டிருக்கிறேன். என்னுடைய ஆட்களுக்கும் அவ்விதமே கட்டளையிட்டிருக்கிறேன். தாங்கள் செய்வது எதுவும் உசிதமாகத்தான் இருக்கும் என்பது என் நம்பிக்கை. நானும் மலையமானும் கொடும்பாளூர் வேளானும் அடிக்கடி பேசிக்கொண்டிருக்கிறோம்; 'இளையபிராட்டி மட்டும் ஆண் பிள்ளையாய்ப் பிறந்திருந்தால், இந்த அகில உலகத்தையும் சோழர்களின் வெண் கொற்றக் குடையின் கீழ்க்கொண்டு வந்து தனியரசு செலுத்தி ஆண்டு வருவாள்' என்று."

"அந்த மாதிரி எண்ணம் எனக்கு இருந்தது உண்மைதான். நான் பெண்ணாகப் பிறந்திருந்தபோதிலும் என் சகோதரர்கள் மூலமாக அந்த மனோரதம் நிறைவேறும் என்று ஆசையுடன் இருந்தேன். அந்த




இருபத்தைந்து
வருஷங்களுக்கு முன்னால்
நடந்த நிகழ்ச்சிகளைக்
குந்தவையிடம் சொன்னார்
சுந்தர சோழர்...

ஆசையை இப்போது விட்டு விட்டேன். ஐயா! இராஜ்ய விஷயங்களில் பெண்கள் தலையிடவே கூடாது என்று முடிவு செய்து விட்டேன். பாருங்கள்! என் சகோதரனை நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் இருக்கும்படி செய்தேன். அதன் விபரீத பலனைப் பாருங்கள்."

"ஒன்றும் நேர்ந்து விடவில்லையே, தாயே! பொன்னியின் செல்வனை நடுக் கடலில் காப்பாற்றிய சமுத்திர ராஜன் இப்போது கரையில் பத்திரமாயிருக்கும்போது தீங்கு விளைத்து விடுவானா?"

"ஐயா! தாங்கள் உடனே என் தந்தையிடம் வந்து இவ்வாறு தைரியம் சொல்லுங்கள்."

"ஆகா! சக்கரவர்த்திக்குத் தெரியுமா, என்ன? இளவரசர் சூடாமணி விஹாரத்தில் இருக்கும் செய்தி!"

"நேற்று இரவுதான் சொன்னேன். சொல்லும்படியாக நேர்ந்துவிட்டது."

"ஆகா! இன்னும் கொஞ்ச நாள் சொல்லாமலிருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். தாங்கள் செய்திருந்தது மிக நல்ல ஏற்பாடு என்று நினைத்தேன். தேவி! சோழ நாடு முழுதும் ஒரே கொந்தளிப்பாயிருக்கிறது. நேற்று அடித்த புயல் காரணமாக வெளியில் ஏற்பட்ட கொந்தளிப்பு, சில நாளாகவே சோழ நாட்டு மக்களின் உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருக்கிறது. மதுராந்தகர் மீதும் பழுவேட்டரையர்கள் மீதும் ஜனங்கள் ஒரே கோபமாயிருக்கிறார்கள். சக்கரவர்த்தியைச் சிறையில் வைத்திருப்பதாக எண்ணுகிறார்கள். இளவரசரைச் சிறைப்படுத்திக்கொண்டு வரக் கப்பல்கள் அனுப்பப்பட்டதையும் அறிந்திருக்கிறார்கள். இளவரசரைப் பழுவேட்டரையர்கள்தான் கடலில் மூழ்கடித்து விட்டதாகப் பலர் நம்புகிறார்கள். இச் சமயத்தில் இளவரசர் இந்த நாட்டில் இருப்பது தெரிந்தால் மக்கள் கொதித்து எழுவார்கள். இளவரசரின் தலையில் இப்போதே மணிமகுடத்தைச் சூட்டி விட வேண்டும் என்று பெருங் கிளர்ச்சி செய்வார்கள். பழுவேட்டரையர்களும் சண்டைக்கு எப்போது முகாந்தரம் ஏற்படும் என்று காத்திருக்கிறார்கள். கொடும்பாளூர் பெரிய வேளார் பெரும்படை திரட்டிக்கொண்டு தஞ்சையை நோக்கி வந்துகொண்டிருக்கிறார். தேவி! சோழ நாட்டில் இரத்த வெள்ளம் ஓடப் போகிறது என்று அஞ்சுகிறேன். இந்தப் பெரிய சாம்ராஜ்யம் சகோதரச் சண்டையினால் அழிந்து விடுமோ என்று பயப்படுகிறேன். அப்படி ஒன்றும் நேராமலிருக்க வேண்டுமென்று அல்லும் பகலும் ஸ்ரீரங்கநாதரைப் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறேன்."

"என்னுடைய பிரார்த்தனையும் அதுவேதான், ஐயா! என் சகோதரர்கள் இந்தச் சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் ஏற வேண்டுமென்ற ஆசையை நான் விட்டு விட்டேன். என்னைப் பொறுத்தவரையில், மதுராந்தகனுக்கே முடி சூட்டுவதில் இப்போது எனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை."

"தங்களுக்கு ஆட்சேபமில்லை, தாயே! ஆனால் மக்களுக்கு ஆட்சேபம் இருக்கிறதே! சக்கரவர்த்தி இன்னும் பல்லாண்டு இவ்வுலகில் வாழ வேண்டும். ஆனால் விதி வசத்தினால் அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டதென்றால், அன்றைய தினமே இந்தச் சோழ நாடு முழுதும் ரண களமாகி விடும்..."

"ஐயா! அத்தகைய துர்க்கதி விரைவிலேயே நேர்ந்து விடுமோ என்று எனக்குப் பயம் அதிகமாயிருக்கிறது. நேற்றிரவு சக்கரவர்த்தியின் நிலை மிக்க கவலைக்கிடமாகி விட்டது. அதனாலேதான் அவரிடம் பொன்னியின் செல்வன் பத்திரமாயிருக்கிறான் என்று சொல்ல வேண்டியதாயிற்று. ஆனால், சொல்லியும் அவர் நம்பவில்லை! அவருக்கு நான் வெறுமே ஆறுதல் சொல்வதாக எண்ணிக்கொண்டார். பல வருஷங்களுக்கு முன்னால் மாண்டு போன 'பழிகாரி'யின் ஆவி அவருடைய புதல்வர்களின் மீது பழி வாங்குவதாக எண்ணிப் பிரமைகொண்டு பிதற்றுகிறார்..."

"அந்தோ? கடவுளே! என்ன விபரீதம்? நேற்று இரவு நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்!"

"அதற்காகத்தான் வந்தேன், ஐயா! சொல்லித் தங்களிடம் யோசனை கேட்பதற்காகவே வந்தேன். முன் தடவை சுந்தர சோழர் மருத்துவ சாலை ஏற்படுத்துவதற்காக நான் வந்த சமயத்தில், சக்கரவர்த்தி எனக்கு அந்தப் பழைய வரலாற்றைக் கூறினார். ஈழ நாட்டை அடுத்த

தீவில் தாம் ஒதுங்க நேர்ந்தபோது, கரையர் மகள் ஒருத்தி தம்மைக் கரடிக்கு இரையாகாமல் காப்பாற்றியது பற்றிச் சொன்னார். பின்னர் அத் தீவிலேயே சில மாத காலம் சொப்பன சொர்க்க லோகத்தில் வாழ்வதுபோல் அந்தப் பெண்ணுடன் வாழ்ந்திருந்ததைப் பற்றிச் சொன்னார். பின்னர் இந்தத் தஞ்சைபுரிக்கு அவர் அழைத்து வரப்பட்டதையும், இளவரசராக முடி சூட்டப்பட்டதையும் கூறினார். அரண்மனை வாசலில் கூடியிருந்த கூட்டத்தின் மத்தியில் கரையர் மகளைப் பார்த்ததையும், ஆருயிர் நண்பராகிய தங்களை விட்டு அவளைத் தேடிக் கொண்டு வரச் சொன்னதையும், தாங்கள் தேடிப் போய்த் திரும்பி வந்து அவள் கடலில் விழுந்து இறந்தாள் என்று தெரிவித்ததையும் கூறினார். அது முதல் அடிக்கடி அந்தக் கரையர் மகள் ஆவி வடிவத்தில் வந்து தம்மைத் துன்புறுத்துவதாகவும் சமீப காலத்தில் அவள் வருகை அதிகமாகியிருப்பதாகவும் சொன்னார்..."

"தேவி! அதையெல்லாம் நீங்கள் நம்பினீர்களா?"

"தந்தை கூறிய வரலாறு அவ்வளவு அதிசயமாயிருந்தபடியால் என் மனமும் மிக்க குழம்பி விட்டது. இறந்து போனவளின் ஆவி வந்து தந்தையைத் தொந்தரவு படுத்துவது சித்தப் பிரமையாயிருக்கலாம் என்று நினைத்தேன். பிறகு யோசித்துப் பார்க்கப் பார்க்க வேறு சில ஐயங்கள் உண்டாயின. வானதி ஒரு நாள் இரவு சக்கரவர்த்தியின் கூக்குரலைக் கேட்டு விட்டுப் போய்ப் பார்த்தாள். பழுவூர் இளையராணி மாதிரி ஓர் உருவம் மன்னரின் எதிரில் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு மூர்ச்சித்து விழுந்தாள். அது முதல் அந்தக் கரையர் மகளுக்கும் இந்தப் பழுவூர் இளையராணிக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்க வேண்டும் என்று தோன்றியது. வல்லவரையரும் அருள்மொழியும் கூறியதிலிருந்து அது உறுதியாயிற்று. ஐயா! நந்தினி தேவி ஒருவேளை அந்தக் கரையர் மகளின் புதல்வியாயிருக்க முடியுமா?"

"தங்களைப் போலவே நானும் ஊகிக்கத்தான் முடியும், தாயே! உருவ ஒற்றுமையைப் பார்த்தால் அப்படித்தான் கருத வேண்டியிருக்கிறது. ஆனால் அதிலிருந்து மட்டும் நிச்சயிக்க முடியுமா? ஒருவேளை கரையர் மகளின் கடைசி தங்கையாகக் கூட நந்தினி தேவி இருக்கலாம். இதையெல்லாம் பற்றி நிச்சயமாகத் தெரிந்தவர்கள் இப்போது மூன்று பேர்தான் இருக்கிறார்கள்..."

அவர்கள் யார், சுவாமி!"

"ஒருவர்தான் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி. அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒரு இரகசியம் இருந்து வேதனை செய்து வருகிறது. ஆனால் அது இன்னதென்பதை அவராகச் சொன்னாலொழிய, நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள இயலாது. மகானாகிய கண்டராதித்தர் காலமாகும் தறுவாயில் பெரிய பிராட்டி அதை அவரிடம் கூறினார் என்பது எனக்குத் தெரியும். கண்டராதித்தர் என்னிடம் சொல்லத் தொடங்கினார். இரண்டு வார்த்தை சொல்வதற்குள் அவருடைய மூச்சு நின்றுவிட்டது..."

"மற்ற இருவரும் யார், ஐயா?"

"மற்ற இருவரும் பேசத் தெரியாத ஊமைகள்; சேந்தன் அமுதனின் அன்னையும் பெரியன்னையுந்தான். இவர்களில் சேந்தன் அமுதனுடைய அன்னையிடமிருந்து நாம் ஒன்றும் தெரிந்து கொள்ள இயலாது. செம்பியன் மாதேவியிடம் அவள் அளவிலாத பக்தி உள்ளவள். அந்தத் தேவி உயிரோடிருக்கும் வரையில் இவள் ஒன்றும் தெரிவிக்க மாட்டாள். ஆகையினால்தான் அவருடைய தமக்கை மந்தாகினியை ஈழ நாட்டிலிருந்து அழைத்து வருவதற்கு நான் பெரும் பிரயத்தனம் செய்துகொண்டிருந்தேன்..."

"ஆகா! அந்தக் கரையர் மகளின் பெயர் மந்தாகினியா? அவள் உயிரோடிருப்பது தங்களுக்கு எப்போது தெரிந்தது?"

"தேவி! இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அது எனக்குத் தெரிந்த விஷயந்தான்."

"என்ன? என்ன? இருபத்தைந்து வருஷங்களாகத் தெரிந்துமா, என் தந்தையிடம் தாங்கள் சொல்லவில்லை? ஐயோ! அவள் இறந்து விட்டாள் என்ற எண்ணத்தினால் என் தந்தை எத்தனை மனோவேதனைக்கு உள்ளானார் என்பதெல்லாம் தங்களுக்குத் தெரியாதா?"

"தெரியும், தாயே! தெரியும்."

"தெரிந்துமா அவரிடம் உண்மையைச் சொல்லாதிருந்தீர்கள்?"

அநிருத்தர் ஒரு நெடிய பெருமூச்சு விட்டார். அவர் உள்ளத்தில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது என்பதை அவருடைய முகம் எடுத்துக்காட்டியது. பின்னர் அவர் கூறினார்:-


"தேவி! இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் நான் ஒரு குற்றம் செய்தேன். முதன்முதலாக அதை இப்போது தங்களிடந்தான் சொல்லுகிறேன். கரையர் மகளைத் தேடி வரும்படி தங்கள் தந்தை என்னை அனுப்பினார் அல்லவா? விரைவாகக் குதிரை மீது செல்லும் ஆட்களுடன் நானும் போனேன். கோடிக்கரை போய்ச் சேர்ந்தோம். அங்கே கொந்தளித்துக்கொண்டிருந்த கடலில் அவள் கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து விழுந்து விட்டாள் என்பதை அறிந்தோம். அந்தப் பயங்கரக் காட்சியை நேரில் பார்த்தவர்கள் சொன்னார்கள். தியாக விடங்கரே நடுங்கிய குரலில் நாக்குழறக் கூறினார். அதைத்தான் நானும் தஞ்சாவூருக்கு வந்து என் நண்பரிடம் தெரிவித்தேன்..."

"இதில் தங்கள் குற்றம் என்ன, ஐயா?" என்றாள் குந்தவை.

"குற்றம் இதுதான்! கரையர் மகள் கடலில் விழுந்தாளே தவிர, அதிலே முழுகிச் சாகவில்லை. அத்தகைய கொந்தளித்த கடலில் படகு விட்டுக்கொண்டு வந்த வலைஞன் ஒருவன் அவளைக் கண்டெடுத்துப் படகில் ஏற்றிக் காப்பாற்றி விட்டான். கோடிக்கரைக்கு வெகு தூரத்துக்கு அப்பால் அவன் வந்து கரையேறினான். திரும்பி வரும் வழியில் நான் அந்தக் கரையேறும் படகைப் பார்த்தேன். அதில் இருந்த பெண் யார் என்பதையும் தெரிந்துகொண்டேன். அந்தப் படகுக்காரனிடம் நிறையப் பொன் கொடுத்து அவளைப் பத்திரமாக இலங்கைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும்படியும் அங்கேயே இருக்கும்படியும் கூறினேன். அவனும் சம்மதித்துச் சென்றான். நான் திரும்பித் தஞ்சைக்கு வந்து கரையர் மகள் கடலில் விழுந்து மாண்டு விட்டதாகக் கூறினேன். தங்கள் தந்தைக்கு நன்மை செய்வதாக நினைத்துக்கொண்டுதான் மன மறிந்து அத்தகைய குற்றத்தைச் செய்தேன். அந்தக் குற்றம் இத்தனை காலத்துக்குப் பிறகு இப்படி ஒரு விபரீதமான விளைவை உண்டாக்குமென்று எதிர்பார்க்கவில்லை..."

இளையபிராட்டி குந்தவை அப்போது குறுக்கிட்டு, "ஐயா! தாங்கள் செய்தது குற்றமாயிருந்தாலும் என் தந்தைக்கு நன்மை செய்யும் எண்ணத்துடனேயே செய்தீர்கள். பிறகு, அக் கரையர் மகளைப் பற்றித் தாங்கள் கேள்விப்பட்டு வந்தீர்களா?" என்று கேட்டாள்.

"ஏன்? அடிக்கடி கேள்விப்பட்டுத்தான் வந்தேன். இளவரசுப் பட்டம் சூட்டிக் கொண்டதும் சுந்தர சோழர் மதுரைப் போர் முனைக்குப் போனார். நான் காசி க்ஷேத்திரத்துக்குச் சென்றேன். சில ஆண்டுகள் அங்கேயே தங்கி வேதாகம சாஸ்திரங்கள் பயின்று விட்டுத் திரும்பி வந்தேன். அப்போது பழையாறையில் ஈசானபட்டரின் தந்தை அந்தக் கரையர் மகளோடு அந்தரங்கமாக உரையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு வியந்தேன். அவர் ஒரு அதிசயமான செய்தியைச் சொன்னார். அந்தக் கரையர் மகள் பெரிய பிராட்டியின் அரண்மனைத் தோட்டத்தில் வந்து சில நாள் தங்கியிருந்ததாகவும், இரட்டைக் குழந்தைகள் பெற்று அங்கேயே போட்டு விட்டு ஓடிப் போனதாகவும் கூறினார். எப்போதாவது நினைத்துக்கொண்டு குழந்தைகளைப் பார்ப்பதற்காக அவள் இரகசியமாக வருவதுண்டு என்றும் தெரிவித்தார். குழந்தைகள் என்ன ஆயின என்று கேட்டேன். அவர் சொல்ல மறுத்து விட்டார். அது செம்பியன் மாதேவிக்கு மட்டுமே தெரிந்த இரகசியம் என்றும் கூறினார். நானும் அதைப் பற்றி அதிகம் கிளறாமலிருப்பதுதான் நல்லது என்று சும்மா விட்டு விட்டேன். தேவி! அருள்மொழி குழந்தைப் பிராயத்தில் காவேரி நதியில் விழுந்து விட்டபோது, அவனைக் காவேரி அன்னை காப்பாற்றினாள் என்று எல்



லாரும் சொல்லுவார்கள் அல்லவா? அப்படிக் காப்பாற்றியவள் உண்மையில் கரையர் மகள்தான் என்று என் மனத்தில் அச்சமயமே தோன்றியது..."

"தாங்கள் உள்ளத்தில் தோன்றியது உண்மைதான், ஐயா! அருள்மொழி ஈழ நாட்டில் அந்த மாதரசியைப் பார்த்து விட்டு வந்து அவ்வாறுதான் சொன்னான். ஆனால் இந்த விந்தையைக் கேளுங்கள்! என் தந்தை என்ன எண்ணுகிறார் தெரியுமா? கடலில் விழுந்து இறந்த கரையர் மகள்தான் ஆவி வடிவத்தில் வந்து தம் மக்கள் மீது பழி வாங்குவதாக எண்ணுகிறார். நேற்றிரவு வெளியில் கடும் புயல் அடித்தபோது என் தந்தையின் உள்ளப் புயலும் வேகத்தை அடைந்தது. இரவு முழுதும் அவர் தூங்கவே இல்லை. என்னையும் தூங்கவிடவில்லை. பழைய கதைகளையெல்லாம் மறுபடி சொன்னார். 'கடலில் விழுந்து இறந்த அந்தப் பழிகாரிதான் இப்போது என் பேரில் பழி வாங்குகிறாள். அவள்தான் என் அருள்மொழியைக் கடலில் மூழ்க அடித்துக் கொன்று விட்டாள்! கரிகாலனையும் அவள் பழி வாங்காமல் விட மாட்டாள்!' என்று அடிக்கடி அலறினார். 'என் ஒரு மகனாவது உயிரோடிருக்கும்போது என்னைக் கொண்டு போக மாட்டாயா, யமனே!' என்று கதறினார். அவருக்கு எவ்வளவோ நான் சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை. அதன் பேரிலேதான் நாகைப்பட்டினம் புத்த விஹாரத்தில் அருள்மொழிவர்மன் பத்திரமாயிருப்பதைப் பற்றி அவரிடம் சொல்ல வேண்டி நேர்ந்தது..."

"அதற்குப் பிறகு சக்கரவர்த்தி சிறிது ஆறுதல் அடைந்தாரா?"

"அதுதான் இல்லை. அதன் பிறகு சித்தப் பிரமை இன்னும் அதிகமாகி விட்டது. முதலில் அச் செய்தியை அவர் நம்பவே இல்லை. ஆனால் நானே நேரில் பார்த்து விட்டு வந்தேன் என்று சொன்ன பிறகு நம்பினார். ஏன் அவனை அழைத்துக்கொண்டு வரவில்லை என்று கேட்டார். குளிர் சுரத்துக்குப் பிறகு பிரயாணத்துக்கு வேண்டிய உடல் பலம் வரவில்லை என்றும், விரைவில் அழைத்துக் கொண்டு வர ஏற்பாடு செய்வதாகவும் கூறினேன். ஆனால் அவனை இப்போது இங்கு அழைத்து வருவதால் இராஜ்யத்தில் ஏற்படக் கூடிய குழப்பத்தைப் பற்றியும் இலேசாகச் சொன்னேன். இதைக் கேட்டதும் அவருடைய மனப்போக்கு வேறு விதமாகத் திரும்பிவிட்டது. 'இந்த இராஜ்யந்தான் என் பிள்ளைகளுக்கு யமனாக ஏற்பட்டிருக்கிறது. இராஜ்யம் அவர்களுக்கு இல்லையென்று தீர்ந்தால் என் புதல்வர்கள் உயிரோடு சுகமாயிருப்பார்கள். அதற்காகத்தான் அவர்களை இங்கு அழைத்து வர இவ்வளவு அவசரப்படுகிறேன்!' என்றார். திடீரென்று இன்னொரு பீதி அவர் மனத்தில் குடி கொண்டது. உக்கிரமான புயல் காற்றினால் நேற்றிரவு அரண்மனையெல்லாம் கிடு கிடுத்துப் போயிற்று. ஒரு தடவை பேரிடி இடித்து ஓய்ந்ததும் என் தந்தை வெறிகொண்டு விட்டார். 'மகளே! அருள்மொழியை இனி நான் பார்க்கப் போவதில்லை. ஈழைக் கடலில் தோன்றும் புயற்காற்றுக்களையும் சுழிக்காற்றுக்களையும் பற்றி எனக்கு நன்றாய்த் தெரியும். இன்று அடிக்கும் புயலினால் கடற்கரையில் தென்னை மர உயரம் அலைகள் எழும்பும். உன் நாட்டில் வெகு தூரம் கடல் பொங்கி வந்து மூழ்க அடிக்கும். காவேரிப்பட்டினத்தை அன்றொரு நாள் கடல் கொண்டது போல் நாகைப் பட்டினத்தையும் கொண்டு போனாலும் போய் விடும். அதிலும் கடற்கரைக்கும் கால்வாய்க்கும் மத்தியில் உள்ள புத்த விஹாரம் ஒரு நாளும் தப்பிப் பிழைக்காது. அந்தப் பழிகாரி கரையர் மகள் கடலில் என் மகனைக் கொண்டு போக முடியவில்லை. அதற்குப் பதிலாகக் கரையிலேயே வந்து என் மகனைக் கொல்லப் போகிறாள்! நான் போய் இதோ அவளைத் தடுத்து என் மகனைக் காப்பாற்றப் போகிறேன்' என்று கதறிக்கொண்டு எழுந்திருக்க முயன்றார். அந்த முயற்சியில் தளர்ச்சியுற்றுப் படுக்கையில் விழுந்தார். ஐயா! அப்போது என் தந்தை விம்மி அழுத குரலைக் கேட்டால் கல்லும் மலையும் உருகி விடும்!" என்றாள் இளைய பிராட்டி. அவளுடைய கண்களில் அப்போது தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

(தொடரும்)

அந்தச் சிறுவன் தன் பேட்டால் வேகமாக அடித்ததில் பந்து உயரப் பறந்து தொலை தூரத்தில் விழுந்தது. தொடர்ந்து "சிக்ஸர், சிக்ஸர்" என்ற கூக்குரல்கள்.

ரயில் ஜன்னல் வழியாக இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு முன்னா வேகமாகக் கை தட்டினான். "அக்கா, அக்கா! பந்து, எனக்கு வேணும்" என்றான்.

சுற்றியிருப்பவர்கள் தங்களையே உற்றுப் பார்த்தது சுவாதிக்குக் கொஞ்சம் சங்கடத்தை ஏற்படுத்தியது. அவர்களில் சிலராவது இந்நேரம் முன்னாவின் மனநிலைக் கோளாறை யூகித்திருப்பார்கள்.

"வாங்கித் தரேன் முன்னா, மெட்ராஸ் போனதும்" என்றாள்.

சற்று நேரத்தில் காப்பி விற்றுக்கொண்டு ஒருவன் வந்துசேர, "அக்கா, காப்பியும் மெட்ராஸ் போனப் புறம்தானா?" என்றான்.

"இல்லைடா. இப்பவே வாங்கித் தரேன்" என்றபடி வாங்கித் தந்தாள்.



பற

5

அருண் சரண்யா

முன்னா பாதிக் காப்பியைக் குடித்துக் கொண்டிருந்தபோதே ஒரு திடீர் அந்தகாரம். ரயில் ஒரு நீண்ட குகைக்குள் நுழைந்து கொண்டிருந்தது.

"அக்கா" என்று முன்னா வீறிடுவதும், "ஐயோ யார் இப்படிச் செய்தது?" என்ற எதிர் இருக்கைக்காரரின் கத்தலும் அடுத்தடுத்துக் கேட்டன.

"முன்னா என்ன ஆச்சு?" சுவாதி பதறினாள். சில நொடிகளுக்குப் பின் ரயில் குகையைக் கடந்து முடிக்க, வண்டிக்குள் பரவிய வெளிச்சத்தில்...

எதிர் சீட்டுக்காரரின் வெள்ளை ஜிப்பா முழுவதும் காப்பிக்கறை. முன்னாவை எரித்து விடுவது போல அவர் பார்க்க, முன்னா நடுங்கிக் கொண்டிருந்தான்.

அவன் கையிலிருந்த ப்ளாஸ்டிக் கோப்பையை வாங்கி ஜன்னல் வழியாக தூர எறிந்த சுவாதி, காப்பிக்கறை ஜிப்பாக்காரரிடம் மன்னிப்புக் கேட்டாள். கூடவே "இவனைப் பற்றி உங்களாலே புரிஞ்சுக்க முடி



யும்னு நினைக்கிறேன்'' என்றாள் வருத்தத்தோடு. கோபத்துடன் எதையோ முணுமுணுத்தவாறு அவர் வாஷ் பேசினை நோக்கி நடந்தார்.

''என்ன முன்னா? என்ன ஆச்சு?'' என்று சுவாதி அவன் கரங்களைப் பிடிக்க, அவன் திமிறினான்.

''இந்த ஆளு என்னைக் கொல்லப் பார்க்கிறாருக்கா'' என்றான் எதிர் வரிசையில் ஜன்னலருகே உட்கார்ந்திருந்த இளைஞனைக் காட்டி.

ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று சுவாதிக்குப் பட்டது. மெல்லிய குரலில் ''அந்த அண்ணா ரொம்ப சாதுவாகத் தெரியறார். கொலைன்னு சொன்னாலே பயத்தில் அலறுவார் போல இருக்கு.



''ஏன்டா டேபிள் ஸால்ட் வாங்கிட்டு வரவா இவ்வளவு நேரம்?''

''போம்மா... ஸால்ட் வாங்கிட்டேன். டேபிள் வாங்கத்தான் காசு பத்தலை. அதான் சும்மா திரும்பி வந்துட்டேன்!''

– அரவக்குறிச்சிப்பட்டி எம். அசோக்ராஜா

அவர் போய் உன்னைக் கொல்லுவாரா?'' என்றாள் மெதுவாக.

அந்தத் தர்க்கமெல்லாம் முன்னாவிடம் எடுபடவில்லை. ''இல்லைக்கா. என்னைக் கொலை செய்யப் பார்த்தான். கொஞ்சம் முன்னேதான் அந்த ஜிப்பாக்காரரிடம் ரகசியம் பேசினான், என்னை சத்தம் போடாமல் தீத்துக் கட்டிடலாம்னு. அவனை விடமாட்டேன்'' என்று கத்தியவன், நடப்பது எதையும் அறியாமல் ஏதோ நாவல் படிப்பதில் மூழ்கியிருந்த அந்த இளைஞன் மீது பாய்ந்தான். அவனது சட்டையைப் பற்றி முன்னா உலுக்கியதில் ஒரு பட்டன் தெரித்து விழுந்தது. முன்னாவை உதறித் தள்ளிய அவன் கோபாவேசமாகக் கத்தத் தொடங்கினான். ''நானும் வண்டி ஏறியதிலிருந்து பார்க்கிறேன், ஒரே ரகளை. இதென்ன ரயிலா? பைத்திக்கார ஆஸ்பத்திரியா? இதுகளையெல்லாம் நாயை மாதிரி ஒரு சங்கிலி போட்டு இருக்கையோடு கட்டி வைக்க வேண்டியதுதானே?''

இந்தக் களேபரத்தில் முன்னா தன் இருக்கையில் அடக்கமாக உட்கார்ந்துவிட்டான் என்றாலும் சுவாதிக்கு உடலெல்லாம் குன்றியது. மனிதர்கள் எப்படியெல்லாம் இதயமற்றவர்களாக இருக்கிறார்கள்!

எங்கோ அவள் கருத்துக்கு எதிரொலி கேட்கத் தொடங்கியது.

''நாமெல்லாம் படிச்சவங்கதானே?'' இப்படி மனிதாபிமானம் இல்லாமல் பேசலாமா?'' என்றது ஒரு கணீர்க் குரல். தடுப்பின் மறுபுறத்திலிருந்து இங்கே நடப்பதை அறிந்து கொண்டு வந்திருந்த பயணியாக இருக்க வேண்டும். சுவாதியின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார். ''யார் இவன்? உன் தம்பியா?'' என்று கேட்டுவிட்டு ''நான் ஒரு மனநல மருத்துவர். பெயர் மனோன்மணி. இப்போதைக்கு இந்தத் தூக்க மாத்திரைகளை அவனுக்குக் கொடு. இல்லாவிட்டால் நிலைமை சிக்கலாயிடும்'' என்றார். அவர் நீட்டிய மாத்திரைகளை வாங்கி முன்னாவை சாப்பிட வைத்தாள். பிறகுதான் அந்தக் குழப்பம் வந்தது. 'முன்பின் தெரியாத யாரோ ஒருத்தி தன்னை டாக்டர் என்று கூறிக் கொண்டு மாத்திரையை நீட்டினால் அதை அப்படியே ஏற்றுச் செயல்படுவதா? நாம் ஏன் இப்படித் தெளிவில்லாமல் இருக்கிறோம்? சிலசமயம் பார்த்தால் முன்னாவே நம்மைவிடத் தெளிவாக யோசிப்பது போலிருக்கிறது' என்று தன்னையே நொந்து கொண்டாள். என்றாலும் இந்தப் பெண்மணியின் முகத்தில் ஒருவித நம்பகத்தன்மை தெரிந்தது போல் இருந்தது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தை வாரணாசி எக்ஸ்பிரஸ் நெருங்க நெருங்க சுவாதியின் இதய ஓட்டம் அதிகமானது. சுற்றிலும் அவள் கண்ட காட்சிகள் எல்லாம் பில்டர் போடப்பட்டு அம்மாக்கள் மட்டுமே அவள் கண்களில் தென்பட்டார்கள்.

''நீங்க பையை எடுத்துக்குங்க. நான் சீனுவைத் தூக்கிக்கிறேன். இல்லேன்னா இறங்கும்போது விழுந்து வைப்பான்'' என்ற அம்மா;

''வண்டி நின்றதும் இடிச்சுத் தள்ளாமல் மெதுவாக இறங்குங்க. இல்லேன்னா என் செல்லம் நசுங்கிடுவா'' என்று பின்னால் நெருக்கமாக நின்றவர்களை எச்சரித்த அம்மா;

''என்னடா கண்ணா, பசிக்குதா? கொஞ்சம் பொறுத்துக்கோ. ஸ்டேஷனில் பிஸ்கெட் வாங்கித் தரேன்'' என்ற இன்னொரு அம்மா;

''துப்பட்டாவை சரியாப் போட்டுக்

கோம்மா, இது மெட்ராஸ்'' என்று வயது வந்த மகளை கரிசனத்தோடு எச்சரித்துக் கொண்டிருந்த அம்மா;

வண்டியிலிருந்து இறங்கி நாலடி நடந்த வுடனேயே ''என்னங்க நம்ம நித்யா நாக்பூருக்குக் கிளம்பும்போது இருபது கிலோ வெயிட் இருந்தா. இப்போ எவ்வளவு இருக்கான்னு பார்ப்போமா?'' என்ற பாச எடை கொண்ட அம்மா;

"கண்ணா, டிக்கெட்டை நீயே டிக்கெட் கலெக்டர்கிட்டே கொடுக்கணும்னு ஆசைப் பட்டியே, கொடு கண்ணு" என்ற அம்மா.

இத்தனையும் போதாதென்று ஸ்டே ஷனுக்கு எதிர்ப்புறம் ஒரு பால்பவுடர் விளம்பரத்துக்காக பெரிதாக வரையப் பட்டிருந்த பாச அம்மா.

'இத்தனை பேரில் என் அம்மா எப்படி இருப்பாள்? என்னை ஏன் வெறுத்தாள்? என்னிடமிருந்து விலகி இருக்க எப்படி சம்மதித்தாள்? எதற்காக இந்தப் பதினெட்டு வருட அஞ்ஞாதவாசம்?

அதற்குமேல் அவளை யோசிக்க விடா மல் ஆட்டோ டிரைவர்கள் சூழ்ந்து கொண்டனர்.

குறிப்பிட்ட முகவரியை அடைந்த போது, அந்த வீட்டைப் பூட்டிக் கொண்டு எங்கோ கிளம்பிக் கொண்டிருந்த பெண் மணி சுவாதியைப் பார்த்து ஆச்சரியப்பட் டாள்– 'யார் இந்தப் பெண்? யாரோ ஒரு சிறுவனோடு நம் வீட்டுக்கு ஆட்டோவில் வந்திருக்கிறாள்?'

''வாரணாசியிலிருந்து வந்திருக்கேன் ஆண்ட்டி. எங்க அப்பா பேரு சந்திர மோகன்'' என்றபடி தயார் நிலையில் வைத் திருந்த அந்தக் கடிதத்தை நீட்ட, இஸ்திரி செய்து கட்டியிருந்த புடைவை கசங்குவது பற்றியெல்லாம் கவலைப்படாமல் அப் படியே சரிந்து உட்கார்ந்தாள் அந்தப் பெண்மணி.

"நீ...நீ... சத்யாவின் பெண்ணா?.... நான் என்ன சொல்ல? எப்படிச் சொல்ல? இந்த லெட்டரை நான் உங்கப்பாவுக்குப் போட்ட பிறகு நிறைய விஷயங்கள் நடந்துடுத்தேம்மா. சரி நான் அவசரமாகப் போகணும். நீ வந்த ஆட்டோவிலேயே போகலாம். வழியிலே விவரங்களை சொல்றேன்" என்றபடி பரபரப் பாக சுவாதி கொண்டு வந்திருந்த லக்கேஜு களைப் பூட்டைத் திறந்து வீட்டுக்குள்ளே வைத்து, மீண்டும் கதவைப் பூட்டி விட்டு, அவர்களது கரங்களைப் பற்றியபடி ஆட் டோவுக்குள் ஏறிக் கொண்டாள்.

(தொடர்ந்து பறக்கும்)



''கல்யாண வீட்டில் மொய் எழுதாதவங் களுக்கெல்லாம் தாம்பூலப் பை கிடையாதுன்னு சொல்லிட்டாங்க!...''

''அதனால?''

''வெளியே வந்து, கல்யாண வீட்டு தாம்பூலப் பையில வெடிகுண்டு இருக்கறதா போலீசுக்கு போன் செய்துட்டேன்!''

– மிஸ்டர் எக்ஸ்



''அந்த மியூசிக் டைரக்டர் சினி மாவுக்கு வர்றதுக்கு முன்னாடி என்ன பண்ணிட்டு இருந்தாரு?''

''ஜெராக்ஸ் கடை வெச்சிருந்தாரு...!''

– வி. சாரதிடேச்சு



''நம்ம ஆபீசுக்குள்ளே ஒரு குரங்கு புகுந்துட்டு, போக மாட்டேன்னு ஆட் டம் காட்டுது சார்!''

''பேசாம ஒரு மேஜை நாற்காலியைப் போட்டு அதையும் உட்கார வை!''

– பர்வதவர்த்தினி

வைகுண்டத்தில் மகாவிஷ்ணுவும், மகாலட்சுமியும் ரிலாக்ஸ் செய்து கொண்டிருந்த நேரம். வழக்கம் போல சம்மன் இல்லாமல் ஆஜரானார் நாரதர்.

"நாராயண, நாராயண! அவசரமாக உங்களைக் காண விரும்புகிறார், காந்தி."

"காந்தி?... ஓ! மகாத்மா காந்தியா?" அலறி அடித்துக் கொண்டு சயனத்திலிருந்து எழுந்தவர், "நாரதா, நான் இல்லையென்று சொல்லி விடேன். ஆதிசேஷனுக்கு பின்னால் மறைந்து கொள்கிறேன்!" என்றார்.

"நாராயண! ஏன் இந்த பதற்றம்? நீர் பகவான். பூவுலகில் இருக்கும் பைனான்ஸ் கம்பெனி முதலாளி போல, இருந்து கொண்டே இல்லையெனலாமா?"

"நான் படும் அவஸ்தை உனக்குத் தெரியாது!"

"அந்த நல்ல மனிதரா உம்மைப் படுத்துகிறார்? எதுவாயிருந்தாலும் இப்போது நானும் உம்மோடு இருக்கிறேனே."



நாரதரை நம்புவதா என்ற சந்தேகத்தோடு, "சரி வரச் சொல்" என்றார் மகாவிஷ்ணு.

மகாத்மா காந்தி உள்ளே வந்ததும் வணங்கினார்.

"பிரபோ, ஏனோ என் வேண்டுகோளுக்கு இன்னும் இணங்காமலே இருக்கிறீர்களே?"

"காந்தி, நீர் உத்தமர். எனக்குப் பிரியமானவர். சொர்க்கத்தில் உமக்கு என்ன குறை? கேளுங்கள், எது வேண்டுமானாலும் தருகிறேன். தயவுசெய்து "அதை" மட்டும் வற்புறுத்தாதீர்!" ஏறக்குறைய மன்றாடினார் பகவான்.

நாரதருக்கு ஏதும் விளங்கவில்லை. "நாராயணன் கெஞ்சுமளவிற்கு என்ன கேட்டீர் காந்தி?"

"நாரதா! உஷ்!" அடக்கினார் விஷ்ணு.

காந்தி தமது கோரிக்கையைத் தொடர்ந்தார்.

"பூமி அல்லோலகல்லோலப்படுகிறதாம்! பணம், பொருள், பதவி என்று பாரதத்தில் ஒருவரையொருவர் முழுங்கி, மக்களையும் ஏமாற்றி, நாட்டைச் சீர்குலைத்து வருகிறார்களாம்! சொர்க்கத்திற்கு வரும் கொஞ்சநஞ்ச பேர் சொல்லிப் புலம்புகிறார்கள்."

"... ஆங்... நானும் கேள்விப்பட்டேன்!" ஜால்ரா அடித்தார் நாரதர்.

"நீதி, நியாயம், தர்மம் உதட்டளவில் கூட இல்லையாம்! ஆகவே தர்மத்தை நிலைநாட்டி, பூலோகவாசிகளை சீர்படுத்தி ரக்ஷிக்க, பகவானை இந்தியாவில் அவதாரமெடுக்கும்படி வேண்டினேன்..." என்று முடித்தார் காந்தி.

மகாவிஷ்ணுவின் முகில்வண்ண முகம் டென்ஷனில் சிவந்தது.

"காந்தி உமக்குச் சொன்னால் புரியாது!"

"நாராயண! அவர் என்ன தப்பாகக் கேட்டு விட்டார்? மானிடரைக் காக்க நீர் எடுக்காத அவதாரமா?" என்று நாரதர் புரியாமல் காந்தி பக்கம் சாய்ந்தார்.

"நாரதா நீயுமா? உன்னை வைத்துக் கொண்டு.... இப்படி வா முதலில்!" தனியாக இழுத்துச் சென்று விளக்க ஆரம்பித்தார் :

"அவதாரமென்பது விளையாட்டா? இரணியனை அழிக்க நரசிம்மவதாரம், இராவணனை ஒழிக்க ஸ்ரீராமவதாரம் இப்படி எதற்காக அவதாரம் எடுக்கிறோம் என்பது அன்று தெளிவாக இருந்தது. ஆனால் இன்று, பிரும்மாவின் சதியோ

மாதுரி



என்னவோ யார் நல்லவர்? யார் கெட்டவர் என்றே தெரிவதில்லை. பூலோகத்தில் அவதாரம் எடுத்து யாரை அழிப்பதாம்?"

"நாராயணா! நீர் சொல்வது சரிதான். இப்போது என்ன செய்ய?"

"என்ன செய்ய? நானிருக்கிறேன் என்று பெரிதாகச் சொன்னாயே..."

"நான் மஹாலக்ஷ்மியிடம் செல்கிறேன். நீ காந்தியை சமாளித்துக் கொள்" என்று நாரதரை தத்தளிக்க விட்டு மறைந்தார் விஷ்ணு.

கடுமையாக யோசித்தார் நாரதர். காந்தியை அருகில் அழைத்தார்.

"பகவானுக்கும் பாரதத்தின் நிலைமை பெருங்கவலை அளிப்பதாக உள்ளது. ஆனால் உண்மை நிலைமையை யாருக்கும் புரியாதவண்ணம் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் குழப்புகிறார்களாம். இவ் விஷயத்தில் பகவானும் குழம்பியிருக்கிறார். எந்த ஒரு முடிவும் எடுக்குமுன் நிலைமையைத் தெளிவாக அறிய உம்மை பூலோகத்தில், இந்தியாவிற்கு அனுப்பி அதன் தற்போதைய நிலைமையைப் பற்றி ஒரு வெள்ளை அறிக்கை (WHITE PAPER) தயாரிக்கச் சொல்லியிருக்கிறார். அதைப் பார்த்த பின் எந்தக் காலத்தில் எந்தக் கோலத்தில் என்ன ஆயுதங்களுடன் அவதாரம் எடுப்பது என்று முடிவு செய்வாராம் பகவான்."

"அய்யோ நான் திரும்பவும் இந்தியா செல்ல வேண்டுமா?" அலறினார் காந்தி.

"கவலை வேண்டாம் காந்தி! பகவானின் இரண்டு கண்ணும் காதுகளுமாகத் தான் நீங்கள் அங்கே செல்லப் போகிறீர்கள். உங்கள் உருவம் யாருக்கும் தெரியாது. ஆனால் நீங்கள் எல்லாவற்றையும் பார்க்கலாம். கேட்கலாம். நீங்கள் அறியாத புதிய பாரதத்தில் உங்கள் கைத்தடியாக, "ஆல் இன் ஆல் அழகுராஜா" என்னும் பூலோக வாசி இருப்பார். அவர் ஜெகதலப்பிரதாபன். எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார். அவர் கண்களுக்கு மட்டும் நீர் புலப்படுவீர். இந்தியாவில் கண்டதை, கண்டபடி எழுதாமல் சரியான வெள்ளை அறிக்கை தயாரித்து வாரும். ஒரு முக்கிய விஷயம், நீர் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் பூலோகத்தில் இருக்கலாம். ஆனால் தெரிந்தோ தெரியாமலோ "ஹேராம்" என்று சொல்லி விட்டால் உங்கள் வேலை முடிந்ததாக அர்த்தம். உடனே சொர்க்கத்திற்கே திரும்பி விடுவீர்

கள். கவனமாக இருங்கள்'' எனக் கூறி முடித்தார் நாரதர்.

"நீர்தான் ஆல் இன் ஆல் அழகு ராஜாவா?'' திடீரென காந்தி எதிரே தோன்றிக் கேட்டதும் அதிர்ச்சியுற்றான் அழகு. ஏதோ ஒரு டுபாகூர் கனவில் நாரதர் வேஷத்தில் வந்து உளறியது உண்மை என அவன் புலன்கள் நம்ப மறுத்தன. புலன் விசாரணையாக எதிரிலிருந்த காந்திஜியை 'வெடுக்'கென்று கிள்ளினான். நிஜமென உணர்ந்ததும் சாஷ்டாங்கமாக காந்திஜியின் காலில் விழுந்து இந்த அஸைன்மென்டில் தன்னுடைய பங்கைத் தெரிந்து கொண் டான். காந்திஜியை, செக்யூரிட்டி கருதி 'ஜி' என்று அழைக்க விரும்புவதாகக் கூறி அனு மதியும் பெற்றான். தாமதமின்றி இருவரும் களத்தில் குதித்தனர்.

''நாட்டு நிலைமையை மொதல்ல தெரிஞ்சுக்கணும். ரகசியமா காங்கிரஸ் தலை மைய் கூப்பிட்டுக் கேட்போம்...'' என்றார் காந்தி.

"ஜி! எந்தக் காங்கிரஸைக் கூப்பிட? அ, ஆ, இ, ஈ, ஒ, ஓ...."

"ஓ இத்தனை காங்கிரஸா?''

"எல்லாம் நீங்க போனப்புறம் ஏற்பட்ட வளர்ச்சி ஜி'' என்று பவ்யமாக பதிலளித் தான் அழகு.

''சரி, அப்ப ஆளுங்கட்சித் தலைவர் களைக் கூப்பிடலாம்.''

''எந்த ஆளுங்கட்சி ஜி? 26 கட்சி ஒண்ணா சேர்ந்து ஆளுது.''

"26 கட்சியா? ஆஹா என்ன ஒற்றுமை! ....ம்... சரி அழகு, இருபத்தாறு கட்சி கூடி ஆட்சி நடத்தறாங்கன்னா, அத்தனை கட்சி யையும் சேர்த்து பேசாம ஒரு கட்சியா ஆக்கிடலாமே?''

"அதான் முடியாதாமே! ஏதோ செக் குலர்னு நவக்கிரகம் மாதிரி வேற வேற திசைல, ஆனா ஒரே இடத்தில ஒட்டு மொத்தமா நிக்கறாங்க.''

"ஜனநாயக ஆட்சிதானே நாட்டில நடக்கிறது?'' சந்தேகத்தோடு கேட்டார் காந்தி.

"ஜி, அதான் பிரச்னையே! அதனால நாட்டோட நிலைய எந்த தலைவரைக் கேட்டும் பிரயோசனமில்ல. பேசாம நீங் களே ஒரு ரவுண்ட் வந்து பாருங்க!''

அந்தக் கருத்தை ஆமோதித்து நாட்டின் முக்கிய மெட்ரோ நகரங்களை நேரில் காண முடிவு செய்தார் காந்தி.

பேசிக் கொண்டிருந்தபோதே ஒரு தேர் தல் பிரசார ஊர்வலம் குறுக்கிட்டது. பிரசா ரத்தைக் கேட்டவர் ஆடிப் போனார்.

"அழகு, அவரென்ன காந்திஜி ஆட்சியை மீண்டும் நிலைநாட்டுவோம்னு சொல்லி வோட்டு கேக்கறாரு? நான் எப்ப ஆட்சி நடத்தினேன்?''

''அதெல்லாம் அவங்களுக்கு கவலை யில்ல ஜி! காமராஜர் ஆட்சி, நேரு ஆட்சி, இந்திரா ஆட்சி, லால்பகதூர் ஆட்சி... ஏன் மீண்டும் ஆங்கிலேயர் ஆட்சியையே நிலை நாட்டுவோம்னு சொல்லிக் கூட வோட்டு கேட்பாங்க! அத விடுங்க!''

நாட்டின் முதுகெலும்பான கிராமங் களையும் விவசாயிகளையும் காணும் விருப் பத்தில் பஞ்சாப் போகும் வழியில் டெல்லி கெஸ்ட் ஹவுஸ் ஒன்றில் தங்கினர் இருவரும். காலை எழுந்து ஜன்னல் வழியே பார்த்த காந்தி, ஒரே மூட்டமாக இருப்பதைக் கண்டார்.

"என்ன அழகு பனிமூட்டமா இருக்கு. ஆனா குளிரே இல்லே.''

''ஜி இது பனிமூட்டமில்ல, பொல் யூஷன்! கார், லாரி, பஸ், தொழிற்சாலை, அனல்மின் நிலையம் எல்லாம் சேர்ந்து ஏற்படுத்திற நிரந்தர மூட்டம்.''

எல்லாம் புதிதாக இருந்தது காந்திக்கு. பொல்யூஷனைப் பார்க்க வெளியே கிளம் பிய போது, கெஸ்ட் ஹவுஸ் வராந்தாவில் திபுதிபுவென AK47 ஏந்திய போலீஸ் பின் தொடர, வெண்ணிற ஆடை பட்லர் ஒருவன், மூடிய தட்டும் கிளாஸ்கும் ஏந்திய படி வந்து கொண்டிருந்தான்.

"அழகு இதென்ன போலீஸ்?''

"ஜி அவரோட காலை டிபனுக்கு பாது காப்பு!''

"டிபனுக்கு பாதுகாப்பா?''

''நம்ம பக்கத்து ரூம் 5 ஸ்டார் ஜெயில், அதில மாஜி முதலமைச்சர் தங்கியிருக்கார்.''

"ஜெயில்லயா? என்ன தப்பு செய்தார்? கெஸ்ட் ஹவுஸ்ல எப்படி ஜெயில் வந்தது?''

"நிதானம் ஜி! முன்னாள் முதல்வர் புல் உற்பத்தியைப் பெருக்க உலக வங்கில ஆயிரங்கோடி ரூபா கடன் வாங்கி...

"கடன் வாங்கி?''

''ஸ்விஸ் வங்கில போட்டுக்கிட்டார். அந்த ஊழல் விசாரணைல இருக்கு. வழக்க மான ஜெயில்ல ரொம்ப கொசுவாம். சோ, கெஸ்ட்ஹவுஸ்!

"என்னவோ அழகு! புல் உற்பத்திக்கே

ஆயிரங்கோடி கடன்னா, நிச்சயமா நம்ம கிராமங்க சுபிட்சமா இருக்கும்!"

"அதத்தான் பாக்கப் போறீங்களே ஜி!"

பஞ்சாப் கிராமங்களைச் சுற்றி வலம் வந்தபோது, "அழகு! இவ்வளவு தூரம் வந்திட்டோம். ஆனா ஒரு விவசாயியை கூட காணோமே?" என்றார் காந்திஜி.

தூரத்திலிருந்த ஒரு டிராக்டரை காட்டி அதன் டிரைவர்தான் விரிந்து கிடக்கும் நூறு ஏக்கருக்கும் சொந்தமான விவசாயி என்று விளக்கினான் அழகு.

"நான் கேட்கற விவசாயி முண்டாசு, கரை வேட்டி கட்டிக்கிட்டு...."

"ஜி! அவங்கள்லாம் இப்ப இல்ல."

"பின்னே?"

"அவங்க பிள்ளைங்க நிலபுலனை இதுமாதிரி ஜீன்ஸ் போட்ட தொழிலதிபர் விவசாயிக்கு வித்திட்டு, கிடைச்ச பணத்தை லஞ்சமா கொடுத்து அரசாங்க வேலைக்குப் போயிட்டாங்க!"

"அப்படியா?"

"அப்படியேதான்! அரசாங்க வேலைல சம்பளம், நல்ல கிம்பளம், ரிடையரானா பென்ஷன், எல்லாத்துக்கும் மேல வேலை செய்ய வேண்டாம்!"

"குழப்பாத அழகு. அந்த வயல்ல யாரோ வெள்ளைக்காரன் பாரு!"

"அவர் அமெரிக்க கம்பெனியோட விவசாய நிபுணர். சூரியகாந்தி உற்பத்தியைப் பெருக்கி, அந்த எண்ணெயில உருளைக் கிழங்கு சிப்ஸ் செய்யறாங்க."

"கோதுமை, நெல் எதுவும் பயிர் செய்யறதில்லையா?"

"ஊடுபயிரா அப்பப்ப செய்றாங்க. இருந்தாலும் இப்ப சாப்பாடே உருளைக்கிழங்கு சிப்ஸும் கோலாவும்தானே?"

பார்த்த காட்சிகள் எதுவும் திருப்தியளிக்காமல் கனத்த இதயத்தோடு டெல்லி அடைந்தனர். அங்கு கோர்ட் வளாகத்தை பார்க்க நேர்ந்து, வக்கீல்களும்; நீதிபதிகளும் 'படு பிஸி'யாக இருப்பதைப் பார்த்து சந்தோஷத்திலாழ்ந்தார் காந்தி.

"அழகு! நாங்க சட்டம் படிச்ச காலத்தில ரொம்ப பேருக்கு கேசே கிடைக்காது. ஆனா இங்க பார்க்கும்போது...."

"ஜி! இது ரொம்பக் கேவலம். நடக்கிற கேஸ் மொத்தம் ஊழல் கேஸ்! பீரங்கி ஊழல், வங்கி ஊழல், புல்லு ஊழல், சொத்து ஊழல், நீதிபதி ஊழல்..."

மேலே கேட்க விருப்பமில்லாமல் காது களை மூடிக் கொண்டார் காந்தி.

டெல்லியிலிருந்து மும்பை போன போது கண்ட முதல் காட்சி வங்கிப் போராட்டம். "வங்கிகளைத் தனியார்மய மாக்காதே."

"அழகு, புரியலையே? பாங்க் தனியார் தானே?"

"உங்க காலத்தில ஜி! அப்புறம் தேசிய மயமாச்சு. திரும்பவும் தனியாராகும். அடுத்து நீங்க வரும் போது 'தேசியமயமாக் காதே'னு போராட்டம் நடக்கும். பாருங்க, நீங்க கத்துக் கொடுத்த உண்ணாவிரதம்!



"எங்க வீட்டு மாமியார், மருமகள் சண்டை இவ்வளவு தீவிரமா பப்ளிசிட்டி ஆகும்னு நான் எதிர்பார்க்கலை."

"என்ன ஆச்சு?"

"ஏ.கே.–47 தேவைப்படுமா'ன்னு விசாரிச்சு விலைப் பட்டியல் அனுப்பியிருக்காங்க!"

– என்.கே. கண்ணன்

என்ன அதிலேயும் வளர்ச்சி. நெறைய டைப்!"

"என்ன டைப்?"

"9 TO 5 உண்ணாவிரதம், ரிலே விரதம், வெஜிடேரியன் உண்ணாவிரதம், நான்-வெஜ் உண்ணாவிரதம்..."

"அழகு! அஹிம்சை போராட்டத்தை நீ ரொம்ப கலாட்டா செய்யறே!"

"இல்ல ஜி! இவங்கதான் உங்க அஸ்தி ரத்தை ஹிம்சை பண்ணறாங்க!"

மும்பை நகர் பகுதியைக் கடந்து சென்று கொண்டிருந்த போது, சாலையில், போலீஸ் ஜீப்பிலிருந்து ஒரு கைதியை இறக்கி வலுக் கட்டாயமாக ஓடச் செய்வது தெரிந்தது. கைதி ஓட மறுத்தும் இன்ஸ்பெக்டர் துப் பாக்கியை நீட்டி ஓடச் சொன்னார். எதுவும்

நிஜமான ஹீரோ!



ஏதியோபிய நாட்டில், பஞ்சத்தில் அடிபட்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன். விடா முயற்சியுடன், கடுமையாக உழைத்து, ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்து கொண்டு தங்க மெடல் வாங்குகிறான்! 'என்டியூரன்ஸ்' என்ற ஆங்கிலப் படத்தின் கதை இது! நிஜ கதை! ஹெய்ல் ஜெப்ரசிலாசி என்ற எதியோப்பிய ஓட்டப் பந்தய வீரராக அதில் நடித்திருப்பவர்– அந்த வீரரேதான்!

– **சி.எம்.**

விளங்காமல் காந்தி அழகு பக்கம் திரும்ப,

"ஜி! இன்னும் கொஞ்ச நேரத்தில இங்க நடக்கப் போறது "என்கௌண்டர் டெத்." அவன் தீவிரவாதி. கோர்ட்டுக்கு போகாமலே நீதி வழங்கப் போறாங்க. நாம போயிடலாம் – எந்தக் கேள்வியும் கேட்காதீங்க."

சென்னை வந்ததும் பெருமை தாளவில்லை அழகுக்கு.

"அழகு! சென்னைனா என் நினைவுக்கு வருவது பிரசித்தமான கல்லூரிகள், அறிவுபூர்வமான தலைவர்கள், ஒழுக்கமான மக்கள்..."

சைதாப்பேட்டை ரயில்வே கேட் மூட அவர்கள் கார் நின்றது.

"ஒழுக்கமான நியாயமான மக்கள்..." என்றவர், திடுக்கிட்டு... "ஐயோ மூடின கேட்டுக்கு அடில சைக்கிள், மோட்டார் சைக்கிளோட புகுந்து போறாங்க... அழகு! ரயில் வேற வருது... அ..."

"கவலைப்படாதீங்க ஜி! ரயில் நிக்கும்! அந்தக் காலத்தில மக்கள் ரயிலுக்கு வழி விட்டனர். இப்ப ரயிலோட முறை – வழி விடும்! நீங்க சொல்லுங்க..."

"ஒழுக்கமான ரயில்... சே! மக்கள்..." நொந்து போய் வாயடைத்தார்.

மறுநாள் விடியற் காலை கடற்கரை விஜயத்திற்காக கிளம்பி பவர்கட்டான விளக்கில்லாத ஆயிரம் விளக்கு பகுதியைக் கடந்து மேம்பாலம் அருகே சென்ற போது பெரிய க்யூ நிற்பதைப் பார்த்தார் காந்தி.

"அட இதென்ன இவ்வளவு பெரிய க்யூ? ஏதாவது கோயிலா அழகு?"

"கோவில் மாதிரி ஜி! அமெரிக்க தூதரகம். படிச்ச அறிவுஜீவிகள் நம்ம நாட்டை விட்டு ஓட, விசா வாங்க விடியற் காலைல பிரயத்தனப்படறாங்க.."

"ஆச்சரியமா இருக்கு. நாங்க வெளி நாட்டில படிச்சிட்டு தாய்நாட்டுக்குச் சேவை செய்ய திரும்பி வந்தோம். இது தலைகீழா இருக்கு."

"கரெக்ட் ஜி! எல்லாம் தலைகீழ்! ஏன்னா எல்லாத்திலேயும் அரசியல். ஆட்சில, அதிகாரத்தில, தொழில்ல, படிப்பில, நீதில, சினிமாவில..."

அழகு பேசியது எதுவும் அவர் காதுக்கு வரவில்லை. சோர்ந்து போய் கெஸ்ட் ஹவுசிற்கு திரும்பினார். ஆசுவாசப்படுத்திக் கொள்ள டீவியைப் போட்டுப் பார்த்த போது, யதேச்சையாகத்தான் விறுவிறுப்பான அந்த ட்ரெயிலரை பார்த்தார். தன்னைப் போல் ஒருவர் அதில் தெரியவே, "அழகு என்ன மாதிரி அங்க ஒருத்தர்!" – ஆச்சர்யப்பட்டார்.

"ஜி நீங்களேதான்! படம் உங்களைப் பத்தியே! இந்தப் படமும் அரசியல்ல மாட்டிக்கும் போல இருக்கு! 'ஹே ராம்' என்று அந்த ட்ரெயிலர் முடியவும் காந்தி தன்னையறியாமல் 'ஹே ராம்' என்று உச்சரிக்கவும் சட்டென மறைந்து போனார்.

வைகுண்டத்தில் காந்தியின் வெள்ளை அறிக்கை நாராணனையே நடுக்கத்தில் ஆழ்த்தியது. நாரதரைத் தனியாக அழைத்தார்.

"முடிவு செய்து விட்டேன்!" என்றார்.

"நாராயண! நாராயண! பூலோகத்தை ரக்ஷிக்க கல்கி அவதாரமா?"

"இல்லை!"

"பின்னே...?"

"அரசியல்வாதி அவதாரம்!" ●

Rs. 6/-

MARCH
2000

GOKULAM

The monthly magazine for children

Angels who saved lives — True story



THE ROUGH TAILS

— In the wild

The missing slide - Experience

- why do we need English? viewpoint

47, Jawaharlal Nehru
Road, Ekkaduthangal,
Chennai - 600 097

சென்ற நூற்றாண்டின் பத்து

சண்டையிட்ட முண்டே!

ஸென்ஸெக்ஸ் ஆறாயிரத்தைத் தொட்டு புதிய ரிக்கார்டை படைத்தது பெரிசில்லை; எண்ணெய் விலையும் இமாலய உயர்வுகளைத் தொட்டு புதிய சகாப்தத்தை உருவாக்கப் பார்க்கிறதே... அதுதான் "மஹா பெரிசா"கத் தெரிகிறது. முக்கியமாக மாநில பிஜேபிகாரர்களுக்கு. அதுதான் பெரிய பெரிய கற்களாக வைத்து, புறநகர்ப் பகுதிகளில் முக்கிய சாலைகளையெல்லாம் அடைத்து விட்டார்கள்; முண்டே தலைமையில் மறியல், போராட்டம், "சஸ்தி தாரு, மேஹங்கா தேல்; வாஹ் ரே விலாஸ்ராவ் தேரா ஜால்" (விலை மலிந்த சாராயம், விலை ஏறிய எண்ணெய்; ஆஹா... விலாஸ்ராவ் உன் ஆட்டம் அருமை!) கோஷம் என்று ஒரே அமர்க்களம்; "பீக் அவர்ஸில்" எக்கச்சக்க ட்ராஃபிக்ஜாம்! ஒருவழியாக முண்டேவை கைது செய்த பின்தான், போக்குவரத்துக்கு விடுதலை கிடைத்தது. பொதுமக்கள் தவித்து, தகித்து விட்டனர். "எரிச்சலடங்க ஒரு குடம் எண்ணெய்யை அபிஷேகித்துக் கொள்ளலாம் போலிருக்கே" என்று ஒரு மோடாரிஸ்ட் அடித்த கமெண்ட், முண்டேவை எட்டினால் பற்றிக்கொள்ளாதோ!

காசளவு நேசம்

என்னவோ ப்ளாஸ்டிக் இதயத்தைக் கட்டிய ஒரு 'டெட்டி'யைக் (கரடி பொம்மை) கொடுத்தோமா, பக்கத்து ரெஸ்டாரண்டில் கேண்டில் லைட் டின்னர் சாப்பிட்டோமா என்று "வேலண்டைன்ஸ் டே" கொண்டாடிக் கொண்டிருந்தவர்களை இப்படி மலைக்க வைத்து விட்டதே மும்பை! சாக்லேட் பரிசளிக்க வேண்டுமானாலும் 'Godiva' சாக்லேட்டுகள்தான் கேட்கிறார்கள் - அதுதானே குறைந்தபட்ச விலையே 600 ரூபாய்? செய்தித்தாள்கள் முழுக்க, 18 காரட்டுகளில் அமெரிக்கன் டைமண்டுகளைப் பதித்துக் கொண்டு மினுமினுக்கும் இதயங்கள்தான்! - பெண்டண்ட்டாகவோ, மோதிரமாகவோ, காதணியாகவோ... இதயத்தை கையிலும் காதிலும் கழுத்திலும் ஏந்தவைத்து விட்டார்கள்! டிபியர்ஸ் ஆயிரத்தில் ஆரம்பித்ததென்றால், ஸ்வராவ்ஸ்கி கிரிஸ்டல்கள் 2820ல் துவங்கின; வெள்ளைத் தங்கத்திலும் மஞ்சள் தங்கத்திலும் இதயத்தின் 'டிக்-டிக்'கை கேட்க விரும்பியவர்களுக்கு, வாட்ச் வடிவத்தில் ஹார்ட்அட்டாக்கே காத்திருந்தது - 252 மஞ்சள், வெள்ளை வைரங்கள், முள் முனையில் நடக்கும் வைரங்கள் என்று மணிக்கட்டில் சில பல ஆயிரங்கள் கண் சிமிட்டின! விலை எல்லாம் எதற்கு? எல்லாம் 'விலைமதிப்பற்ற' பொக்கிஷப் பரிசுகள் ஆயிற்றே? அட, இந்த பரிசுப் பொருள்களை எல்லாம் கொடுக்க ஒரு வாலண்டைனே இல்லையா? அதையும் ஏற்பாடு செய்ய சில



மும்பை மசாலா :

டாட்காம் கள் இண்டர்நெட்டில் வலை விரித்தன. ஹூம்... அழகு பிசினஸாகி விட்டது; அன்பும் அதே நடத்தில் வந்து விட்டது; அடுத்தது என்னவோ?

வடாதிபத்தியம்

வருடாந்தர அழகியரைப் பார்த்து போரடித்து விட்டதா? வாருங்கள் நூற்றாண்டின் அழகைக் கொஞ்சம் ரசிப்போம்; சென்ற மிலெனியத்தின் மிகச் சிறந்த 10 இந்திய அழகிகள், 10 இந்திய அழகர்களை தேர்வு செய்யச் சொல்லி இண்டியா டைம்ஸ், நெடிஜன்ஸுக்கு விடுத்த அழைப்பில், தேர்வாகி வெற்றி பெற்றிருப்பது முக்காலே மூணு வீசமும் பாலிவுட்காரர்களே! நான்காவது இடத்தில் மஹாராணி காயத்ரி தேவி, ஒன்பதாவது இடத்தில் மாடல் லிஸாரே தவிர மற்ற இடங்களில் அனைத்தும் திரை உலகத் தாரகைகள்தான்! 'ஐஸ்'தான் இமாலயத்தின் உச்சியில் வீற்றிருக்கிறார்! நிறைய வித்தியாசத்தில், வரிசையாக இடம் பெறுபவர்கள் – மாதுரி, மதுபாலா, ரேகா, ஜீனத், டிம்பிள், ஸோனாலி அண்ட் ஊர்மிளா! உடலழகு வசீகரத்துடன், கண்ணியம், பெண்மை, இவையிரண்டும் பெண்களின் அழகை நிர்ணயித்ததாக, நீதிபதிகள் உரைக்கின்றனர்.

ஆணழகர்களில் ஷாருக்கானுக்குத்தான் ஏக மவுசு. அமிதாப்புக்கு எட்டாவது இடம்தான்! தேவானந்தும், தர்மேந்திராவும் இவரை முந்தி விட்டனர். ஸல்மானுக்கு இரண்டாவது இடம் பொருத்தம்தான்; ஆனால் அமீர்கான் லிஸ்டிலேயே இல்லையே? மூன்றாவது இடத்தில் முக்கால் சந்நியாசியும், அரைகுறை அரசியல்வாதியும், இரண்டு பிள்ளைகளை சினிமா உலகுக்குக் கொடுத்தவருமான வினோத் கன்னாவாமே? ஐந்தாவது இடத்தில் ஜாகிர் உசேனும், கடைசியிரண்டில் மிலிந்த் சோமன் அர்ஜுன் ராம்பாலும்கான் (மாடல்கள்) சினிமாவுக்கு

அழகிகள்!

அப்பாற்பட்டவர்கள்.

ஆணழகுக்குத் தேவை தன்னம்பிக்கை, நன்னடத்தை, பெண்களை மதிக்கும் பண்பாம்! கொஞ்சம் சுத்தமும் ஓரளவு நகைச்சுவையும் ப்ளஸ் பாயிண்டுகளாம்!

எல்லாம் சரி... தெற்கில் இப்படிப்பட்டவர்கள் யாரும் இல்லையா?

சுந்தரத் தெலுங்கினில் கதை எழுதி...

SIES கல்வித் திடலில் எழுந்தருளியிருந்த காஞ்சிப் பெரியவர்களின் தரிசனம்... அவர் திருக்கரங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட 33 அடி அனுமனின் தரிசனம்... அவரால் கனகாபிஷேகம் செய்யப்பட்ட மஹா பெரியவர்களின் தரிசனம்... இன்னபிற காரணங்களுக்காக மும்பை வந்திறங்கினார் நரசிம்மராவ். பத்திரிகையாளர்களுடன் பேசிக் கொண்டிருக்கையில், எல்லோரும் அவரவர் தாய்மொழியில் எழுதுவதுதான் சிறப்பானதென்றார். உடனே, இவரது கதையான 'Insider'ஐ ஏன் ஆங்கிலத்தில் எழுதினார் என்று கேட்காமலிருப்பார்களா? 'நான் தெலுங்கில் எழுதியிருந்தால், அதை எப்படி மராத்தியில் மொழிபெயர்த்திருக்க முடியும்?' (அஷோக் ஜெயின் மொழிபெயர்த்திருக்கிறார்) என்றார். ஆனால் இவருக்கே பல மொழிகள் தெரியும். மராத்தி படைப்புகள் பலவற்றை தெலுங்கில் மொழிபெயர்த்திருக்கிறார். இவரே மொழிபெயர்த்திருக்கலாமே என்று யாரும் கேட்கவில்லை; தன் கதையை ஒரு மொழியில் எழுதியதே போதும் போதுமென்றாகியிருக்குமோ?

தேவைதானா?

தீபாமேத்தாவை ம.பியும் பீஹாரும் வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தால் அழைத்துவிட்டுப் போகட்டும்; விலாஸ்ராவ் தேஷ்முக் வேறு அவரை மும்பைக்கு அழைக்க வேண்டுமா? விலாஸ்ராவ், தாக்கரேயின் விலாசத்தையே மறந்து விட்டாரா என்ன? ஒரு 'ஃபயர்' போதாதா? 'வாட்டர்' மூலம் மீண்டுமொரு 'ஃபயர்' தேவைதானா? அதேபோல்... ஃபிலிம்ஃபேர் அவார்டு நிகழ்ச்சிக்கு, பாரீஸ் விருந்து புகழ்பெற்ற 'லீடோ' குழுவை அழைத்ததென்னவோ அழைத்தாகி விட்டது; அப்புறம் தூர்தர்ஷன் காமிராவுக்கு முக்காடு போட்டு பவித்திரப்படுத்துவது... தேவைதானா? முக்கால்வாசியும் லாங் ஷாட்டுகள்; நடுநடுவே "ஃபிலிம்ஃபேர்' அவார்டைப் 'பார்க்கச்' சொல்லி பார்க்கவிடாமல் தடுக்கும் சம்பந்தமில்லாத 'சென்சார்' ஸ்லைடுகள்... நெதர்லண்டின் தங்க மங்கையர் ஆடிய போது நடுநடுவே ஆடியன்ஸிலிருந்த ராகேஷ் ரோஷனை வேறு காட்டினார்கள்... பாவம்... மனிதர் இப்போதுதான் 'பை பாஸ்'ஸெல்லாம் செய்து கொண்டு வந்திருக்கிறார்.... இதெல்லாம்... தேவைதானா?

— ஜெயஸ்ரீ ராஜ்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

57 குறையொன்று

எல்லோரது சிந்தையையும் கவரும் திவ்ய சௌந்தர்யம் உடையவன் பகவான் என்று சொன்னேனல்லவா! தசரதன் அந்த ராமனை என்னமாய் அனுபவித்தான் என்றும் சொல்லியிருக்கிறேன். சுமந்தரனிடத்திலே சொல்லி ராமனை வரவழைப்பானாம். வருகையிலே அவன் முன்னழகைப் பார்த்து மகிழ்வானாம். "அப்பா! சுூப்பிட்டீர்களாமே?" என்றால் "போ!" என்று அனுப்பிவிடுவானாம். போய் மறைகிற நேரத்தில் மீண்டும் "வா!" என்பானாம்!

"வா" என்கிறபோது முன்னழகையும்

"போ" என்கிறபோது ராமனின் பின்னழகையும் மாற்றி மாற்றி சேவித்திருக்கிறான் தசரதன்.

அப்படிப்பட்ட திவ்யமான மங்களமான ரூபமுடையவன் விஷ்ணு. மங்களமான அவனைச் சுமந்து வருகிறவன் கருடன்.

மங்களம் பகவான் விஷ்ணு :

மங்களம் கருடத்வஜ :

என்று வேதம் அழகாகச் சொல்கிறது. இந்த மந்திரத்தைச் சொல்லித்தான் அங்கங்கே நடக்கிற உத்ஸவங்களில் த்வஜாரோஹணம் பண்ணுவார்கள்.

திருப்பதியிலே பிரும்மோத்ஸவத்திலே கருடனைக் கொடியிலே எழுதி த்வஜாரோஹணம் – கொடியேற்றுதல் – செய்யும்போது இந்த மந்திரத்தைச் சொல்லுவதைப் பார்க்கலாம்.

வேதம் கருடனை எப்படிக் கொண்டாடுகிறது பாருங்கள் :

நல்ல அழகான இறக்கையை உடையவன் கருடன்.

அது மட்டுமல்ல, அவனுடைய நேத்திரம் இருக்கிறதே – அது என்ன...?

காயத்ரி மகாமந்திரமே கருடனின் நேத்திரமாக இருக்கிறது.

ஸ்தோமம் என்றால் ஸ்தோத்திரம். யக்ஞத்திலே தேவதைகளை ஸ்தோத்திரம் பண்ணுகிற மந்திரங்கள். இந்த ஸ்தோமம் என்பதுதான் கருடனுக்கு சிரஸாக – தலையாக இருக்கிறது. இறக்கைகளெல்லாம் அழகாக மடிந்து மடிந்து, அவை மொத்தம் யக்ஞங்களாகவே இருக்கின்றன. சாம வேதமே சரீரமாக இருக்கிறது கருடத்மானுக்கு.

ஆகவே, 'கருடன் யார்?' என்று கேட்டால் அவன்தான் வேதம்! வேதத்தின் மேலே உட்கார்ந்து கொண்டிருக்கிறான் பகவான்.

ச்ருதி சிரஸி விதீர்த்தே

ப்ரும்மணி ஸ்ரீநிவாஸே!

– வேதங்கள் அனைத்தினாலேயும் அறியப்பட வேண்டியவன் அவனே.

அதனால்தான் கருட சேவை ரொம்ப விசேஷம் என்று கொண்டாடப்படுகிறது.

கருடக் கொடியுடையவனான அவன் மங்களமானவன்; கருட வாகனனான அவன் மங்களமானவன்; அவனை ஸ்மரணை பண்ணுவது இருக்கிறதே... அது பரம மங்களம்.

மங்களாயதனோ ஹரி :

'ஆயதம்' என்றால் இருப்பிடம் என்று அர்த்தம்.

'யோபாம் புஷ்பம் வேதா' என்று ஆரம்பித்துச் சொல்கிறோமே, அதிலே 'யோபாம் ஆயதன் வேதா, ஆயதனவான் பவதி' என்றெல்லாம் வரிசையாக கனத்திலே வருகிறது. மந்திர புஷ்பத்தை பகவானுக்குச் சமர்ப்பிக்கிறபோது சொல்ல வேண்டிய மந்திரம்.

இந்த ஆயதனம் என்ற பதத்துக்கு இருப்பிடம் என்று பொருள்.

மங்களங்கள் அனைத்தும் எதை இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றன என்றால்,

மங்களாயதன: ஹரி:

ஹரி : என்று சொல்லக்கூடிய விஷ்ணு இருக்கிறானே, அவன்தான் மங்களங்களுக்கெல்லாம் இருப்பிடமாக இருக்கிறான்.

புண்டரீகாக்ஷனான அந்த விஷ்ணுவை தியானம் பண்ணினால், உள்ளே – வெளியே சுத்தியை உண்டுபண்ணக்கூடியவன்.

மங்களத்தைக் கொடுக்கக்கூடியவன். இதைத் தான் கருட புராணம் சொல்கிறது.

பரத்வாஜ சம்ஹிதை என்பது ரொம்ப விசேஷமானது. பரத்வாஜ கோத்திரத்தில் வந்தவர்களுக்கெல்லாம் ஒரு ஏற்றம். மட்டபள்ளி லக்ஷ்மி நரசிம்ஹனிடத்திலே ரொம்ப ஈடுபட்டவர் பரத்வாஜ மஹரிஷி. அனவரதம் அவனை சேவித்தார். அவனுடைய பெருமைகளையெல்லாம் பல விஷயங்களில் காட்டியவர். எல்லாவற்றையும் பரத்வாஜ சம்ஹிதையிலே சொல்லியிருக்கிறார்.

பரத்வாஜ சம்ஹிதை என்பது பல சுலோகங்களால் ஆனது. பல தர்மங்களைக் காட்டுவது. அதிலே அவர் சொல்கிறார் :

'பிரபத்தியைக் காட்டிலும் உயர்ந்த வித்யை இல்லை.

விஷ்ணுவைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை.'

– பரத்வாஜ சம்ஹிதையிலே இதை நாம் பார்க்கிறோம்.

வித்யைகள் பல உண்டு. அவற்றுள் முக்கியமான 32 பிரும்ம வித்யைகள் ஆசார்யர்களால் எடுத்துக் காட்டப்படுகின்றன.

"அது என்ன, பெரிய பிரும்ம வித்யையா!" என்று உலக வழக்கிலே கேட்பதுண்டு.

ஏனென்றால் பிரும்ம வித்யை என்பது அவ்வளவு கஷ்டமானது! அதை நடத்திக் காட்டுவது என்பது அவ்வளவு கஷ்டம். பூர்வ காலத்திலே சிரமப்பட்டு அதை நடத்தினார்கள்; மகான்களான மஹரிஷிகள். இந்தக் காலத்தில், அவசர யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நம்மைப்

மில்லை



போன்றவர்கள் அரை மணி நேரத்தில் முடிக்கக்கூடிய சந்தியாவந்தனத்தைச் செய்யவே சிரமப்படுகிறோம். அப்படியிருக்கையில் பிரும்ம வித்யைகளிடம் நெருங்கிப் போகவே நாம் தகுதியற்றவர்கள் என்பதை உணர வேண்டும். அந்த பிரும்ம வித்யையைப் பார்த்துக் கைகூப்ப வேண்டும். ஏனென்றால் நம்மால் பண்ணவே முடியாதது அது.

அப்படி ரொம்ப கஷ்டமான வித்யைகள் அதிலே அடங்கியிருக்கின்றன. ரொம்ப சிரமப்பட்டுத்தான் அவற்றை சாதிக்க முடியும். – பஞ்சாக்னி வித்யை என்று ஒரு வித்யை. நல்ல வெயில் காலத்தில் ஐந்து அக்னிகளுக்கு நடுவே தவம்!

நமக்கோ காற்று கொஞ்சம் குறைவாயிருந்தாலே முன்னாலே ஒரு ஃபேன், பின்னாலே ஒன்று தேவைப்படுகிறது. குரலை பலப்படுத்திக் காட்ட இரண்டு ஒலிபெருக்கிகள். இதெல்லாம் வைத்துக் கொண்டு பிரவசனம் பண்ணுவதிலே என்ன சிரமம் இருக்கிறது? ஒரு சிரமமும் இல்லையே! பகவத் குணத்தைச் சொல்வதில் ஒரு கஷ்டமும் இல்லாமல் ரொம்ப நேரம் சொல்லிக் கொண்டேயிருக்கலாம்.

ஆனால் வித்யையிலே போய் இறங்கினோமானால் வெயில் காலத்தில், சித்திரை வைகாசியில் கொளுத்துகிற வெயிலில், கார்கபத்யம், ஆகமனீயம் தக்ஷிணாக்னி என்று மூன்று ஹோமகுண்டங்கள் பக்கத்தில் ஜொலிக்கும். இன்னொரு ஹோம குண்டம் – அதற்கு ஔபாஸனாக்னி என்று பெயர். அது பக்கத்தில் ஜொலிக்கும். இதற்கு இடையிலே நாம் நின்று கொண்டிருக்க வேண்டும். நான்கு அக்னிகளுக்கும் நடுவே நின்று ஒரு காலைத் தூக்கி ஒரு கால் மேல் வைத்துக் கொண்டு, இரண்டு கைகளையும் மேலே தூக்கி, மேலேயிருந்து ஒரு அக்னி – சூரியன் தஹிக்கிறான் – அதையும் தாங்கிக் கொண்டு கீழே நான்கு அக்னிகளையும் தாங்கிக் கொள்ள வேண்டும். அவை நம்மைச் சுடச் சுட தியானம் பண்ண வேண்டும்.

அதே போல் மார்கழி – தை மாதம் ஹேமந்த ருது – அப்போது கழுத்தளவு ஜலத்திலே நின்று கொண்டு குளிரில் உபாஸனை பண்ண வேண்டும். அவ்வளவு கடினமான நியமம்!


மார்கழியிலே தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதே கஷ்டம்! தனுர் மாசம் என்று அதற்குப் பெயர் ஏன் வந்தது என்றால், அவரவர்கள் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாலே தெரியுமே என்பார்கள்!

வெயில் காலத்திலே நன்றாகக் கையை, காலை நீட்டிப் படுத்துக் கொண்டிருப்பார்கள். 'தனு' என்றால் வில். தனுர் மாசத்தில் வில்லைப் போல் வளைந்துதான் படுத்துக் கொண்டிருப்பார்கள் எல்லோரும்! தலைக்கும் காலுக்கும் நாண் பூட்டும்படியாக வளைந்து படுத்துக் கொண்டிருப்பார்கள்!

உபநிஷத் சொல்கிறது : எழுந்திரு! விழித்துக் கொள்! உன்னை நாடி வரும் பலன்களை அனுபவிக்க, இப்படித் தூங்கினாயானால் முடியுமா? தூங்கினால் எல்லாவற்றையும் இழந்து விடுவாயே! என்கிறது.

ஆகவே தூக்கம் நம்மைக் கெடுக்கிறது. நன்மைகளை அடைய விடாமல் கெடுக்கிறது.

விதிக்கப்பட்ட காலம்தான் நித்திரை



''கவலைப்படாதே குழந்தாய்! நீ 'ஜெய'த்தை அடைய என் ஆசி எப்பவும் உண்டு...''

''இல்லை குருவே, எனக்கு 'ஜெயத்'தின் மீது நாட்டம் இல்லை. அவள் தங்கை ராஜேஸ்வரியை அடைய ஆசி அருளுங்கள்!''

– சீர்காழி கே.ஆர்.வி.

''தலைவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது தப்பாப் போச்சு!''

''ஏன்?''

''தன் உதவியாளருக்கு கம்பவுண்டர் பட்டம் கொடுக்கணும்னு பிடிவாதம் பிடிக்கிறாரு!''

– மெலட்டூர் விசுவநாதன்



கொள்ள வேண்டும். ராத்திரிப் பொழுதை நான்கு யாமமாகப் பிரிக்கிறது சாஸ்திரம். ஒரு யாமத்துக்கு மூன்று மணி கணக்கு. சாயங்காலம் ஆறு மணியிலிருந்து ஒன்பது மணி வரையில் ஒரு யாமம். அப்போது முழித்துக் கொண்டிருக்க வேண்டும். ஒன்பதிலிருந்து காலை மூன்று மணி வரைக்கும் ஆறு மணி நேரம் தூங்கலாம் என்கிறது சாஸ்திரம். மூன்று மணிக்கு எழுந்து விட வேண்டும். ஆத்மாவுக்கு இதமான எம்பெருமானை நினைக்க வேண்டும் அந்த பிரும்ம முஹூர்த்தத்திலே.

ஆனால் பிரும்ம முஹூர்த்தம் ஆரம்பிக்கிற மூன்று மணிக்கு மேலே தான் நமக்கு ரொம்ப சுவாரஸ்யமாகத் தூக்கம் வரும்!

ஆகையினாலே குளிர்காலத்திலே ஜலத்தில் நின்று தவம் செய்வதும், வெயில் காலத்தில் அக்னிக்கு மத்தியில் உபாஸிப்பதும் எவ்வளவு கஷ்டம்! அந்த மாதிரி உபாஸித்து பகவானை அடைவது எவ்வளவு சிரமம்! இப்போது நம்மால் பஞ்சாக்னி சித்தி பண்ண முடியுமா! கேட்கிற போதே அது ரொம்ப சிரமம் என்று தெரிகிறது. அப்புறம் கிட்டே போய் முயன்று பார்த்தால்...? இரண்டு நாட்கள் வேண்டுமானால் பண்ண முடியுமோ என்னவோ. அப்புறம் கிடுகிடுவென எழுந்து வரவேண்டியதுதான். இப்படி பாதியிலே விட்டோமானால் அடுத்த ஜன்மா என்ன பிறப்பாக இருக்குமோ தெரியாது!

ஆகையினாலேதான் இந்த பிரும்ம வித்யைகளை நோக்கி ஒரு நமஸ்காரம் பண்ண வேண்டும்!

இதற்கு ஒரு சுவாரஸ்யமான கதை உண்டு. அதை அடுத்த வாரம் சொல்கிறேன்.

(தொடரும்)

அருள்வாக்கு

பிரபஞ்சத்தின் சகல ஆட்டத்துக்கும் காரணம் ஒரே ஒரு பராசக்திதான். அந்த ஒரே ஈசுவரனுடைய ஆக்ஞைப்படிதான் உலக இயக்கம் முழுதும் நடக்கிறது. அவன் பல விஷயங்களைச் சம்பந்தப்படுத்தி விடுகிறான். இந்த உலகத்தில் எதுவுமே



தொடர்பில்லாமல் நடக்கவில்லை. நமக்குச் சம்பந்தமில்லாதவையாகத் தோன்றுவதை எல்லாம் உள்ளூரச் சம்பந்தப்படுத்தி வேடிக்கை பார்க்கிறான் பரமேசுவரன்.

ஒருவர் செய்கிற கர்மம், அதன் பலன் இவையே மனித வாழ்வின் சுக துக்கங்களுக்கு முதற் காரணம். இதற்கே துணைக் காரணமாக- அல்லது அடையாளமாக- கிரகசாரம், தெய்வ குற்றம், ஆரோக்கியக் குறைவு முதலியன அமைகின்றன.

ஜாதக ரீதியில், வைத்திய ரீதியில், மாந்திரீக ரீதியில் எப்படி வேண்டுமானாலும் பரிகாரம் தேடிக் கொள்ளலாம். நம் கர்மா தீருகிறபோது அவை பலன் தரும். பகவான் விட்ட வழி என்று பக்தியோடு நம் வாழ்க்கையை ஈசுவரார்ப்பணம் செய்துவிட்டுப் பேசாமல் கிடக்கிற பக்குவம் இருந்தால் எல்லாவற்றையும் விட அது சிலாக்கியம். அதுவே பெரிய பரிகாரம்; உண்மையான பரிகாரம்.

பூர்வ கர்ம சமாசாரம் எப்படிப் போனாலும் இனிமேலாவது கர்மபாரம் ஏறாமல் பார்த்துக் கொள்வதே முக்கியம். பழையதற்குப் பரிகாரம் தேடுவதைவிட, புதிய சுமை சேராமல், பாவம் பண்ணாமல் வாழ்வதற்கு ஈசுவரனைத் துணைகொள்வதே முக்கியம்.

பூர்வ கர்மத்தால் இப்போது ஏற்பட்டுள்ள துக்கத்துக்கும் உண்மைப் பரிகாரம் ஈசுவர தியானம்தான்; இனிமேல் துக்கத்துக்கு விதை போட்டுக் கொள்ளாமல் இருக்கிற உபாயமும் ஈசுவர தியானம் தான். துக்கம் தருவதாக இன்னொரு வஸ்துவே இல்லை என்ற அத்வைத அநுபவம் சித்திப்பதே இதன் முடிந்த முடிவான துக்க பரிகார நிலை. அங்கே துக்கமும் இல்லை; சுகமும் இல்லை; இரண்டுக்கும் ஆதாரமான சத்தியம் மட்டும் சுயம் பிரகாசமாக இருக்கும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய
ஸ்வாமிகள்



• அதிமேதாவி!



• ஏக்கம்!



• ஓ கே!

ஜெ-மூப்பனார் கூட்டு பற்றி ராவ் என்ன நினைப்பார்..?

● எம். குணசேகரன்,
வேலாயுதம்பாளையம்.

? இந்தியாவுக்கு வரும் கிளிண்டன் பாகிஸ்தானுக்குப் போவது – போகாமல் புறக்கணிப்பது எது சரியானது?

! புறக்கணிப்பதே புத்திசாலித்தனம். போனால் ராணுவ ஆட்சியை அங்கீகரிப்பதாகிவிடும்.

● பி.எம். வள்ளி, மதுரை – 16.

? நெல்லிக்குப்பம் தொகுதி தேர்தல் பிரசாரத்துக்காக சென்னையிலிருந்து ஜெயலலிதா 28 கார்கள் 40 சூட்கேஸ்கள் அணிவகுப்புடன் வந்தாராமே...?

! கணக்கிலடங்காத புளுகு மூட்டைகளை விட்டு விட்டீர்களே!

● எஸ். சேகர், சென்னை – 24. ❑

? ஜெயலலிதாவுடன் மூப்பனார் கூட்டு சேர்ந்திருப்பதைப் பற்றி நரசிம்மராவ் என்ன நினைப்பார்?

! 'இதைத்தானே நான் அஞ்சு வருஷம் முன்னால செஞ்சேன்! அப்பவே ஒத்துப் போயிருந்தா ஆதாயமா இருந்திருக்குமே. உன்னாலே நான் கெட்டேன்; என்னாலே நீ கெட்டே!'

● கி. பலராமன், கோவை.

? சிதார் கலைஞர் விலாயத் கான் பத்மபூஷண் விருதை ஏற்க மறுத்து விட்டது பற்றி...?

! மிகத் தாமதமாக – குறிப்பாக ரவிசங்கருக்குத் தந்த பிறகு தமக்குத் தரப்பட்டதுதான் காரணம் என்று அவரே சொல்லி விட்டாரே!

● என். உஷாதேவி, மதுரை – 9.

? 'வருகிற தேர்தலில் மக்கள் நிதானத்துடன் சிந்தித்து வோட்டுப் போட்டால் நாங்கள் வெற்றி பெறுவோம்' என்று மூப்பனார் கூறியிருக்கிறாரே?

! 'நீங்க முதல்ல சிந்தித்து வோட்டுக் கேளுங்க' என்று சிந்திக்கத் தெரிந்த வாக்காளர்கள் சொல்கிறார்கள்.

● எஸ். ரஜினிப்ரியன், ஈரோடு – 1. ✱

? புகழ்பெற்ற மேஜிக் நிபுணர் பி.சி. சர்க்காரின் மேஜிக் ஷோவில் (கேரளாவில் நடந்தது) கடைசி ஐட்டத்தில் சொதப்பி ரசிகர்களின் தாக்குதலுக்கு அவர் ஆளானது குறித்து...?

! மேஜிக் காட்சிகள் எல்லாமே கண்களை ஏமாற்றும் வித்தைகள்தானேயொழிய அமானுஷ்ய சக்தியின் வெளிப்பாடு அல்ல. எனவே ஏமாற்ற முயன்றார் என்ற குற்றச்சாட்டுக்கே இடமில்லை. சிரித்துவிட்டுப் போவதற்குப் பதில் சினங்கொண்டு எழுந்தவர்கள், பாவம், நகைச்சுவை உணர்வு இல்லாதவர்கள்.

● ஏ. ஆரோக்கியராஜ், விஜயவாடா.

? 'அரசு மீது கோபம் இருந்தால் தனியார் பஸ்ஸை அ.தி.மு.க.வினர் கொளுத்தியிருப்பார்களா?' என்று கி. வீரமணி கேட்பது மகாபுத்திசாலித்தனமாகப் படவில்லை...?


! புத்திசாலித்தனம் மட்டும் அல்ல; அரசு மீது கோபமிருந்தால் அரசு பஸ்

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
எஸ். சேகர்,
குமரன் ஒயின்ஸ்,
5/3, கங்கை அம்மன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை - 24.

✱ ரூ. 25 பரிசு பெறுபவர் :
எஸ். ரஜினிப்ரியன்,
C/o 118, எஸ்.கே.ஸி. ரோடு,
ஈரோடு - 638 001.



• மற்றொரு மூட்டை!



• சிந்திக்காமல் சொன்னது!

நீங்கள் கேட்டவை

— தராசு

ஸைக் கொளுத்த வேண்டும்; தனியார் மீது கோபமிருந்தால் தனியார் பஸ்ஸைக் கொளுத்த வேண்டும் என்று சொல்கிற அதி மேதாவித்தனம்.

● **வி. லக்ஷ்மிராமன்,**
சென்னை – 73.

? ***தியாகராஜஸ்வாமி, பட்டணம் சுப்ரமண்ய அய்யர் போன்றோர் ஆங்கிலேயர் பாண்ட் வாத்யத்தைக் கவனித்து கர்நாடக இசையில் கிருதிகளை அமைத்தார்கள். கர்நாடக சங்கீதம் உலகின் எல்லா இசைகளின் சிறப்பு அம்சங்களையும் கிரஹித்துக் கொள்கிறது என்று சொல்லலாமா?***

! அதில் சந்தேகமில்லை. மேலை சங்கீதம் மட்டுமின்றி ஹிந்துஸ்தானி, கிராமிய இசைகளிலிருந்தும் கர்நாடக சங்கீதம் கிரஹித்துக் கொண்டிருக்கிறது. அதே சமயம், அப்படி கிரஹித்ததைச் சொந்தமாக்கிக் கொள்ளும் அளவுக்குப் 'பதப்படுத்தி'யும் இருக்கிறது. இந்தப் பதப்படுத்தல் இல்லையென்றால் கர்நாடக சங்கீதம் தனது தனித்தன்மையை இழந்துவிட்டிருக்கும்.

● **கு. கணேசன், பனங்கோட்டூர்.**

? ***பீஹாரில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் வேலை இல்லாத இளைஞர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் நிதி அளிக்கப்படும் என்று சோனியா காந்தி அறிவித்திருப்பது பற்றி...?***

! 'வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தரப்படும்' என்று சொன்னால் வாக்குறுதி; 'லட்ச ரூபாய் தருவேன்' என்று கூறினால் நாட்டின் பொருளாதாரத்தைக் குட்டிச் சுவராக்குவேன் என்பதான வாக்குமூலம்.

● **எஸ். அப்துல் சமீது,**
நாவினிப்பட்டி.

? ***வாஜ்பாய் அரசின் செயல்பாடுகள் குறித்து தராசின் கருத்து?***

! கூட்டணியில் அனைவரும் ஏற்கத்தக்க, அவசியம் செய்தாக வேண்டிய காரியங்களில் மெத்தனம்; தேவையற்ற அம்சங்களில் ஈடுபடுவதால் புதிய பிரச்னைகள்.

● **டி.என். சத்யா முருகவேல், ஈரோடு.**

? ***பகுத்தறிவு என்பது 'கடவுள் இல்லை' என்பது மட்டுமா? இல்லை அதற்குப் பொருள் வேறு ஏதாவது உண்டா?***

! மூட நம்பிக்கைகளையும் அதனால் ஏற்படும் சமுதாயச் சிக்கல்களையும் களைவதுதான் பகுத்தறிவு. அது எல்லோரும் ஏற்கத்தக்கது. கடவுளை மறுப்பது நாத்திகவாதம். அதை ஏற்பது மிகப் பெரும்பாலோருக்கு ரொம்பக் கஷ்டமான காரியம்.

● **வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சாவூர் – 7.**

? ***நரசிம்மராவ் அன்று ஜெயலலிதாவுடன் கூட்டு சேர்ந்தபோது உணர்ச்சி வசப்பட்டு ஆர்ப்பரித்த தொண்டர்கள் இப்போது மூப்பனார் ஜெ கூட்டணியைக் கண்டு கொள்ளாதது ஏன்...?***

! தலைவன் எவ்வழி அவ்வழி தொண்டர்கள் என்பது ஒன்று. ஆட்சியில் பங்கேற்றுச் சுருட்ட வேண்டும் என்ற ஆசை தொண்டர்களுக்கு வந்து விட்டது இரண்டாவது. ஆனால், மத்தியிலும் சரி, மாநிலத்திலும் சரி அது நடக்கப் போவதில்லை.

● **கு. சரவணன், பாளையங்கோட்டை.**

? ***இந்திய விமானம் போன்றே ஆப்கானிஸ்தானிலும் விமானம் கடத்தப்பட்டிருக்கிறதே – இது குறித்து...?***

! கடத்தப்பட்டவர்கள் பலர் நாடு திரும்ப விரும்பவில்லை என்பது ஆப்கானிஸ்தான் நிலைமைக்குச் சான்று!

● **எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**

? ***எது கோமாளித்தனம்?***

! காதலர் தினம் கொண்டாடக் கூடாது என்று காவிக் கட்சிக்காரர்கள் தடை விதிக்க முயல்வது கோமாளித்தனம்; அதற்காக வன்முறையைக் கையாள்வது அராஜகம்!



• கடைந் தேங்காய்...



• புறக்கணிப்பே...



• புத்திசாலித்தனம்!

இதயங்கள் இணைக்கிறோம்...

✉ கல்வியை நேசித்த மாணவிகளுக்கு - செல்வியை நேசித்த தொண்டர்களின் பரிசு - மரணம் - உலகம் எங்கேயோ முன்னேறிக் கொண்டுள்ள வேளையில் நாம் பின்நோக்கிச் செல்கிறோமோ என எண்ணத் தோன்றியது.
சென்னை - 44, எஸ். உஷா சங்கர்.

✉ ஊடலுக்குப் பத்துக் குறள்களை எழுதிய திருவள்ளுவர் இன்று உயிருடனிருந்திருந்தால் ஊழலுக்கும் ஒரு அதிகாரத்தை எழுதியிருப்பார்!
நெய்வேலி, எஸ். இந்துமதி.



✉ 'மூப்பனார் கிளப்பிய 'ஸ்பெஷல்' புழுதி!' தலைப்பில் அரசியல் விமர்சகர்கள் கூறிய கருத்துக்களின் தொகுப்பைப் படித்தேன். மூப்பனார் அ.தி.மு.க வுக்கு ஆதரவு தெரிவித்ததற்கு ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும் எஸ். குருமூர்த்தி கூறியிருந்த ஒரு விஷயம் நியாயமானது. அது, 'த.மா.கா என்று ஒரு கட்சி இனி தேவைதானா?' என்பது தான்.
மொரட்டுப்பாளையம், கு.நா. இராஜேஸ்வரன்.

✉ சட்டத்தின் சந்து பொந்துகளில் புகுந்து கபளீகரம் செய்யும் ஆற்றல் தலைமைக்கு இருப்பதால், அ.தி.மு.க தொண்டர்களும் சட்டத்தை அவமதிக்கும் அநாகரிகச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை. திராவிட ஆட்சிகளுக்கு மாற்றாக மூப்பனார் தமிழக அரசியலில் திருப்பத்தை ஏற்படுத்துவார் என்னும் எதிர்பார்ப்பு போயஸ்கார்டனின் விருப்பத்துக்கு விலை போனதால் புதை குழிக்குள் போய்விட்டது!
நெல்லையப்பபுரம், டி. செல்வன்.

✉ திரிபுரா இந்தியாவின் ஒரு மாநிலம்தானா என்றே சந்தேகம் வருகிறது. இவ்வளவு தைரியமாக ஒரு கும்பல்! அரசு (மாநில + மைய) ஏன் தைரியமாக நடவடிக்கை எடுக்காமல் உள்ளது?
காரைக்குடி, பாலு.

✉ வியாண்டரின் காதல் வாழட்டும், வாழ்த்துக்கள்! புதுக வந்ததும் பழசை மறந்திடாமல் இரண்டாவது காதலியின் மீது அதிக அன்பு செலுத்தி முதல் காதலியான டென்னிசை பயஸ் மறக்காமல் இருக்க வேண்டும். ஏன் எனில் இந்தியா அவரிடம்தான் தன் டென்னிஸ் மானத்தை ஒப்படைத்து உள்ளது!
லால்குடி, எம். இராஜேந்திரன்.

✉ மனிதர்களைக் கொல்லும் வெறியர்கள் மலிந்து விட்ட நாளில் சமய சமரசக் கோயில் புத்தாயிரத்தாண்டிலாவது புதிய சமரச சிந்தனைக்கு வழி காட்டட்டும்.
புனே-44, ஜெ. ரஜினி ராம்கி.

✉ ஊஞ்சல் காதலர்களின் பேட்டி, மணிரத்னம் பட வசனம் போல் எளிமையாய், ரசிக்கும்படி இருந்தது.
திருச்சி- 14, ராஜிராதா.

✉ இவ் வார சுபியின் 'உல்லாச வாழ்க்கைக்கு' ஆறு யுக்திகளும், மூன்று மாதத்திற்குப் பிறகு நிகழும் 6 'மாற்ற' யுக்திகளும் படித்தவுடன் சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த தரமான செய்தி.
திருச்சி - 17, உஷா முத்துராமன்.

✉ யுக பாரதியின் 'நீ' கவிதை, இந்த வாரத்திற்கான 'கல்கி'யின் பரிசு! நன்றி. தொடருமா கவிவலம்?
சாத்தியாகுளம், சு. பாக்யமலர்.

✉ என் வீட்டில் இருந்து ஒரு பர்லாங் தூரத்தில் அரசு நூலகம் ஒன்று வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. எப்போது திறப்பார்கள் - மூடுவார்கள் என நேரம் போட்ட பலகை உண்டு. நடைமுறையில் அதிக நாள் மூடு விழாதான். அதையும் எழுத மாட்டார்கள். போய்ப் பார்த்துவிட்டு பலமுறை திரும்பி இருக்கிறேன். இது குறித்து மாவட்ட நூலகருக்கும் போனில் பல தடவை சொன்னேன்; வாடகை + ஆள் சம்பளம், எல்லாம் வீணா எனவும் கேட்டேன்.

அதை விட முக்கியமானது. இதில் மெம்பராகச் சேர வேண்டுமானால் டெபாசிட் பணம் கொடுத்தால் போதாது, எம்.எல்.ஏ., எம்.பி சான்றிதழ் வேண்டும்! இப்போது ஒரு நூலகத்திலிருந்து இன்னொரு நூலகத்துக்குக் கார்டுகளை மாற்றிக் கொள்ளும் வசதியும் இல்லையாம்!

நூலகங்களுக்கு நான் நிறைய நூல்கள் வாங்கித் தந்துள்ளேன். அதற்கும் ஏதும் கடிதம் தருவதில்லை, என்ன செய்கிறார்கள் என தெரியவில்லை. எனவே இப்போது நான் தனியார் நூலகத்தில் சேர்ந்து படிக்க ஆரம்பித்து விட்டேன்.
கோயம்புத்தூர் - 45, வி.கே. துறையன்.



இது வரை கண்டிராத மாயா ஜால தந்திரக் காட்சிகள் நிறைந்த ஜாலியான தொடர்.

சித்தர் மலையில் 2000 ஆண்டுகளாக வாழும் ஜிங்கலன் என்ற சித்தர் கர்ணனின் கவசத்தையும், ஆயுதங்களையும் தகுந்த ஒருவரிடம் ஒப்படைப்பதற்காக பாதுகாத்து வருகிறார். மூன்று குள்ளர்களும் அந்த மலையில் வசிக்கிறனர். அருகில் உள்ள மிதிலாபுரத்தில் மாரகன் என்ற மந்திரவாதி தனது மந்திர சக்தியினால் மக்களை துன்புறுத்தி வருகிறான். அவனிடம் பிடிபடும் ஒரு குள்ளன் உயிருக்குப் பயந்து சித்தரிடம் உள்ள கவசத்தைப் பற்றி அவனிடம் கூறிவிடுகிறான். அதைக் கைப்பற்ற வரும் மாரகனுக்கும், சித்தருக்கும் நடைபெறும் மந்திர தந்திரப் போரில், சித்தர் அருகில் உள்ள பாண்டவபுரத்தை சேர்ந்த அப்பாவி சுயம்புவால் காப்பாற்றப்படுகிறார். சுயம்புவின் நல்ல உள்ளத்தை அறிந்த சித்தர், அவனுக்கு மந்திர தந்திரங்கள் கற்றுக் கொடுப்பதுடன், கவசத்தையும் அளிக்கிறார். சுயம்பு கவசம் அணிந்த உடன் மறையும் 'மாயா' என்ற வீரனாகி அநீதியை எதிர்த்து தனது போராட்டத்தை தொடர்கிறான்.

சித்தர் மலைக்கு மூலிகைகள் பற்றி எழுத வந்த பத்திரிகை நிருபர் நிவேதிதா சுயம்புவின் அப்பாவித்தனத்தால் ஈர்க்கப்படுகிறாள். ஆனால் சுயம்புதான் மாயா என்று அறியாமல் மாயாவை நேசிக்கிறாள். நிவேதிதாவை நேசிக்கும் சுயம்பு தனது காதலை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கிறான். விடை சின்னத்திரையில்.

நடிப்பு : நாகேந்திர பிரசாத் (பிரபு தேவாவின் தம்பி) ஸ்வர்ணா, காந்திமதி.

இயக்கம் : பி.ஆர். விஜயலக்ஷ்மி

vijay

புதுமை என்றென்றும்

விஜய் டி.வியில் அக். 27 முதல் ஒவ்வொரு புதன்கிழமையும் இரவு 8.00 மணிக்கு

அந்த இருபது நாட்களும் லாரி போன்ற கனரக வாகனங்களின் ஹார்ன் ஒலி கேட்கும் போதெல்லாம் மனத்தினுள் ஓர் இறுக்கம் தோன்றிய வண்ணம் இருந்தது.

சிறிய பூனை லாரியின் சக்கரத்தில் நேராகத் தாவி விழுந்து விநாடி நேரத்தில் கூழாகிப் போன கோரக் காட்சி, அப்படியே கண் முன் விரிந்து கஷ்டப் படுத்தியது.

யாரையும் நோக முடியாத சிறிய நிகழ்ச்சிதான்.

ஒருவேளை நெருக்கத்தில் பார்த்த திடீர் அதிர்ச்சி என்பதால் பதிந்து போனதோ; அல்லது இந் நிகழ்ச்சி பற்றி மற்றவரிடம் பகிர்ந்து கொள்ள முடியாதபடி என் வாய்க்கு சதீஷ் பூட்டுப் போட்டதால் ஏற்பட்ட அழுத்தத்தின் விடுபடல் முயற்சி இப்படிக் காட்சியாக வெளிப்பட்டதோ...

மற்றவர்களிடம் இது பற்றிப் பேசிக்கொள்ளவில்லை என்றாலும் கூட சதீஷின் மனைவி ஷோபனாவிடம் இந்த விஷயத்தை மறைக்க வேண்டியிருக்கிறதே என்பதில் எனக்கு வருத்தம் இருக்கத்தான் செய்தது.

சதீஷ் இதைப் பற்றி ஷோபனாவிடம் சொல்லிவிட வேண்டாம் என்று கையைப் பிடித்துக் கெஞ்சாத குறையாக மன்றாடினான் அன்று.

அலுவலகம் போக எங்கள் இருவரில் யாராவது ஒருவர்தான் காரினை எடுப்பது வழக்கம். பதினைந்து கிலோ மீட்டர் பயணம், எங்கள் நட்பின் நெருக்கம் காரணமாக பேசிக்கொண்டே



செல்வதில் அலுப்பைத் தருவதில்லை.

ஒரு வாரம் நான் என்னுடைய காரில் அவன் வீடு சென்று அவனையும் ஏற்றிக் கொண்டு பயணப்படுவதும் மறுவாரம் அவன் தன்னுடைய காரில் என் வீடு வந்து என்னை ஏற்றிக் கொண்டு செல்வதும் வாடிக்கை.

அன்று நாங்கள் அவனுடைய காரில் அலுவலம் போய்க் கொண்டிருந்தோம்.

"என்ன சதீஷ்? இன்னும் எத்தனை நாளுக்கு கேன்டீன் சாப்பாடு? மேடம் என்னிக்கு வர்றாங்க?"

"நாளை சாயங்காலம் வந்திடுவா. நிஜமாகவே வீடு ரொம்ப வெறிச்சோடி இருக்குப்பா. அவளும் பிள்ளைகளும் வந்தாத்தான் நிறையும்னு நினைக்கிறேன்."

சிரித்தேன்.

பந்தம்

இதே சதீஷ், அவர்கள் வீட்டில் இருக்கும்போது டீ.வியில் விரும்பிய சேனல் பார்க்க முடியாதபோது 'சே, உன்னைப் போல பிரமச்சாரியா இல்லாமல் போனேனே, சரியான ஜெயில் பிழைப்புடா, ஒரு விஷயத்திலும் சுதந்திரமா இருக்க முடியறதில்லை' என்று அவர்கள் முன்னிலையிலேயே புலம்புவது ஞாபகம் வந்தது.

இந்த தனிமைப் புலம்பலையும் ஷோபனா வந்தவுடன் சொல்ல வேண்டும்.

வீட்டில் ஒற்றைப் பிறவியான எனக்கு தங்கை என்று ஒருத்தி இருந்தால் எப்படி இருக்க வேண்டும் என்றொரு ஐடியல் கற்பனை உண்டோ அது அச்சு அசலாய்ப் பொருந்தியவள் ஷோபனா.

என்னிடம் அவள் காட்டும் அன்பு, நம்பிக்கையின் பாற்பட்ட நிலையைத் தொட்ட ஒன்று.

ஒரு பெண்ணுக்கும் அவளுடைய கணவனின் நண்பனுக்கும் ஏற்படுகின்ற நட்புணர்வு வித்தியாசமான ஒன்று. பல படிகள்- நிலைகள் உள்ள உறவு அது. முதலில் அறிமுகம் என்பதில் தொடங்கி, கணவன் அவனைப் பற்றிச் சொல்கிற வார்த்தைகளால் அவன் குறித்து ஒரு பிம்பத்தை ஏற்படுத்திக் கொண்டு, பின் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவனைப் பற்றி அறிய வருகிற விஷயங்களை வைத்து, அந்த பிம்பத்தில் திருத்தங்கள் செய்து, சொந்தமாக ஒரு முடிவுக்கு வந்த பிறகு, அந்த நட்புறவு நம்பிக்கை என்கிற தளத்தைத் தொடுகிறது.



மிகக் குறைவான ஓரிரு நண்பர்களால் மட்டுமே அத்தகைய நிலையை அடைய முடிகிறது.

ஷோபனா விஷயத்தில் நான் அந்த நிலையை அடைந்திருந்தேன்.

சில சமயங்களில் சதீஷ் மீது அவள் நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வரும் போதெல்லாம் என்னுடைய கருத்துதான் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவரும்.

"நீ எப்பவும் அவள் சப்போர்ட்டுதான்" என்பான் சதீஷ் போலியாகக் குறை

பெ. நாயகி

பட்டுக் கொள்ளும் குரலில்.

"அவங்க கொடுக்கற காபிக்காகவே நான் என்ன வேண்டுமானாலும் செய்தாக வேண் டும். அதை தினமும் குடிக்கிற நீ எப்படி அவங்களை எதிர்த்துப் பேச முடியுது?"

"அப்படிப் போடு அரிவாளை. இந்த ஐஸுக்காகவே இன்றைய நைட் டிபன் இங்கே உனக்கு ஏற்பாடாயிடுமே" என்று சிரிப்பான் சதீஷ்.

"ஆமாம் சதீஷ்! எனக்கும் கூட மேடத் தின் காபி குடிச்சு ரொம்ப நாளான மாதிரி இருக்கு" என்றேன்.

விரைந்து கொண்டிருந்த கார் டிராபிக் ஜாம் ஒன்றில் நின்றது.

இரண்டு பக்கமும் நீளமான வாகன வரிசைகள் மெல்ல ஊர்ந்து கொண்டிருந் தன.

செக்யூரிட்டி செக்கிங் என்று ஒவ்வொரு வாகனமாக அதிகாரிகள் சோதனையிட்டுக் கொண்டிருந்தார்கள். எங்கள் காரையும் பார்த்த அதிகாரி டிக்கியையும் திறந்து காட்டிடுங்க என்றார். இருவரும் இறங்கிப் போய் டிக்கி திறக்க, உள்ளே இருந்து பளிச் சென்று தாவியது அந்தப் பூனை. எதிர்ச் சாரியில் மெல்ல ஊர்ந்து கொண்டிருந்த அந்தப் பெரிய டிரக்கின் பின் புற இரட் டைச் சக்கரத்தின் அடியில் நேராகப் போய் விழுந்த மாத்திரத்தில் கூழாகி விட்டிருந்தது.

அதிர்ந்து போனேன்.

"ஐயோ" என்று கத்தியவனாகத் தலை யில் கை வைத்தான் சதீஷ்.

டிக்கியில் ஒன்றுமில்லை என்று சமா தானம் அடைந்த அதிகாரி எங்களைப் போகச் சொல்ல, "ஸ்வீட்டி எப்படிடா காருக்குள் வந்தது?" என்று கேட்டேன் காரில் ஏறியபடி.

"தப்புப் பண்ணிட்டேன். நான்தான் அதை டிக்கியில் வைத்தேன். மறந்தே போனேன்..." என்று சலித்துக் கொண்டான். தொடர்ந்து "ஷோபனாவுக்கு நான் என்ன பதில் சொல்வேன்" என்று புலம்ப ஆரம் பித்தான்.

அவனைத் தேற்றி விஷயத்தைக் கேட்டறிந்தேன். ஷோபனாவின் செல்லப் பிராணியான இந்த ஸ்வீட்டியை சதீஷுக்கு எப்போதுமே பிடிக்காது. அவளுக்காக சகித் துக் கொண்டிருப்பவன். இப்போது அவள் ஊருக்குப் போயிருக்கும் சமயம் இதையும் பராமரிக்கும் பொறுப்பு இருந்திருக்கிறது. கூடியவரை ஒழுங்காக பால், சாப்பாடு என்று கொடுத்து வந்திருக்கிறான். கடந்த இரண்டு நாட்களாக அந்தப் பூனை உடல் நலக் குறைவினாலோ கொழுப்பேறிப் போனதாலோ வீட்டிற்குள்ளேயே கழிந்து வைத்து அசிங்கம் செய்திருக்கிறது. எரிச் சலின் உச்சத்தில் அதனை எங்காவது கொண்டு விட்டுவிட எண்ணி, புறப்படும் சமயத்தில் காரின் டிக்கியில் போட்டிருக் கிறான்.

இப்போது இப்படி ஒரு முடிவு வரும் என்று யார் எதிர்பார்த்தார்கள்?

அதன் மீதான பரிதாப உணர்வு வடிந்த மறுகணமே அவனுக்கு ஷோபனா குறித்த பயம் ஆட்கொண்டது.

"வந்ததும் இதைத்தான் தேடுவா. எங் கேயோ ஓடிப்போச்சுன்னு சொன்னா நம்ப மாட்டா. அது சாப்பிடவே மாட்டேன் னுடுச்சு. அதனால எங்க ஆபீஸ் கேன்டீன்ல கொண்டு விட்டுட்டேன். அங்கே எலி, நான்வெஜ் எல்லாம் கிடைக்கறதால சந்தோ ஷமா இருக்குன்னு சொல்லிடப்போறேன்" என்றான் ஒரு முடிவுடன்.

எனக்கு அந்தப் பொய்யில் உடன் பாடில்லை. நடந்ததைச் சொல்லி விட்டால் பத்து நிமிடத்தில தெளிவு வந்து விடும். பொய் வேண்டாமே என்றேன். பூனையை வெளியே கொண்டு போன ஐடியாவுக்கும் அஜாக்கிரதையாய் டிக்கி திறந்த தவறுக்கும் வேண்டுமானால் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிப் பார்த் தேன்.

சதீஷ் கேட்கவில்லை. "அவள் நம்ப மாட்டாள். கேன்டீன் கதை தான் பெட்டர். அதிலும் என் வார்த்தைகளை விட நீ சொன்னால்தான் நம்புவா. தயவு செஞ்சு

மனிதனுக்கு முந்தி...

ஆப்பிரிக்காவில் உள்ள எதியோப்பியா பகுதியில் ஒரு மாபெரும் புதையல் கிடைத்திருக்கிறது. தங்க நாணயமோ, செப்புக் காசுகளோ இல்லை. உலகின் மாபெரும் விஞ்ஞானிகளும் "அட அந்த இணைக்கும் பாலத்திற்கு விடை கிடைத்து விட்டதா?" என்று மகிழ்ச்சியும் வியப்பும் அடையும்படியான ஒரு கண்டுபிடிப்பு.

அதென்ன இணைக்கும் பாலம்? இரண்டு கால்களால் மட்டுமே நடந்த



ஓர் உயிரினத்தின் மண்டையோடு அங்கே அகப்பட்டிருக்கிறது! அதாவது, நான்கு கால்களாலும் நடந்த குரங்கிற்கும், இரண்டு கால்களால் நடக்கும் மனிதனுக்கும் இடையே ஓர் உயிரினம் இருந்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் பல காலமாகக் கருதி வந்திருக்கிறார்கள். அதற்குத்தான் விடை கிடைத்திருக்கிறது.

இருபத்து ஐந்து லட்சம் வருடங்களுக்கு முன் வாழ்ந்ததாக நம்பப்படும் இந்த இரண்டு கால் குரங்கின் மூளை அளவு 450 கன சென்டிமீட்டர்தான். (மனித மூளை – 1400 கன சென்டிமீட்டர்). இது போன்று ஒன்றல்ல, மூன்று ஒரே மாதிரி மிருகங்களின் மண்டையோடுகள் கிடைத்துள்ளன.

மனிதனின் பரிணாம வளர்ச்சி தொடர்பான கண்டுபிடிப்புகளில் மிக முக்கியமானது இது என்று கருதுகிறார்கள். — ஜி.எஸ்.எஸ்.

என் வீட்டு அமைதியைக் கெடுத்து சத்தியம் காக்க முயற்சி பண்ணாதே ஸ்வாமி..'' என்றான் கெஞ்சலும் எச்சரிக்கையுமாக.

மறுநாள் ஷோபனா ஊரிலிருந்து வந்து சேர்ந்த பத்தாவது நிமிடம் என் வீட்டுக்கு போன் வந்தது. ஸ்வீட்டி பற்றிய விசாரிப்பு. அது பத்திரமாக இருக்கிறது என்று நான் சொன்னதுதான் ஷோபனாவை சமாதானப் படுத்தியது.

அதன்பிறகு நான் அவர்கள் வீட்டுக்குப் போகும் போதெல்லாம் 'ஸ்வீட்டியைப் பார்த்திங்களா? எப்படி இருக்கு? திருப்பி எடுத்திட்டு வந்திடுங்களேன்' என்று தவறாமல் சொல்ல ஆரம்பித்தாள் ஷோபனா.

"எதுக்குங்க? இங்கே வந்து நீங்க போடற சைவ சாப்பாட்டை அது சாப்பிடும்னு எனக்கு நம்பிக்கை இல்லை. அது பாட்டுக்கு அங்கேயே ஜாலியா இருக்கட்டுமே" என்று பதில் சொல்லும்போது கூனிக் குறுகிக் கூசியிருக்கிறேன்.

இருபது நாட்கள் போயிருக்கும்.

வழக்கம்போல் அவர்கள் வீட்டுக்குப் போனபோது ஷோபனாவின் முகத்தில் எப்போதும் இல்லாத ஓர் இறுக்கம் இருந்தது. இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவள் என்னைப் பார்த்த மாத்திரத்தில் இறுகிப் போனது மாதிரி இருந்தது.

''என்ன மேடம், சௌக்கியமா?'' என்றேன்.

''ம்'' என்றபடி சட்டென்று உள்ளே போனாள்.

"என்னாச்சு சதீஷ்? மேடத்துக்கு மூடு சரியில்லையா?"

அவன் அலட்சியமாகப் புன்னகைத்தபடி 'ஸ்வீட்டி செத்துப் போன விஷயத்தைச் சொல்லிட்டேன்' என்றான் சாதாரணமாக.

எனக்குள் பரவிய உணர்வுக்குப் பெயர் தெரியவில்லை.

"எப்போ?"

"நேத்து."

"என்னிடம் சொல்லவே இல்லை நீ" என்றேன் எனக்கே கேட்காத குரலில்.

ஷோபனா காபிக் கோப்பையுடன் வந்தாள். என் எதிரே வைத்து விட்டு நகரப் போனாள்.

"மேடம். ரொம்ப சாரி. உங்ககிட்ட பொய் சொல்ற மாதிரி ஆயிடுச்சு..." என்று இழுத்தேன்.

''ஹூம். இது மாதிரி எத்தனை பொய்களோ..." என்று விருட்டென்று உள் அறைக்குள் போய் விட்டாள்.

வெலவெலத்துப் போய் நான் சதீஷைப் பார்க்க, அவன் புன்னகை மாறாத முகத்துடன் "எல்லாம் சரியாயிடும். என் கிட்ட நல்லாத்தான் பேசிட்டிருந்தா. நீ காபியைக்குடி." என்றான் டி.வி. ரிமோட்டுடன் விளையாடியபடி.

என்னால் காபியைக் குடிக்க முடியவில்லை.

என்னையும் கூட்டாளியாக்கி நீ கட்டிய பொய் மாளிகையைக் கலைப்பதாக இருந்தால் அதையும் என்னைக் கலந்து கொண்டு செய்ய வேண்டும் என்கிற கடமை உணர்வு கூட உனக்குத் தோன்றவில்லையா சதீஷ் என்று கேட்க முடியவில்லை.

கைகள் நடுங்கின. கண்கள் காரணம் அறியாமல் பொங்கின. உள்ளுக்குள் ஏதோ பொசுங்கிய வாசனையை உணர்ந்தேன். ●

சென்னை தியாகராய நகரில் ஒரு நாள் திடீர்ப் பிள்ளையார் தோன்றிவிட்டார்! மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று வழிபட ஆரம்பித்து விட்டார்கள். உண்டியல் கட்டி வசூல் கூடச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்! அந்த இடமோ முஸ்லிம்கள் தர்காவோ மசூதியோ கட்டுவதற்காக வைத்திருந்த இடம்.

அப்போதுதான் அண்ணா மறைந்து, கலைஞர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருந்தார். 67-ல் நடந்த தேர்தலில், அண்ணா-ராஜாஜி கூட்டணிக்கு எதிராகப் பிரசாரம் செய்து, காமராஜருக்கு ஆதரவாகப் பெரியார் வாக்களிக்கச் சொல்லியிருந்தார். என்றாலும் அண்ணா ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்குவது, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகை காட்டுவது, சத்தம் போடாமல் அரசு அலுவலகங்களில் வைக்கப்பட்டிருந்த கடவுள் படங்களை அகற்றுவது போன்றவற்றைச் செய்து கொண்டிருந்ததால், அண்ணாவின் ஆட்சி முறையைப் பெரியார் ஆதரிக்க ஆரம்பித்தார்.



பிரச்னைகளைப் பெரியார் அணுகிய விதம்!

அண்ணாவுக்குப் பிறகு பொறுப்பேற்ற கலைஞரும் அதே பாணியில் ஆட்சி செய்வார் என்று பெரியார் நம்பினார். அதனால் கலைஞரின் ஆட்சிக்கு எந்தவிதமான ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்று விரும்பினார்.

அப்போது தஞ்சை மாவட்டத்திலுள்ள விடயபுரத்தில் பெரியாரின் பயிற்சி முகாம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்குள்ள ஐயர் ஒருவரின் மாந்தோப்பில்தான் பயிற்சியளித்துக் கொண்டிருந்தார் பெரியார்! அந்தச் சமயத்தில்தான் திடீர்ப் பிள்ளையார் பற்றிய செய்தி பெரியாருக்குக் கிடைத்தது.

"சுயம்புவாகக் கடவுள் தோன்றுவாரா?" என்று காஞ்சிப் பெரியவ(மகா சுவாமிகள்)ரிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்க, அதற்குப் பெரியவர், "தோன்றுவார்!" என்று பதில் சொல்லியிருக்கிறார். இதை அன்றைய தினசரிகளில் தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்திருந்தார்கள். அதைப் படித்த பெரியார், பதறிப் போய்விட்டார்.

"கடவுள் சுயம்புவாத் தோன்றுவாருன்னு இந்த நேரத்தில் போய் பெரியவர் இப்படிச் சொல்லியிருக்கறாரே. என்ன இது... பெரியவர் இப்படிப் பண்ணிட்டாரே! நான் என்ன பண்ணப் போறேன்..." என்று அவர் அமைதியில்லாமல் தவித்தார்.



பேராசிரியர் பெரியார்தாசன்

அதாவது, திடீர்ப் பிள்ளையார் தோன்றிய சமயம், காஞ்சிப் பெரியவர் ''கடவுள் சுயம்புவாகத் தோன்றுவார்!'' என்று சொல்லியிருக்கிறார். திடீர்ப் பிள்ளையார் தோன்றிய இடம் முஸ்லிம்களுக்குச் சொந்தமானது. அதனால் இந்து-முஸ்லிம் கலவரம் ஏற்பட்டுவிடும் என்று பெரியார் பயந்தார்.

மகாத்மா காந்தி சுடப்பட்டபோது, அவரை ஒரு முஸ்லிம்தான் சுட்டுக் கொன்றுவிட்டான் என்று ஒரு வதந்தி பரவ, வடமாநிலங்களில் கலவரம் மூண்டது. அது தமிழகத்திலும் பரவிவிடக் கூடாது என்பதற்காகப் பெரியார் தாமாகவே வானொலி நிலையத்துக்குச் சென்று "மகாத்மா காந்தியைச் சுட்டது முஸ்லிம் அல்ல. கோட்சே என்பவன் தான் சுட்டுவிட்டான்!" என்று அறிவித்தாராம். அப்போது தவிர்க்கப்பட்ட ஒரு கலவரம் இப்போது நடந்து விடுமோ என்கிற பயம்தான் பெரியாருக்கு.

செய்தியைப் படித்தவுடனே திருச்சிக்குக் கிளம்பினார் பெரியார். இராமன் இருக்கிற இடம்தானே சீதைக்கு அயோத்தி! நாங்களும் திருச்சிக்குப் புறப்பட்டோம். பதற்றமான பெரியாரை தி.பொ.வேதாசலம், திருச்சி டி.டி. வீரப்பா போன்றவர்கள் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அன்று மாலை மூன்று மணிக்குப் பத்திரிகையாளர் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார் பெரியார். அப்போதுதான் "கடவுளை உண்டாக்கியவன் ('உண்டாக்கியவன்' என்றுதான் பெரியார் சொன்னார். கற்பித்தவன் என்று அவர் சொல்லவில்லை) முட்டாள்; கடவுளைப் பரப்புகிறவன் அயோக்கியன்; கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி. தமிழ்ப் பெருமக்களெல்லாம் இதைக் கல்வெட்டாக தெருவுக்குத் தெரு வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்!'' என்றார் பெரியார்.

இதைக் கேட்டதும் பத்திரிகையாளர்கள் சிரித்தார்களே தவிர, குறிப்பெடுத்துக் கொள்ளவேயில்லை.

"இல்லீங்கய்யா. ஒரு விஷயத்துக்காகத் தான் சொல்றேன். இதை அப்படியே போடுங்க. ஈ.வே. ராமசாமி சொன்னார்னு போடுங்க!" என்று பத்திரிகையாளர்களிடம் வலியுறுத்திச் சொன்னார் பெரியார்.

இப்படிச் சொல்லி முடித்துப் பத்திரிகையாளர்களை அனுப்பிய பிறகுதான், அதுவரை பதற்றத்தோடு காணப்பட்ட பெரியார் அமைதியானார். அமைதி என்றால் எதுவுமே நடக்காததுபோல் அப்படியோர் அமைதி அவரிடம்.

''ஆஸ்திகப் பெருமக்களுக்கு ஒரு வேண்டுகோள்!'' என்கிற தலைப்பில் மறுநாள் எல்லா தினசரிகளிலும் காஞ்சி பெரியவரின் வேண்டுகோள் வந்திருந்தது.

அதில் ''கடவுளை உண்டாக்கியவன் அறிவாளி; கடவுளைப் பரப்புகிறவன் யோக்கியன்; கடவுளை வணங்குகிறவன் நாகரிகமானவன்!'' என்று எல்லா இடங்களிலும் கல்வெட்டு வைக்குமாறு காஞ்சி பெரியவர் வேண்டுகோள் விடுத்திருப்பதாகப் பிரகரித்திருந்தார்கள்.

எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருந்த இதைப் படித்த பெரியாருக்கு ஒரே சந்தோஷம்.

உடனே அன்றைய முதல்வர் கலைஞருக்கு ட்ரங்கால் போட்டுப் பேசினார். ''ஐயா! கடவுள் உண்டாக்கப்பட்டவர் தான்கிறதை சங்கராச்சாரியாரே ஒத்துக்கிட்டாரே. அதனால அந்தப் பிள்ளையார் சிலையை முதல்ல தூக்கிப் போடுங்க. ஜனங்களை நான் பார்த்துக்கறேன். இனி கலவரம் எதுவும் வராது. ரொம்ப சந்தோஷம்!'' என்று உற்சாகமாகப் பேசினார்.

அன்று மாலையே திடீர்ப் பிள்ளையார் அப்புறப்படுத்தப்பட்டு, பிரச்னை சுமுகமாகத் தீர்ந்தது. பெரியாரும் அந்த விஷயத்தை அதோடு விட்டுவிட்டார். மறுபடியும் அவர் அந்த வாசகங்களை உபயோகப்படுத்தவேயில்லை; பிறர்தான் அதைப் பிடித்துக் கொண்டார்கள்.

பிரச்னைக்கு ஒரு முடிவு கண்டுவிட்டார் பெரியார். அவ்வளவுதானே தவிர, யாரையும் புண்படுத்தும் நோக்கத்தில் அவர் அந்த வாசகங்களைச் சொல்லவேயில்லை!

பெரியாரின் பயிற்சி முகாம்கள் என்பது படைப்புக் கடவுளை மறுக்கச் சொல்லுகிற முகாம் மட்டுமல்ல; மானுடம் தழுவிய பரந்த மனப்பான்மையை வளர்க்கிற முகாம் கூட என்றே சொல்ல வேண்டும். அடேயப்பா! அந்த அனுபவம்...

(தொடரும்)

இரண்டாம் பிறை

விஜய் டிவியில் திங்கள் தோறும் இரவு 9.00 மணிக்கு. ஃபேவரைட் டெலிவிஷன் தயாரித்து வழங்கும் 'இரண்டாம் பிறை' என்ற புதிய 52 வாரத் தொடர் ஜனவரி 24 முதல் ஒளிபரப்பாக உள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஜெயசித்ரா முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரத்தில் இத்தொடரில் தோன்றுகிறார். அவருடன் நடிகை கஸ்தூரி, விஜய் ஆதிராஜ் மற்றும் கே.எஸ்.ஜி. வெங்கடேஷ் நடிப்பில் வெளிவரும் பரபரப்பான தொடர் இரண்டாம் பிறை.



கணவனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஜமீனின் வாரிசான தனது எட்டு வயது மகன் முத்தரசுவிற்கு, ஏழைத் தொழிலாளியின் ஐந்து வயது மகளை மணமுடிக்கிறார் முத்து நாச்சியார். விடுதலையடைந்த ஜமீந்தார் அத் தொழிலாளியின் குடும்பத்தை குடிசையுடன் தீக்கிரையாக்குகிறார். ஆனால் அந்த சிறுமி மட்டும் தப்பி வேறொரு இடத்தில் வளர்கிறாள். பல ஆண்டுகளுக்குப் பின்னர் படிப்பு முடித்து வெளிநாட்டில் இருந்து திரும்பும் முத்தரசிற்கு தீக்கிரையான குடிசையின் உருவம் அடிக்கடி நினைவில் வந்து துன்புறுத்துகிறது. உண்மையறிந்த முத்தரசு, அப்பெண்ணை தேடி அலைகிறான். அவனது முயற்சிக்கு தடைகள் உண்டு பண்ணுகிறார் முத்து நாச்சியார். முடிவு சின்னத் திரையில்.

இத் தொடரினை எம்.எம். ரங்கசாமி இயக்கியுள்ளார்.

vijay

புதுமை என்றென்றும்

விஜய் டி.வியில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் இரவு 9.00 மணிக்கு

முதல் மழைத்துளி

வைதேகி வந்திருந்தாள். வைத்திய நாதனின் தம்பி மகள். ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறாளாம். அது விஷயமாக வரப் போகிறேன், பெரியப்பா என்று எழுதினாள். அதுக்கென்ன, பேஷாக வாயேன் என்றார் வைத்தியநாதன். பாரதியிடமும், 'உன் தங்கை, வர்றாளாம். ஒன்றிரண்டு மாதம் தங்குவாளா இருக்கும்' என்றார்.

வைதேகியைச் சின்ன வயதில் பார்த்தது. எந்நேரமும், துறுதுறுவென்று இருப்பாள். நிறையக் கேள்விகள் அவள் மனசுக்குள். இவ்வளவு பெரிய கடல் நீர் குடிநீராக இருந்தால் எத்தனை சௌகர்யம்? ஏன் உப்புக் கரிக்க வேண்டும்? ஒரே மண்ணில் இருந்து கனகாம்பரமும், ரோஜாவும் வருகிறது. கனகாம்பரம் வாசனை இல்லாமலும், ரோஜா வாசனையோடும் இருக்க வேண்டிய அவசியம் அல்லது அவசியம் இன்மைக்கு என்ன காரணம்? பதில் சொல்ல முடிகிற கேள்விகள்தான். என்றாலும், பதில்களை ஒப்புக் கொள்ளாத, அவைகளிலும் கேள்வி கேட்கிற சுபாவம் வைதேகிக்கு. கைகள் அனாவசியமாக ஏன் தொங்கிக்கொண்டேயிருக்க வேண்டும் என்று ஒருமுறை வைதேகி, பாரதியைக் கேட்டாள்.

"சுருட்டியா வைச்சுக்க முடியும்டி. தொங்கிட்டு இருந்தாத்தான், தேவையான போது பயன்படும். கீழே தடுக்கி விழறாய் என்று வை. தொங்குகிற கை, சட்டுனு, தரையைத் தாங்கிக்கும். அது இல்லாதபடிக்கு, சுருட்டியிருந்தா மூக்கில்லையா உடையும்?"

ஆனால், வைதேகி நிம்மதி அடைய மாட்டாள். "கடவுள் இன்னும் கொஞ்சம் கூட யோசித்திருக்கலாம். என்ன அவசரம் அவருக்கு?" என்பாள்.

தெருவில் யானை வருகிற, ஒரு மதிய வேளையில், வைதேகி வந்து சேர்ந்தாள்.

"ஹை யானை" என்றாள்.

நிறையப் பெட்டிகள், புத்தகங்கள் என்று பார்சல்கள் கொண்டு வந்தாள். "அக்கா... அப்படியே இருக்கியே..." என்றாள்.

"நான் அப்படித்தான் இருப்பேன். நீதான் குழந்தை. சீக்கிரம், சீக்கிரம் வளர்ந்துடறே?"

குழந்தை சந்தியா, வெட்கப்பட்டுக் கொண்டு, அம்மாவின் பின்புறத்தில் மறைந்து கொண்டு நின்றாள்.

"உனக்கென்னடி வெட்கம். அக்காதானே நான்?" என்றாள் வைதேகி, சந்தியாவைப் பார்த்து.

"நிறைய வளர்ந்துட்டேடி..." என்று மனம் நிறையச் சொன்னாள் பாரதி தங்கையைப் பார்த்து.

"இது போதாதுக்கா. வானத்தை முட்டிக்கிட்டு நான் நிக்கணும். அதுதான் என் ஆசை."

"பார்க்கச் சகிக்காது."

"எனக்கு மேல மேகம் இருக்கும். அல்லது எதுவுமே இல்லாத வெளி இருக்கும். அது என்னை ரசிக்கும்."

வைதேகியைப் பிடித்தது, பாரதிக்கு. பிரம்மராட்சஸாக வளர்வது என்பார்களே, அது இதுதான் போலும். கல்வியும், ஞானமும், அவை தொடர்பாக ஏற்படும் தன்னம்பிக்கையும் இதுதான் போலும்.

"குளிக்கத் தண்ணி போடட்டுமா?"

"வெந்நீரா? நோ. உங்க கடவுள் எதற்காக 'கூல்' பண்ணி தண்ணியை அனுப்பிச்சார்? அதுதான் இந்தியனுக்கு லாயக்குன்னுதானே! அந்த 'லா'சை எதுக்கு நாம் மீறணும்?"

பச்சைத் தண்ணியில், கிணற்றிலிருந்து மொண்டு விட்டுக் கொண்டு குளித்தாள். சூரிதாரை விட்டுப் புடைவை கட்டிக் கொண்டாள். அதற்குள் வீடு திரும்பியிருந்த

17



பெரியப்பாவை நமஸ்காரம் செய்து கொண்டாள். பெட்டியைத் திறந்து, பெரியப்பாவுக்கு வேஷ்டி, துண்டு, சட்டைக்கான துணி, பாரதிக்குப் புடைவை, ஜாக்கெட் துண்டு, சந்தியாவுக்கு டிரெஸ் என்று எடுத்து வழங்கினாள்.

"இது என்னத்துக்கு வீண் செலவு, வைதேகி?'' என்ற பாரதிக்கு அவள் சொன்னாள்.

''செலவுல செலவுதான் இருக்கு. வீண் செலவுன்னு ஒன்றும் இல்லை. அன்பை எப்படி



யும் தெரிவிச்சுக்கலாம். அதுல இது ஒண்ணு."

சாயங்காலம் வந்ததும், பெரியப்பாவைப் பாடச் சொல்லிக் கேட்டாள்.

"உனக்குச் சங்கீதம் வருமோ?"

"சங்கீதம் எல்லாரிடமும் வரும். சில பேர் அதை வாங்கி வைத்துக் கொள்றாங்க. சில பேர், போக விட்டுட்டுப் புரியலைங்கறாங்க. எனக்குச் சங்கீதம் புரியுது. ஒலிதானே, பெரியப்பா, சங்கீதம்? அதை இட்டு நிரப்புற வேலைதானே, வார்த்தைச் சேர்க்கை?"

"பேஷ்."

வைத்தியநாதன் பாடினார்.

பெண் சுலபமாகப் பாட வேண்டும் என்பதற்காகப் பாரதி பாட்டு ஒன்றைப் பாடினார். 'திக்குத் தெரியாத காட்டில்...'

கேட்டு விட்டுச் சொன்னாள் வைதேகி.

"ரொம்ப பொருத்தமான டியூன், பெரியப்பா. குறிப்பா,

'அண்ணா, உனதடியில் வீழ்வேன் –
எனை
அஞ்சக் கொடுமை சொல்ல வேண்டா
– பிறன்
கண்ணாலஞ் செய்துவிட்ட பெண்ணை
– உன்றன்
*கண்ணாற் பார்த்திடவும் தகுமோ?'*ன்னு பாடின அந்த இடம் ரொம்ப அழகு. அந்தச் சமயத்துல அந்தப் பொண்ணு, எப்படி அழுது கதறி இருப்பாளோ, அந்தச் சோகம், துக்கம், கதறல், பாட்டுல வெளிப்படணும். அதுதானே ரசம். எனக்கு, பரிபாலயாவிலே கிடைக்கிறது. ராமநாதன், பரிபாலயா, பரிபாலயான்னு உருகறப்போ, உண்மையாவே பரிபாலனம் பண்றவன், கண் முன்னே நிக்கறா மாதிரியிருக்கு, பெரியப்பா."

"பேஷ். எம்.டி.ஆர். சங்கீதம் ரொம்ப உசந்த சங்கீதம். திருநாகேஸ்வரம் நெசவு அது. பரவாயில்லையே. மீனுக்குப் பட்டும் போட்டுக்கிற தலைமுறையில இந்த வார்த்தையைக் கேட்க சந்தோஷமாயிருக்கு."

"அப்படியில்லை பெரியப்பா. இந்த தலைமுறைக்கும் சஞ்சய் சுப்ரமணியமும், ஜெயஸ்ரீயும் இருக்கத்தானே செய்றாங்க. எனக்கு பாம்பே ஜெயஸ்ரீ பாட்டு ரொம்ப இஷ்டம். என்னமோ, அந்தம்மா குரல்ல இருக்க தங்க இழை ரொம்பப் பிடிக்குது."

"பலே பலே. ரொம்பச் சந்தோஷமா இருக்கு. என் மகளுக்கு இத்தனை ருசி எப்படி வந்துச்சு?"

"போங்க பெரியப்பா... கிண்டல் பண்றீங்க? அப்புறம் பாரதி அக்கா பாட்டு எனக்கு ரொம்பப் பிடிக்கும். அக்கா பாட்டுல இருக்கிற முதல் பலம், பாவம். சங்கீதத்துல ஸ்வரம் பாடுற ஸ்டண்ட் எனக்குப் பிடிக்கிறதில்லை. ஸ்வரம் பாடறது, தப்பு இல்லை. ஆனா குஸ்தி போட்டுக்கிறது எனக்குப் பிடிக்கிறதில்லை. அக்கா பாட்டுல, எனக்குப் பிடிக்கிற அம்சம், அவங்க ஆலாபனை. ராகம் உருப்பெற்றது அந்தச் சந்தர்ப்பத்துலதானே? பல்லவி, அனுபல்லவி, சரணம்கிறதெல்லாம், சட்டை, வாட்ச், அலங்காரம், வளையல், ஜிமிக்கி சமாச்சாரம். உடம்பும் உயிரும் சங்கீதத்துல, ஆதி ஓசைதான். எல்லா ஓசையும், அந்த ஒற்றை சப்தத்துல அடங்கிடுது."

"அதுதான் ஓம்."

கேட்கக் கேட்கப் பிரமிப்பாக இருந்தது, பாரதிக்கு. ஆனால், வைதேகிக்கு ஆச்சர்யம், செங்கேணிதான். அவள் பிறந்த இடம், கற்பூரம் மாதிரி லபக்கென்று பற்றிக் கொண்டு எரியும் அவள் புத்தி, கற்றுக் கொள்வதில் அவளுக்கு இருக்கும் ஆர்வம் எல்லாம் அற்புதமாக இருந்தது, அவளுக்கு.

"எனக்கே ஆச்சர்யமா இருந்துதடி" என்றாள் பாரதி.

"எனக்கும்தான் அக்கா. கலை எந்த மனுஷனுக்கும் சாத்தியம்தான் என்கிறது நிருபணம் ஆகிறது இல்லையா? இதுதான் சத்தியம். எம்.பி. சீனிவாசன், நகரசபைப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை வச்சுக்கிட்டு இசை நிகழ்த்தினாரே, அப்போதே நிருபணம் ஆயிட்டது."

"இப்ப இவதாண்டி என் ஒரே மாணவி. இவ தோள்லதான் என்னை நான் இறக்கி வைச்சுக்கிட்டு இருக்கேன்..."

வைதேகிக்கு, நிறைய ஆய்வு வேலைகள் இருந்தன. தென்னிந்திய தெய்வப் படிமங்கள் தோற்ற வித்தியாசம். காரணம், நோக்கம் என்பது அவளது தலைப்பாக இருந்தது.

"என்னடி இதுல உன் ஆராய்ச்சி?"

"பிள்ளையாருக்கு யானைத் தலை. காலைத் தூக்கி நின்றாடும் சிவன், படுத்துக்கிட்டு இருக்கிற விஷ்ணு, மயிலாசன முருகன், நாக்கைத் துருத்திக்கிட்டு நிக்கிற துர்க்கை. இதுகளுக்கெல்லாம் இப்படி விசித்திரமான உருவம் என்னத்துக்குங்கிறதுதான் என் ஆராய்ச்சி!"

"அதுதான் புராணத்துல இருக்கேடி."

"புராணத்துல இருக்கிறது, பௌராணிகருக்குத்தான் பொருந்தும். நமக்குத் தேவை, அதுகளோட தத்துவம். இதுக்குப் பின்னணியில, என்ன சமூகச் சூழல் இருக்குன்னு

தேடணும்."

"மதக்காரர்கள் தப்பா நினைப்பாங்களோ? நீ பயப்படாதே."

"பயமா, எனக்கா? ஒருக்காலும் இல்லை. உண்மையான மதக்காரனுக்குக் கடவுள் போதும்கா. இந்த அடிதடி எரிப்பு வேலைல இறங்கறவன் சண்டைக்காரர்கள். தத்துவ வாதி வேற. சித்தாந்தி வேற. தெருவில விசில் அடிச்சுட்டு இந்தப் படை போதுமான்னு கேக்கறானே அவனுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை. நம்ம மதத் தலைவர்கள், அரசியல்காரர்கள் இந்தக் கூட்டத்தைப் பிடிச்சுப் பாக்கெட்டுல போட்டுக்கத்தான் ஆசைப் படறாங்க. அதுதான் பிரச்னை."

மறுநாள் புறப்பட்டுப் போனான். இரவு ஊர் அடங்கிய பிறகு வந்தான். அர்த்தராத்திரியில் பேச வேண்டாம் என்று மறுநாள் காலையில் பாரதி கேட்டாள்.

"யாராவது ஆம்பிளையைத் துணைக்கு அனுப்பட்டுமா?"

"ஆம்பிளையா? என்னத்துக்கு?"

"ஒரு பாதுகாப்புக்குத்தான்."

"என்ன பாதுகாப்பு. எதுக்குப் பாதுகாப்பு?"

"என்ன தெரியாதது மாதிரி பேசுறே? சின்ன வயசுப் பொண்ணு."

"என்னை என் சம்மதம் இல்லாமல் யாரும் ஒன்றும் செய்ய முடியாதுக்கா. நமக்கு நாம்தான் பாதுகாப்பே தவிர ஆண்கள் இல்லை."

தலைக்கு எண்ணெய் வைத்துக் கொண்டு ஊறட்டும் என்று இருந்தாள், வைதேகி.

"நேற்று என்ன பார்த்தே?"

"ஐயனார் சிலையை, குதிரையை, குதிரை பீடத்துக்குக் கீழே இருக்கும் வெள்ளைக்காரப் போலீஸ்காரரை, எல்லாம். அப்புறம் சின்னச் சின்ன டெர்ர கோட்டா பொம்மைகள்."

"என்ன தெரிஞ்சுது?"

"பிரும்மாண்டமான உருவத்தில் இருக்கிற கடவுள்கள். பெரும்பாலும் காவல் தெய்வங்கள். ஊருக்கு வெளியேதான் இதுகள் இருக்கு. ஊருக்குள் புகுகிற துர் சக்திகளை விரட்டற தெய்வ சக்திகள் இவை."

"என்னத்துக்கு இந்த பிரும்மாண்டம்?"

"அது நம் கலாச்சாரம். பெரிய சக்திகள். பெரிசாத்தானே இருக்க முடியும்கிற கருத்துதான். ஆகிருதி, எப்போதுமே, சக்தியின் ஸ்தூல வடிவம். துஷ்ட சக்திகள் சின்னதுதன். அப்படின்னுதான் நினைக்கிறேன்."



"நீங்க உண்ணாவிரதத்தைக் கை விட என்ன காரணம்?"

"மூன்று பெண்களின் தாலி பாக்கியம் நிலைக்கணும்ங்கிற ஒரே காரணத்துக்காகத்தான்!"

— சீர்காழி வி. ரேவதி

"அதான் நம்ம கோவில் கோபுரம் கூட இவ்ளோ பெரிசுன்னு சொல்லிக் கேட்டிருக்கேன்."

"அதான். ஒருகாலத்துல, கோயில் கோபுரத்துக்கு மேலே, உசரமா, ஜனங்க வீடு கட்டிக்க மாட்டாங்க. ஏன்னா, கடவுள் வீட்டை விட நம் வீடு பெரிசா இருக்கக் கூடாதுங்கற பக்தியும், பண்பாடும்தான்."

"அழகான மரபு அது."

"இப்போ அது சாத்தியப்படாதுதான். அப்படி ஒரு காலத்துல நாம் இருந்தோம்கிற அறிவு நமக்கு வேணும். பழசை மறக்கிற இனம், பட்டழிஞ்சுடும்."

அன்று மாலை அக்காவைப் பாடச் சொல்லிக் கேட்டாள். அவள் பாடிய பாடல் ஒன்று வைதேகியைக் கவர்ந்தது. அதில், ஒரு சரணம்.

"சீறி கர்ஜிக்கும் சிங்கம் – அங்கு
சின்ன மான்கள் அஞ்சிப் பதுங்கும்
ஏறி மேல்வந்த மனிதவர்க்கம் – இதிலே
எங்கே புகுந்தது ஒடுக்கும் பழக்கம்?
தரையில் படுத் தூரும் பாம்பு – தவளை
தாவிக் குதித்து வாழும் இயல்பு
பேச்சில், செயலில் நல்ல பண்பு –
இருந்து
பெருமை செய்து வாழ்வதே மாண்பு..."

"யார் எழுதியது அக்கா இது?"

"என் சினேகிதர் ஒருத்தர். அரவிந்தன் என்பது அவர் பேர்."

"அவர் எழுதிய கவிதைகள் இருக்கா?"

"அவரையே பார்ப்போம்."

பார்த்தார்கள்.

(தொடரும்)

சினி ~~கோனார்~~ நோட்ஸ்

வினா – விடை பகுதி

வினா : ''அன்னை'' படத்தின் டைரக்டர் யார்?

விடை : டைட்டில்ஸ் தவறாக இருக்க வாய்ப்பில்லை – ஆகையால் மனோபாலா தான்.

வினா : ''அன்னை'' கதைச் சுருக்கம் வரைக.

விடை : பிஸினஸ் புலிகள் நாசர் – பானுப்ரியா திருமணமான நான்காம் ஆண்டே தங்களுக்குக் குழந்தை பிறக்காது என்று முடிவு செய்து, ஒவ்வொரு வருடமும் ஒரு மாதத்திற்கு மட்டும் ஓர் அனாதைக் குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்கிறார்கள். (பெர்மனெண்ட்டாக எடுத்துக் கொள்ள முடியாத அளவு பிஸியாம்). முடிவு செய்த முகூர்த்தம், பானுப்ரியா உண்டாகி வளை அடுக்கிக் கொள்கிறார். விபத்தில் நாசரும் கருவில் இருக்கும் குழந்தையும் பலியாக, விதவையான பானுப்ரியா, "ஒரு மாதம் தத்து எடுத்தல் ஸ்கீம்"ற்கே போய் விடுகிறார். அப்படி வரும் ஒரு குழந்தை, பானுப்ரியாவின் மனத்தை மாற்றி, அனாதைக் குழந்தைகளுக்கென்றே தம் வாழ்க்கையை அர்ப்பணிக்கும் அளவிற்கு அவரது வாழ்க்கையை திசை திருப்பி விடுகின்றது.

வினா : "ப்ளாஷ்பேக்" குறிப்பு எழுதுக.

விடை : நீளமான வசனமாகச் சொன்னால் போரடிக்குமோ என்று தோன்றும், நடந்து முடிந்து விட்ட ஒரு விஷயத்தை விஷுவலாகக் காட்டுவது. ''தீபாவளி அன்னிக்கு இந்தக் குழந்தையை அனாதை ஆசிரம வாசலில் கண்டு எடுத்தேன்'' என்பதைப் போல ஒரு வரி ஒண்ணே கால் வரிடயலாகிற்கு எல்லாம் தேவைப்படாத ஒன்று.

வினா : "பெற்றால்தானே தெரியும்... நீயெல்லாம் ஒரு மாதத்திற்கு கௌரவத் தாய் வேஷம் போடுகிறவள்தானே!'' – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

விடை : பீச்சில், குழந்தை காணாமல் போய் விடுகின்றது. பதறிக் கொண்டு தேடுகிறார் பானுப்ரியா. அவரோடு சேர்ந்து தேடும் முயற்சியில் உடனே இறங்காமல், குழந்தையின் மேல் உயிரையே வைத்திருப்பதாகப் பீற்றிக் கொள்ளும் மோஸஸ் தாத்தா, நீட்டி முழக்கிக் கொண்டு லெக்சர் அடித்து நம் வயிற்றெரிச்சலை ஹோல்சேலாகக் கொட்டிக் கொள்ளும் வரிகள்.

வினா : ''அபத்தங்கள்'' – நான்கு உதாரணங்கள்



மட்டுமே கூறவும்.

விடை : அ) குழந்தையின் பெற்றோர் கவனத்தைக் கவர நியூஸ் பேப்பர் விளம்பரம் எல்லாம் தடபுடலாகக் கொடுத்து முடித்து விட்ட பிறகு, பானுப்ரியா வெகு சிரத்தையாக குழந்தையின் பிறப்பைப் பற்றி, அனாதை ஆசிரமத்தின் "ஆல்-இன்-ஆல்-அழகுராஜா" மோஸஸ் தாத்தாவை விசாரிப்பது அப-உ-!.

ஆ) கதையின் வில்லன்கள் எல்லோரும் சொல்லி வைத்தாற்போல ஒரே ரெஸ்டாரண்ட்டில் சந்திப்பது. அந்த ரெஸ்டாரண்ட்டே ஏதோ ''வில்லன்கள் காங்கிரஸ் 2000'' ஒன்று நடத்துவதற்கு அழைப்பு



'அன்னை' -சினிமா விமர்சனம்

விடுத்ததோ என்று நமக்குத் தோன்றுவது அப-உ-2.

இ) பானுப்ரியா வீட்டு பார்ட்டியில், பெரிய ஃப்ராக்ச்சராக இருக்குமோ என்று பயப்படும் அளவிற்கு படிக்கட்டிலிருந்து கீழே விழுந்த பெண்ணை எல்லோரும் பொடிநடையாக நடக்க வைத்து வண்டிக்கு அழைத்துச் செல்வது அப-உ-3.

ஈ) குழந்தைக்காக சென்னையில் செட்டிலாகி விடுவது என்று முடிவு செய்கின்ற பானுப்ரியா, யாரையோ ஃபோனில் அழைத்து, "மிஸ்டர் விவேக், என் பிஸினஸை எல்லாம் லண்டனிலிருந்து சென்னைக்கு மாத்திடுங்க" என்று கட்டளையிடுவது, ஏதோ, சமையற்காரியிடம், "மத்தியானம் பீன்ஸ் சாம்பார் வெச்சிடு" என்று சொல்வதைப் போல் இருக்கிறது.

வினா : "வேஸ்ட்" ஆகிப் போன நல்ல விஷயங்கள் என நீங்கள் கருதுபவை எவை?

விடை : பானுப்ரியாவின் டபுள் ரிஃபைன்டு ஆக்டிங்

ரமேஷ் கண்ணா - அண்ட் கோவின் சென்ஸிபிள் காமெடி

நாசரின் "பங்க்-கெட்-அப்"ம் "பஞ்ச்" நடிப்பும் (எ.கா. : பானுப்ரியா மயக்கம் போட்டவுடன் அவர் காண்பிக்கும் டென்ஷன்)

பணத்தை மட்டுமே எதிர்பார்த்து வந்த குழந்தையின் பெற்றோர்கள், பானுப்ரியா, குழந்தையை அழைத்துக் கொண்டு போகலாம் என்று சொன்னவுடன் சப்ஜாடாக ஷாக் ஆகி அவரிடம் செம டோஸ் வாங்கிக் கொண்டு போகும் ஸீன், மனோபாலாதான் டைரக்டர் என்று ஞாபகப்படுத்தும் ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணு ஸீன்.

வினா : இதுவரை பதில்களையே தந்த நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகள் யாவை?

விடை : குழந்தை - பானுப்ரியா நெருக்கம் தான் படத்தின் அஸ்திவாரம். அப்படியிருக்கும் போது அந்த நெருக்கம் உண்டாவதையும் அதிகரிப்பதையும் இன்னும் நாலு மடங்கு ஆழமாகக் காண்பிக்க வேண்டாமா?

முக்கியமான ரோலில் ஒரு குழந்தையை நடிக்க வைக்கும் போது, அது இன்னும் சுட்டிகையாகவும் அதனுடைய டயலாக் டெலிவரி இன்னும் உணர்ச்சிபூர்வமாகவும் இருக்க வேண்டாமா?

முடிவில், குழந்தையை ஒரேயடியாக தத்து எடுத்துக் கொள்ள பானுப்ரியாவிற்கு ஆசை வந்து விடுகிறது. குழந்தையும் போய்த் தான் ஆக வேண்டும் என்று சொல்லவில்லை. பின் ஏன் இருவரையும் பிரித்துத் தொலைக்கிறார்கள்?

தத்து எடுத்துக் கொள்வது என்பது ஒரு உன்னதமான விஷயம்.

குழந்தை வளர்ப்பதில் உள்ள உழைப்பு, பொறுப்பு, கவலை இவை மூன்றும் பலன் தரும் போது ஏற்படும் மகிழ்ச்சி - இதை எல்லாம் அனுபவிக்க ஆசைப்படுவதுதான் குழந்தையைத் தத்து எடுப்பதன் லாஜிக். பொம்மையையும், ஐஸ்கிரீமையும் வாங்கிக் கொடுத்து, பீச், பார்க் என்று குழந்தையோடு சுற்றுவது, அதுவும் வருடத்தில் ஒரு மாதத்திற்கு என்று சொல்லி, அதற்கு "தத்து எடுத்துக் கொள்வது" என்று வேறு நாசர் நாமகரணம் சூட்டுவது சுத்த அரைவேக்காட்டுத்தனமாகத் தோன்றவில்லையா டைரக்டர் ஸார்?

— கிருஷ்ணா சிதம்பரம்

அக்னிசர்மா பக்கம்


பிப்ரவரி 23 முதல் 29 வரை






மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

அலைச்சலைத் தவிர்க்க முடியாதுங்க. மனசுல ஒரு குழப்பமும் கவலையும் எப்பவும் இருக்கும். போதாக்குறைக்கு உடம்பும் படுத்தும். இப்ப எந்த விஷயத்துல நீங்க தீர யோசிக்காம இறங்கறீங்களோ, அது கண்டிப்பா காலை வாரி விட்டுடும். வீடு, வாகனம், நகை வாங்கறதுக்கு இது உகந்த நேரம் இல்லை. தாய் வழில யாருக்காவது உடல்நலக் கோளாறு ஏற்படலாம். வெளியூர் பயணங்களைத் தவிர்க்கறது ரொம்ப நல்லது.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க திட்டங்களெல்லாம் சிறப்பா இருக்கு. கவனமா அடியெடுத்து வெச்சா வெற்றி நிச்சயம். இந்த வாரம் சில புதிய தொடர்புகள் ஏற்படும். உங்க தொழில் வளர்ச்சிக்கு அது உபயோகமா இருக்கும். பணப் பிரச்னை இருக்காது. ஆனா, செலவுகள் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு ஆதாயமான வாரம் இது. அரசியல்வாதிகளுக்கும் விஞ்ஞானிகளுக்கும் தொழில் முறைல சில சங்கடங்கள் ஏற்படறதைத் தவிர்க்க முடியாம போகலாம்.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமா இருக்கு. வீடு, மனை வாங்கறதோ, புதிய தொழில் தொடங்கறதோ, செய்துக்கிட்டிருக்கற தொழிலை விரிவாக்கறதோ – இப்ப செய்தா நல்ல பலனிருக்கும். பண உதவிகள், கேட்ட இடத்துல கிடைக்கும். குறிப்பா, வங்கி லோனுக்காகக் காத்திருக்கறவங்களுக்கு இப்ப அது கனிஞ்சி வரும். வயசானவங்களுக்கும் பிள்ளைங்க மூலமா சில சுபச் செய்திகள் காதுல விழும். சிலருக்கு பணி இடமாறுதல் இருக்கும்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

நிதானம்தான் இப்ப உங்க ஆபரணமா இருக்கணும். பதற்றத்துல ஏதாவது பேசி, உளறிக் கொட்டி மாட்டிக்காம இருங்க. எதிரிகள் பலமா இருக்காங்க. பொருளாதார ரீதியிலேயும் செயல் திறனிலேயும் கொஞ்சம் நீங்க இப்ப பின் தங்கியிருப்பீங்க. காரணம், அவசரப்பட்டுச் செய்த சில காரியங்கள் விபரீதமானதுதான். கடன் வாங்காதீங்க. வெளியூர்ப் பயணங்களோ, சாகசச் செயல்களோ இப்ப வேணாம். நிதிநிலைமை சீரா இருக்கறவங்க கொஞ்சம் தருமம் பண்ணினா ரொம்ப நல்லது.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


சுயபலம் கூடியிருக்கும். மிக முக்கியமான ஒரு காரியத்தை இப்ப திறமையா செய்து முடிக்கறது மூலம் உங்க எதிர்காலத்துக்கு பலமான அஸ்திவாரம் போடுவீங்க. வெளிநாட்டு வேலை வாய்ப்பு சிலருக்கு இருக்கும். கடல் வாணிபம் செய்யறவங்க– மீனவர்களுக்கு இது ஆதாயமான காலகட்டம். கலைத்துறையினருக்கும் பெண்களுக்கும் போட்டிகள் உண்டுன்னாலும் எதிலும் முன்னேற்றம் தான். உணவுக் கட்டுப்பாடு மட்டும் இப்ப ரொம்ப அவசியம்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

தடைகள் நிறைய இருக்கும். அதேசமயம் எப்படியும் முயன்று வெற்றியடைஞ்சிடுவீங்க. பெற்றோர் மூலம் சில அனுகூலங்களை எதிர்பார்க்கலாம். சிலருக்குப் பிதுரார்ஜித சொத்து ஏதாவது கிடைக்கலாம். மாணவர்களுக்குப் படிப்புல நல்ல வளர்ச்சி தென்படும். காவல், சட்டத்

துறையினருக்கு வருமானம் கூடும். கல்யாணம் மாதிரி ஏதாவது விசேஷம் வீட்டுல நடக்கலாம். இரவுப் பயணங்களை கூடியவரை தவிர்க்கறது நல்லது.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

எதிர்பாராத இன்ப அதிர்ச்சிகளுக்குத் தயாரா இருங்க. பிரமோஷன், வெளிநாடு சான்ஸ், கலைத்துறையினர்களுக்கு விருது, பட்டங்கள் ஏதாவது ஒண்ணு நிச்சயம் இருக்கும். பெண்களுக்குத் திருமண யோகம் கூடி வரும். சிலருக்கு வீடு கட்டற யோகம் இருக்கும். டூ வீலர் பயணம் மட்டும் இப்ப வேணாம். பெற்றோர் அல்லது பிற உறவினர்கள் மூலம் ஏதாவது லாபம் கிடைக்கற மாதிரியான விஷயங்கள் நிகழும். விளையாட்டுத் துறையினருக்கு வெற்றி வாய்ப்புகள் பிரகாசமா இருக்கு.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

பராக்கிரமம் வெளிப்படற நேரம். முக்கிய பதவிகள், பொறுப்புகள் வந்து சேரும். குறிப்பா கணிதம் சம்பந்தமான துறைல இருக்கறவங்களுக்கு நேரம் நல்லா கூடி வருது. சிலருக்கு வெளிநாட்டு அழைப்புகளோ, வெளியூர் மாறுதலோ கூட இருக்கலாம். பிளாட், டூவீலர்னு ஏதாவது வாங்குவீங்க. முதலீடுகள் நல்ல லாபம் தர்ற நேரம் இது. குடும்பத்துலயும் சில சுபகாரியங்கள் நடக்கும். குழந்தை பாக்கியம் சிலருக்கு உண்டாகும். வருமானம் அமர்க்களமா கூடும்.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

சாமர்த்தியமா செயல்படறது மூலம் சில சாதனைகள் செய்யப் போறீங்க. ஆபீஸ்ல உங்க பணி அத்தியாவசியமானதுன்னு பிறர் உணரும்படியா நடந்துப்பீங்க. இது மூலம் சில லாபங்கள் கிடைக்கும். எதிர்பார்த்த பதவி உயர்வுகள் வந்து சேரும். பெற்றோர் வழில சில சொத்துகள் கிடைக்கலாம். கணிதம், விஞ்ஞானத் துறையினருக்கு ஏறுமுகமான கால கட்டம். எழுத்தாளர்கள் வெற்றிப் பாதைல பவனி வருவாங்க.



மீன ராசிக்காரரான கமல்ஹாசன் வீட்டில் மகிழ்ச்சி தாண்டவமாடுமாம்! ஆனாலும் நெடுநேரம் கண்விழிக்கறதைத் தவிர்க்கணுமாம்!

பெண்களுக்குப் புதிய நகை யோகம் இருக்கும்.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

எதிர்ப்புகள் இருக்கும். சமாளிக்கிற மனோபலமும் அதிகரிக்கும். கடன் தொல்லையால அவஸ்தைப்படறவங்களுக்கு இப்ப விடிவு பிறக்கும். பெற்றோர் உடல் நலன்ல அக்கறை காட்டறது அவசியம். வீட்டுச் செலவு கூடிட்டே போகுதேன்னு அத்தியாவசிய செலவுகளைக் குறைக்கப் பார்க்காதீங்க. ஆடம்பரங்களைத் தவிர்க்கலாமே? சிலருக்குப் பணியிடத்துல சில பிரச்னைகள் வரலாம். உத்தியோக மாறுதலையும் எதிர்பார்க்கலாம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

ஜாலியா உல்லாச உலாவெல்லாம் போகப் போறீங்க. கொஞ்சம் உடம்பைப் பார்த்துக்கங்க. சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் உருவாகி, வீட்டில் கஷ்டங்கள் தலையெடுக்கலாம். ஆபீஸ்லேயும் சில பிரச்னைகள் வரும். ஆனா, சாமர்த்தியமா சமாளிப்பீங்க. பொருளாதார ரீதில பிரச்னை எதுவும் இருக்காது. ஆனா, செலவு கூடும். ஆன்மிக நாட்டமும் தியானம் மாதிரி விஷயங்கள்ல மனம் செல்வதும் நிகழும். மக்கள் நலனில் கவனம் முக்கியம்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

வளமான நேரம். உங்க நீண்ட நாள் கனவு ஒண்ணு நனவாகப் போகுது. பழைய கடன் பாக்கிகள் வந்து சேரும். வீட்டுல மகிழ்ச்சி தாண்டவமாடும். சிலர், ஆன்மிக சுற்றுலா போவாங்க. வேற சிலருக்கு வெளிநாடு சான்ஸ் கூட இருக்கும். உடல் நலத்துலயும் கொஞ்சம் கவனம் செலுத்துங்க. நேரம் தவறிச் சாப்பிடாதீங்க. ராத்திரி நெடு நேரம் கண் விழிக்கறதைத் தவிர்த்தே ஆகணும்! ●



• ராஜேஷ்கன்னா

● மும்பைவாசிகளிடம் 'கோவிந்தா' என்றால், அது இந்தி சினிமா நட்சத்தி ரத்தை மட்டும் குறிக்காது. காரணம், அந்தப் பெயரில், நூற்றுக்கு நூறு சைவ உணவகம் ஒன்றும் இயங்கி வருகிறது. இதனை நடத்து பவர்கள் இஸ்கான் இயக்கத்தினர். இங்கே எதிலுமே பூண்டும், வெங்காயமும் சேர்க் கப்படுவது இல்லை. அது மட்டுமல்லாமல், புகைபிடிக்க அனுமதியில்லை. வழக்கமான டீ, காப்பிக்கு பதிலாக மூலிகை டீதான்! இங்கே வழங்கப்படும் அனைத்துக்கும் 'கிருஷ் ணப் பிரசாதம்' என்ற பொதுப் பெயரும் உண்டு!

● நம் தபால் துறை இருபத்தி ஐந்து காசுக்கு விற்பனை செய்யும் சாதாரண தபால் கார்டை, போஸ்ட் செய்கிறபோது, அதனை உரிய விலாசதாரரிடம் கொண்டு போய்ச் சேர்க்கும் வகையில் அரசுக்கு ஏற் படும் செலவு எவ்வளவு தெரியுமா? மூன்று ரூபாய் முப்பத்து ஆறு காசு.

● ஐந்நூறு ரூபாய் நோட்டுகளைத் தடை செய்ய மத்திய அரசு உத்தேசித்துள்ளது என்ற தகவலை, ரிசர்வ் பாங்க் கவர்னர் பிமல் ஜலன் மறுத்திருக்கிறார். கள்ள ஐந்நூறு ரூபாய் நோட்டுகள் புழக்கத்துக்கு விடப்படுவதைத் தடுக்கக் கூடும் நடவடிக்கை எடுக்கப்படுவதால், அதனைத் தடைசெய்ய வேண்டிய அவசியமில்லையாம். புதிய எண் வரிசையில் புதிய ஐந்நூறு ரூபாய் நோட்டு கள் விரைவில் வெளியிடப்படவிருப்ப தாகவும் தெரிவித்திருக்கிறார்.

● சில வாரங்களுக்கு முன்பு, ராஜ்ய சபைக்கு சில காலி இடங்களை நிரப்பத் தேர்தல் நடந்தது இல்லையா? அப்போது சோனியாவிடமிருந்து, ஒரு காங்கிரஸ் புள்ளிக்கு, "பத்தரை மணிக்கு ரெடியாக இருங்கள்! வேட்புமனு தாக்கல் செய்ய வேண்டும்" என்று தகவல் வந்தது. அவரும் ஆர்வமாய்க் காத்திருந்தார். ஆனால் அதன் பின் ஒரு தகவலும் இல்லை. மனுஷர் ஏமாந்து போனார். "கடந்த தேர்தலின் போது, நூறு தொகுதிகளுக்கு மேல் சுற்றுப் பயணம் செய்து பிரசாரம் செய்தவன் நான்! எனக்கு உரிய மரியாதை தர கட்சி தவறி விட்டதே!" என்று புலம்பும் அவர், விரைவில் காவிக் கட்சிக்குப் போய் விடு வார் என்கிறது டெல்லி வட்டாரம். நொந்து போன அந்த நட்சத்திரம் : ராஜேஷ் கன்னா!

● இதுவரை அதிகபட்சமாக பதி னெட்டு தடவை பிலிம்பேர் விருது வாங்கி யவர் யார் தெரியுமா? கமல்தான்! ராஜ்கபூர் கூட பதினொரு தடவைதான் விருது பெற்றி ருக்கிறார். அதுபோல, இசையமைப்பாளர் களில் சாதனை படைத்திருப்பவர் நம் ஊர் ரஹ்மான்.

மூவி பார்க்கிறீர்களா

ரோஜாவில் தொடங்கி உயிரே வரை பத்துத் தடவை பிலிம்பேர் விருது பெற்றிருக்கிறார்.



• ரஹ்மான்

• அமிதாப் - ஜெயா



● வீடு புகுந்து நடைபெறும் திருட்டு களைப் பற்றி ஒரு திடுக்கிட வைக்கும் தகவலைச் சொல்லியுள்ளது டெல்லி போலீஸ். இந்த எச்சரிக்கை, ஏறத்தாழ எல்லா ஊர்களுக்குமே பொருந்தும். இத் தகைய திருட்டுகள், எல்லாரும் நினைத்துக் கொண்டு இருப்பது போல, நள்ளிரவுக்குப் பின், எல்லோரும் ஆழ்ந்து தூங்கிக் கொண் டிருக்கிறபோது நடப்பதில்லை. மாறாக, முன்னிரவில் எட்டு மணி முதல் பதினொரு மணிக்குள்ளாகவே நடக்கின்றன. வீட்டில் எல்லோரும் விழித்துக் கொண்டிருப்பார் களே! அப்புறம் திருட்டு எப்படி நடக்கும் என்று கேட்கிறீர்களா? வீட்டில் எல்லோரும் விழித்துக் கொண்டிருந்தாலும், அனை வரும் சுவாரசியமாக டீ.வி. முன்னால் மூழ்கிக்கிடப்பார்களே!

ஜோர்! இந்தியா.காம்

● பல்கர். இது மும்பை அருகில் உள்ள நகரம். இதற்கு ஒரு தனிராசி உண்டு. இங்கே வந்து சென்ற சிறிது காலத்துக்குள் ளேயே, மகாராஷ்டிர முதல்வர்களாக இருந்த அந்துலே, வசந்த தாதா பாட்டீல், எஸ்.பி. சவான், சுதாகர் ராவ் நாயக், மனோகர் ஜோஷி, நாராயண் ரானே அனைவரும், முதல்வர் பதவியை இழந்தனர். சமீபத்தில், தற்போதைய மராட்டிய முதல் வர் விலாஸ்ராவ் தேஷ்முக் பல்கருக்கு வந்து போயிருக்கிறார். எப்போது நாற்காலி காலி யாகப் போகிறதோ என்று விசனப்படுகிறது காங்கிரஸ் வட்டாரம்.

● பூனா நகரில் ஒரு நாடகப் போட்டி நடைபெற்றது. சுதந்தரப் போராட்டத்தைப் பற்றிய நாடகத்தை மேடையேற்றிய குழுவுக்குக் கேடயம் பரிசு கிடைத்தது. நாடகத்தைப் பார்த்த அனைவரும் ரொம்ப எமோஷனல் ஆகிவிட்டார்கள். நாடகத்தில் நடித்தவர்கள் அனைவரும் சுதந்தர இந்தி யாவில் பிறந்தவர்கள் என்பது மட்டுமில்லை. சுதந்தரப் போராட்டம் பற்றி நிறைய புத்த கங்களில் படித்தோ, சினிமா அல்லது டீ.வி. மூலமோ கூட அறிந்து கொள்ள முடியாத வர்கள். காரணம் : அவர்கள் அனைவருமே பூனாவிலுள்ள பார்வையற்றோர் பள்ளி யைச் சேர்ந்தவர்கள்.



• கமல்

● விமான கம்பெனி நடத்தி வரும், சஹாரா நிறுவனம், புதிய டெலிவிஷன் சானல் ஒன்றைத் துவக்கவிருக்கிறது. அதற்குப் பொறுப்பு ஏற்கப் போகிறவர் : ஜெயா பச் சன்!

— நியூஸ்வாலா

சுமி சூப்பர் மார்க்கெட்



திப்பு சுல்தானின் கனவுகள்

பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதிக்கு அவரோட 'ராமானுஜர்' நாடகத்துக்காக சரஸ்வதி சம்மான் அவார்ட் கிடைச்சிருக்கு. ஞானபீடத்தை விட இதுக்குப் பரிசுத் தொகை ஜாஸ்தின்னு நினைக்கறேன். அந்த வகையில இது லக்ஷ்மி சம்மான். எனிஹவ், எந்த கௌரவத்துக்கும் தகுதியான படைப்பு அது.

நாடகம் பார்க்கறதே காலாவதி ஆயிட்ட காலம் இது. இ.பா.வோட ஔரங்கசீப், ராமானுஜர் நாடக டெக்ஸ்டெல்லாம் படிக்கும்போதே பார்க்கற உணர்வைத் தரக்கூடியது.

படு சிம்பிளான டயலாக்ஸ்ல, நுணுக்கமான, தத்துவபூர்வமான விஷயங்களை எப்படிக் கன்வே பண்லாம்னு 'ராமானுஜர்' படிச்சா புரியும். பெரும்பாலும் மதவாதியாகவே அடையாளம் காட்டப்பட்டு வந்திருக்கற ராமானுஜரை ஒரு சமூக சீர்திருத்தவாதியா, சரியா அடையாளம் காட்டற படைப்பு அது. (தமிழ்ப் புத்தகாலயம் வெளியீடு)

கொஞ்ச நாள் முன்னால டெல்லி ஸ்கூல் ஆஃப் ட்ராமா ஸ்டுடன்ட்ஸ் இதை மியூசியம் தியேட்டர்ல நடிச்சிக் காட்டினப்ப, நான் அதுக்கும் போயிருந்தேன். பட், படிக்கறப்ப கிடைச்ச எஃபெக்டை அவங்களால விஷுவலா அத்தனை சிறப்பா கொண்டு வர முடியலை.

இப்ப, மறுபடி யாராவது டிரை பண்ணிப் பார்க்க இது ஒரு சந்தர்ப்பம்.

இன்னொரு கிரேட் ரைட்டரோட வானொலி நாடகத்தை மேடையேத்தற முயற்சி போன வாரம் நடந்தது. திப்பு சுல்தானுடைய இருநூறாவது நினைவு நாளையொட்டி கிரிஷ் கர்னாட் பி.பி.ஸி.க்காக எழுதின நாடகம் - டிரீம்ஸ் ஆஃப் திப்புசுல்தான். அதை மெட்ராஸ் ப்ளேயர்ஸ் மேடை நாடகமா தயாரிச்சு நடிச்சாங்க. ரொம்ப ஆத்மார்த்தமான முயற்சி. அதுல இரண்டு விஷயங்கள் எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது.

முதல்ல மொழிபெயர்ப்புன்றதே அணு அளவுக்கும் தெரியாத ஆங்கிலம். (கர்னாட் முதல்ல கன்னடத்துல எழுதிட்டு அப்புறம் தானே ஆங்கில வடிவம் கொடுத்துருக்கார்) இங்க்லிஷ் டிராமால நடிக்கறோம்ன்றதுக்காக ஸ்பெஷல் எஃபக்ட் கொடுத்து உச்சரிக்காம டயலாக்ஸை ரொம்ப ரொம்ப இயல்பா இந்தியத்தனமா பேசின நடிகர்கள்.



கிரிஷ் கர்னாட்

அஃப்கோர்ஸ், பல இடத்துல வசனங்கள் உலுக்கி எடுத்துடுச்சு. இத்தனைக்கும் கவிதை, அலங்காரம்னு எந்த மேக்-அப்பும் போடாத லாங்குவேஜ். ஆனா, எந்த சந்தர்ப்பத்திலே யார் பேசற எந்த வார்த்தைன்றதை வச்சு அதுக்கு ஒரு மதிப்பு உண்டாகுது இல்லியா?

உதாரணத்துக்கு ஒண்ணு சொல்றேன் : ப்ரிட்டிஷ்காரங்க திப்புகிட்டே இரண்டு பேரை பிணைக்கைதிகளா அனுப்பச் சொல்லி ஒப்பந்தம் போட்டுக்கறாங்க. தன் மகன்களையே அனுப்புறதுன்னு முடிவு செய்றார் மன்னர். இது தெரிஞ்சதும் மூத்தமகன் தான் பிணைக் கைதியாப் போகறதுக்கு முன் வரான். ஆனா அவன் முறை தவறி பிறந்தவன்றதால அவனுக்குப் போதுமான அந்தஸ்தில்லேன்னு பிரிட்டிஷ்காரங்க ஏற்க மறுக்கக் கூடும்ன்றதை எதிர் பார்த்து திப்பு ஏற்கெனவே மற்ற இரு மகன்களை அனுப்ப முடிவு செய்துடறார். அந்த விஷயம் தெரிஞ்சதும் மூத்த மகன் என்ன சொல்றான் தெரியுமா...? 'ஐயம் ஸாரி; ஐ

ஸ்போக் அவுட் அஃப் டர்ன்' - முறை தவறிப் பேசிட்டேன் மன்னிச்சுடுங்கன்றான். இதுல எவ்வளவு ஆழமான அர்த்தம்!

பிரிட்டிஷ்காரங்களை வெறுக்கற திப்பு, அவங்களோட தணியாத சாம்ராஜ்ய தாகத்துலயும் தன்னுடைய சொந்தக் கனவுகளோட பிரதிபலிப்பைப் பார்க்க முடியுதுன்னு கன்ஃபெஸ் பண்ற இடம்... காலாகாலத்துக்கும் மனுஷன் இப்படித்தான் என்கிற உணர்வை ஏற்படுத்தறது... இதெல்லாம்தான் சிரஞ்சீவி எழுத்தோட அடையாளம்றது சுமியோட திங்கிங்—


• இந்திரா பார்த்தசாரதி

நாடகம் முழுக்கவே திப்பு கண்ட கனவுகளும் அதெல்லாம் எப்படி நிஜமாச்சுன்றதும் மாறி மாறி வருது. கவித்துவமான அமானுஷ்யமும் கொடூரமான யதார்த்தமும் கனவாகவும் சரித்திரமாகவும் பின்னிப் பின்னி வர்றபோது ரொம்ப பிரமாதமாயிருக்கு.

மெட்ராஸ், ஒய்.எம்.சி.ஏ. ஓபன் தியேட்டர்ல (பொன்னியின் செல்வன் நாடகம் நடந்த இடம்) போட்டாங்க இந்த நாடகத்தை. இந்த மாதிரி நாடகமெல்லாம் அரங்கேற அரங்கேற மெருகும் ஏறும். ஆனா நம்ப ஆடியன்ஸ் ஆதரவு இருந்தாத்தானே அது நடக்கும்!

* * *

ஒரு 'சீஸன்' கவிதை :

ஒரே வீடு
குடிநீர்,
வடிகால் என இரண்டு வரிகள்.
கணக்கிட, பணம் கட்ட, ரசீது வெட்ட
மூன்று கௌண்ட்டர்கள்.
காசு, காசோலை தனித்தனியாக.
கடைசியில் இரண்டையும்
சேர்த்தே வாங்கிக் கொண்டார்கள்.
அங்கு கூட இல்லை
இரண்டுக்கும் வித்தியாசம்
முண்டியடித்தவனை
மண்டியிடவைக்கும்
மந்த கதியில்
தண்ணீராய்ப் பெருகிய வியர்வையை
வழித்துவிட்டு வீடு வந்தால்
வியர்க்கவில்லை; குழாயடியில்.
வருது பார், காத்து! காத்து!

விஜயராகவனோட இந்தக் கவிதை இப்ப எல்லா சென்னைவாசிகளுக்கும் ரொம்பப் பிடிக்கும்! பை த வே, உங்க வயித்தெரிச்சலைக் கொட்டிக்க எனக்கொரு சந்தர்ப்பம். எங்க ஏரியாவுல மட்டும் எப்படியோ ஆல்டர்நேட் டேஸ்ல ஒழுங்கா தண்ணி வந்துடுது.

* * *

சன் டீவி குழந்தைகள் நிகழ்ச்சில பழைய வசுந்தரா போய் இப்ப வேற ஒரு லேடி வந்திருக்காங்க.

தற்செயலா லாஸ்ட் வீக் பார்த்தப்ப ஒரு பொடியன் பிரமாதமா ஜிகினா டிரெஸ் எல்லாம் போட்டுக்கிட்டு மேஜிக் பண்ணிக் காட்டினான்.

லாலெல்லாம் ஸலாம் போட்டுடுவார்! அந்த மழலையும், கத்துக்கிட்ட வித்தை கசிஞ்சுடக் கூடாதேங்கற படபடப்பும் டயலாக் டெலிவரில தெரிஞ்ச மைல்ட் ஹ்யூமரஸ் டச்சும் - அப்படியே ஸ்கிரீனை விட்டுப் பிடுங்கி எடுத்துக் கொஞ்சணும் போல ஆயிடுச்சு.

திருவள்ளுவர், பாரதமாதா, கிருஷ்ணர், சரஸ்வதின்னு மாறுவேஷத்துல இருந்த குட்டீஸெல்லாம் ப்ரோக்ராம் முடியற போது ஒரு டப்பாங்குத்து ம்யூசிக்குக்குச் சேர்ந்து ஆடினதுதான் என்னவோ மாதிரியிருந்தது.

நல்லா ஞாபகம் இருக்கு எனக்கு. ஒரு அர்ஜுன் படத்துல தீவிரவாதிகள் கூடாரத்துல நடக்கற டான்ஸ் சீக்வென்ஸ் அது. (லட்சணம் எப்படி இருக்கும்னு தெரியாதா?)

தாடியைப் பிடிச்சிட்டுத் திருவள்ளுவர் குதிக்கறதும் கிரீடம் விழுந்துடாம பாரத மாதா ஆடறதும் சிரிப்பை மீறின எரிச்சல் தந்த விஷயங்கள்.

குழந்தைகள் ப்ரோக்ராம்ல இந்த கன்றாவியெல்லாம் எதுக்கு?

— சுமி



காதில் விழுந்தவை :

கலைஞர் கண்டுகொள்ள வேண்டும்!

• 'தமிழகம் முழுவதும் 400 கோடி செலவில் 106 பாலங்கள் கட்டுவதில் ஊழல்' என்று தமாகாவினர் சொல்ல, "இல்லையில்லை... மதிப்பீட்டுக்கும் குறைவாக டெண்டர் பெறப்பட்டு பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளதால் அரசுக்கு சேமிப்பு..." என்று நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மறுப்பறிக்கை விட, விவகாரத்தின் சூட்சுமம் பற்றி இப்போது நெடுஞ்சாலைத் துறை வட்டாரத்தில் அரசல்புரசலாக கிசுகிசுக்கப்படுகிறது. விஷயம் இதுதான். அரசின் எந்த ஒரு பணிக்கும் ஒரு மதிப்பீடு (estimate) தயார் செய்வார்கள். அந்த மதிப்பீடு தயார் செய்வதற்கு பெருதவியாகவும் அடிப்படையாகவும் விளங்குவது Schedule of Rates என்ற புத்தகம். இந்தப் புத்தகத்தில், கட்டுமானப் பொருள்களின் அங்கீகரிக்கப்பட்ட விலை மற்றும் கூலிப் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக தயாரிக்கப்படும் இந்த Schedule of Rates புத்தகத்தில், அந்த வருடத்தில் ஒரு மூட்டை சிமெண்ட், மணல் ஆகிய பொருள்கள் என்ன விலை என்பதைத் தவிர தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய தினக்கூலியும் குறிப்பிடப்பட்டிருக்கும். கட்டுமானத்திற்குத் தேவையான எல்லா பொருள்களின் விலையும் இதில் குறிக்கப்பட்டிருக்கும். வருடம் ஒருமுறை மாவட்ட அதிகாரிகளால் தயாரிக்கப்படுவதுதான் Schedule of Rates. அரசின் எந்த வேலைக்கான மதிப்பீடும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள விலைப் பட்டியல்படிதான் தயாரிக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? பாலங்களின் டிசைன், மதிப்பீடு தயார் செய்தல் ஆகியவை தனியார் கன்சல்டன்ஸி கையில் ஒப்படைக்கப்பட்டது. நல்ல விஷயம்! ஆனால் தனியார்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு, உள்ளூர் விலைப்பட்டியலை அடிப்படையாக வைத்துத் தயார் செய்யப்பட்டவையே தவிர Schedule of Rates ஐ அடிப்படையாக வைத்துத் தயார் செய்யப்பட்டவை அல்ல. உதாரணமாக ஒரு மூட்டை சிமெண்ட் விலை Schedule of Ratesல் உள்ளபடி 120 ரூபாய் என்றால் உள்ளூர் விலை 150 ரூபாயாக இருக்கலாம். பாலங்களை ஒப்பந்தம் எடுத்துள்ள காண்ட்ராக்டர்களுக்கு இந்த விவகாரம் தெரியுமாதலால் நஷ்டப்படாமல் டெண்டர் மலிவாகக் கேட்க முடிந்திருக்கிறது. ஷெட்யூல் அஃப் ரேட்ஸுக்கும் உள்ளூர் விலைக்கும் இடையேயான வித்தியாசம் முழுக்க லாபம்தானே! அந்த லாபத்தில் அரசியல்வாதிகளுக்கும் ஒரு பங்கு கொடுக்காமலா இருப்பார்கள்? என்று பேச்சு அடிபடுகிறது.

• இடைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு அரிசிக் கடத்தல் விவகாரம் விஸ்வரூபம் எடுக்கலாம் என்கிறார்கள். ரேஷன் அரிசி கடத்தல் கும்பல் ஒரு கட்டுக்கோப்பான நிர்வாகம் போல மாவட்டங்களில் திட்டமிட்டுச் செயலாற்றுகிறதாம். கட்சி பேதம் இல்லாமல் எல்லோரும் இதில் அங்கம்வகிக்கிறார்களாம். பெரும்பாலும் கேரளாவுக்குத்தான் கடத்தப்படுகிறதாம். வருடம் ஒன்றுக்கு சராசரியாக ஐந்து கோடி மதிப்புள்ள ரேஷன் அரிசி தமிழகத்திலிருந்து கடத்தப்படுகிறது என்கிறார்கள். 'தூத்துக்குடி' அரிசி கடத்தல் விவகாரத்தில் விசாரணை நடத்தும் காவல் துறையின் கரங்கள் ஓர் அமைச்சரின் உடன்பிறப்பு மற்றும் சில தமாகா. பிரமுகர்கள் வரை நீளலாம் என்கிறார்கள்.

• திருவாரூர் மாவட்டத்தில் கம்ப்யூட்டர் மென்பொருள்கள் வாங்கியதில் ஒரு சங்கடமான நிலையை கலெக்டர் உமா சங்கர் சந்தித்துக் கொண்டிருக்கிறார் என்று சில வாரங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் குறிப்பிட்டிருந்தோம் அல்லவா! அதன் பிறகு விவகாரம் சூடுபிடித்து பல பத்திரிகைகளில் இதுபற்றிய செய்தி வந்தது. உயரதிகாரிகளின் சூழ்ச்சிக்குப் பலியாக இருந்த உமாசங்கருக்கு உதவிக்கரம் நீட்ட முதல்வர் முடிவெடுத்திருக்கிறார் என்கிறது லேட்டஸ்ட்டான கோட்டைத் தகவல்.

— சஞ்சயன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka